





KALKI
22.12.85
ரூ 1.50






இசை விழா
சிறப்பிதழ்



கல்கி

புத்தாடை போல் வெண்மை !



சலவை தோறும் பொலிவு...சலவைக்கு சலவை...பவர் பேக்டு ஸர்ஃப் புத்தாடைபோல் வெண்மை பொலிய வெளுக்கிறது !


வெளுக்கும் ஒவ்வொரு சட்டைக்கும், ஒவ்வோர் ஆடைக்கும் வெண்மை மிடுக்கு, புதுமைக் கருக்கு-அளிக்குது பவர் பேக்டு ஸர்ஃப். அன்றன்றே வாங்கி அணிவது போல் என்றென்றும்...கோடித் துணிபோல் கோலப் புதுமை.

இதுவரை இல்லாத ஏற்றமான சக்தி செறிந்து வருகுது பவர் பேக்டு ஸர்ஃப்... பேராற்றல் மிகுந்தது. பேணிக் காப்பதில் உயர்ந்தது. ஆழ ஊடுருவித் துப்புரவாக்கும் சக்திபடைத்தது! அடைந்திராத அமோகமான நுரைவளம் மிகுந்தது.

விடாத அழுக்கையும் விரட்டியடிக்கும், வெண்மையினை வாழ்விக்கும், காலமெல்லாம் துணிப் புதுமை காக்கும்.

வெண்ணிறமோ, வர்ணமோ...விசேஷத் துணிகள், அன்றாடத் துணிகள் எல்லாமே ஒளிமிளிரும் ஒப்பற்ற வெள்ளைவெளேர்... ஸர்ஃப் சலவையிலே...நித்தமும் நிலைபெறுமே புத்தாடைக் களையுடனே.

சலவைப் பவுடர்கள் பலநூறு இருக்கலாம், ஆனால் உங்கள் குடும்பத் துணிகளுக்கு நம்பிக்கையானது ஸர்ஃப் ஒன்றுதான்... ஸர்ஃப் அன்றி வேறில்லை.



ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர், சகல துணிகளுக்கும் புதுமை ஜோர்!

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS SU 323 2517 TM

மீண்டும் பாக்யராஜ்:

"முள்ளான ஆசிரியருக்கு..."

இன்னும் அன்புடன் தராசுக்கும், முள்ளான ஆசிரியர் அவர்களுக்கும் வணக்கத்துடன் பாக்ய ராஜ் எழுதுவது:

'காக்காய் உட்காரப் பனம்பழம் விழுந்தக்க'—'தீபாவளியன்று' என்ற தவறான தங்கள் கேள்வி பதிலுக்கு மறுப்புக் கடிதம் எழுதப் போய், 'தீபாவளி என்று?' — என்ற தங்கள் சப்பைக் கட்டான பதிலைக் கண்டேன்.

ஒரு வரியில் வந்த தங்கள் பதிலுக்கு உண்மையான உணர்ச்சியுடன் எழுதிய என்து ஒன்பது வரிக் கடிதத்தை ஒரு முழுப்பக்க விளம்பரமாகப் பயன்படுத்திக் கொண்ட தங்கள் வியாபார புத்தி சாலித்தனத்தை மட்டுமே பாராட்டுகிறேன்.

இதையும்
மனசாட்சியுடன்
பிரசுரிக்குமாறு வேண்டி
என்றும் அன்புடன்,

உங்கள்,
பாக்யராஜ்.



என்றும் அன்புடன் பாக்யராஜுக்கு,

இந்த ஆசிரியர் முள்ளானவர் என்றால் இது முள்ளை எடுக்க உதவுகிற முள்தானே தவிர, குத்துகிற முள் அல்ல.

தீபாவளி என்று? என்பது சப்பைக் கட்டு அல்ல; தவறான கருத்தும் அல்ல. தீபாவளி அதிகாலை நாலு மணிக்கா மாப்பிள்ளை நம் வீட்டுக்கு வருகிறார்? முதல் நாளே வந்துவிடுவ தில்லையா? அன்றிரவு பட்டாசு சுட்டு மகிழ்வ தில்லையா? Eve of தீபாவளி, கிறிஸ்துமஸ் eve என்று நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? முதல் நாள் இரவு முதல்வர் படம் பார்த்த விவரம் தீபாவளியன்று நான் கேள்விப்பட்டு மனம் வருந்தினேன் என்று எழுதியதில் என்ன பிசகு?

தங்கள் கடிதமும் என் பதிலும் மீண்டும் முழுப்பக்கமாகி விட்டது! இது விளம்பரம் தேடிக் கொள்வதாகவோ வியாபாரத் தந்திர மாகவோ இருந்து இந்த இதழ் பத்துப் பிரதி களாவது கூடுதலாக விற்பனையானால் மகிழ் வேன். ஆனால் அப்படி நடப்பதில்லையே! மாருக லட்சக்கணக்கான எம். ஜி. ஆர். பக்தர்கள், பாக்யராஜ் விசிறிகள் ஆகியோ ரின் மனவருத்தத்தையல்லவா சம்பாதித்துக் கொள்கிறேன்! இதனால் பத்திரிகை விற்பனை பாதிக்கப்படுவது சாத்தியமே தவிர அதிக ரிக்க வழியில்லையே!

வியாபார நோக்கு பாக்யராஜுக்கு இல் லையா? எங்களுக்கும் இருக்கிறது; மறுக்க வில்லை. ஆனால் அந்த வியாபார நோக்கு ஆபாசத்தைக் காசாக்குவதாக இருந்துவிடக் கூடாது என்பதிலும் பத்திரிகை தர்மத்துக்கு உள்ளடங்கியதாக இருக்க வேண்டும் என்ப திலும் கவனமாக இருக்கிறோம்..


நாங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்துவது ஒன்றே. தனிப்பட்ட முறையில் எங்களுக்கு யாரிடமுமே காழ்ப்புணர்ச்சி இல்லை. முதல்வ ரானாலும் சரி, பாக்யராஜானாலும் சரி, எதிர்க் கட்சியினரானாலும் சரி, எங்களுக்கு அனைவ ரிடமும் சமமான அன்பு உண்டு. அந்த அன்பு காரணமாகவே நடக்கிற தவறுகளையும் குற்றங்களையும் சுட்டிக் காட்டுகிறோம். அது எங்கள் கடமை என்பதால் செய்கிறோமே தவிர செருக்கினால் அல்ல.

மன சாட்சிக்கு விரோதமாக என்றுமே நாங்கள் செயல்பட்டதில்லை.

இப்படிக்கு,

— ஆசிரியர்.

"இசை சரியானபடி அமைந்தால் வசனமே வேண்டாம்!"



/கே. பாலசந்தர்

பெரிய வரவேற்பறை. ஷோ கேஸ் நிறைய பரிசுக் கேடயங்கள். அலங்காரமான டீப்பாய். உட்கார்ந்தால் காணாமல் போக்கடிக்கும் சோஃபாக்கள், திண்டுகள். பிறந்த நாள் மெழுகுவர்த்திகள் போல் மேஜை மேல் நின்ற ஃபிலிம் ஃபேர் பரிசுப் பொம்மைகள்.

தம்பூரின் மௌனமான சுருதி ரீங்காரம் போல், அறைமுழுக்க நிரம்பியிருந்த ஊதுபத்தியின் மணம்.

மணிகளால் ஆன திரைச்சீலை கலகல என்று நகைக்க —

அவர் வருகிறார்.

"ஹலோ" என்று கையை நட்புடன் நீட்டுகிறார்.

'பாலச்சந்தரேதாண்டா டோய்' என்ற உணர்ச்சியை மறைத்துக் கொண்டு கைகுலுக்குகிறோம்.

"ஏன் பாலசந்தர் ஸார்? அன்னிக்கு அபூர்வராகங்கள், இன்னிக்குச் சிந்துபைரவி. மேடை சங்கீத வித்வானை மையமா வெச்சுப் பின்னிய கதை. இசைல உங்களுக்கு ஈடுபாடு அதிகமா?"

"என் படத்தில் இசைக்காக நான் நெறைய நேரம் ஒதுக்கறேன். பாடல்களுக்காக அதிகம் உழைக்கிறேன். என் படப் பாட்டு ஒண்ணும் சும்மா விளையாட்டா ஹிட்டாயிடலே. அதுக்குப் பின்னாலே எவ்வளவு உழைப்பு! ஏழு ஸ்வரங்கள் பாட்டையே எடுத்துக்குங்க. அதை சாதாரண ஒரு சினிமாப் பாட்டா ஒதுக்க முடியுமா? அந்தப் பாட்டுக்குள்ள எத்தனை விஷயம் இருக்கு? ஏழு ஸ்வரங்கள் பாடல் அந்தக் கதாநாயகியின் கதை!"

"உங்க படத்துக்கு இசை எவ்வளவு தூரம் உதவியா இருக்கு?"

"இசையைச் சரியானபடி உபயோகப் படுத்தினா, வசனமெல்லாங்கூட வேண்டாம். மியூஸிக் உணர்ச்சிகளை ரொம்பச் சுலபமா தூக்கிக் கொடுக்கும். ரீ-ரெகார்டிங்கே அதுக்காகத்தானே? காட்சியோட மூடை அப்படியே கொண்டு வரது மாத்திரமில்லே, இசை அந்தக் காட்சிக்கு ஓர் அழகையே சேர்த்துடும்."

"இதுக்கு உதாரணமா உங்க சிந்து பைரவியிலே...?"

"சொல்றேன் (கொஞ்சம் தூக்கலான குரலில்) சொல்றேன்.

"மேடையில ஜேகேபி பாடிட்டிருக்கான். ஆனா அவன் எதிர்பார்க்கிற சிந்து வரலே. அந்த எதிர்பார்ப்பு, ஏன் வரலேங்கற கவலே, ஏமாற்றம் எல்லாம் அவன் முகத்தில் மாறி... மாறி...

"பின்னணியில தனி ஆவர்த்தனம்.

"அதேசமயம் மிருதங்க வித்வானுக்கு சிந்துவுக்காக ரிசர்வ் பண்ணியிருக்கிற நாற்காலி காலியா இருக்கிறதைப் பார்த்து உள் மனசுல ஒரு சந்தோஷம். முதநா தான் திட்டினதால, அவ வரலேங்கற சின்ன கர்வம்.

"பின்னணியில அதே தனி ஆவர்த்தனம்.

"இப்ப டிரைவர் மேடையைத் தேடிட்டு வரான். அவன் ஏதோ கெட்ட சேதி கொண்டு வரான்னு பாக்கறவாளுக்குப் புரியுது. சேதி கேட்டதும் ஜேகேபி முகத்தில் ஷாக், துக்கம், அழுகை. ஆனா தடால் புடால்னு மியூஸிக் கை மாத்தலே.

"இந்த ஸீன்ல எத்தனை காரெக்டர்ஸ். எத்தனை உணர்ச்சிகள். எல்லாத்துக்கும் பொருத்தமா பின்னணில அந்த மிருதங்கம். அதைத்தூக்கிட்டா **Flat** – ஆ இருக்கும். அழுத்தம் இருக்காது. சாதாரண படங்கள்ல இத்தனை உணர்ச்சிகளுக்கும் வெவ்வேற இசை போட்டிருப்பாங்க. நான் வித்தியாசமா பண்ணினேன். இசையை நூதனமா பயன்படுத்திக்கிட்டேன். அந்தக் காட்சி ரொம்ப அழுத்தமா வந்திருக்கு...,"

"இசையைப் பின்னணியா வச்சு நெறைய படம் வந்தாச்சே. உங்க படத்தைப் பத்தி...,"

"என் படம் வித்தியாசமானது. சும்மா நாலு ஸீனுக்கொரு டுயட் பாடற படமில்லே. படத்தோட ஆரம்பத்திலேர்ந்து கடைசி வரைக்கும் ஒவ்வொரு ஸிச்சுவேஷன்லயும் இசையை எக்ஸ்ப்ளாயிட் பண்ணியிருக்கேன். சிந்துவைச் சந்திச்சப்புறம் மனைவியோட படுத்திருக்கறப்போ கூட அவன் சிந்துவை நினைக்கிறான். எவ்வளவு பெரிய துரோகம் இது? அது தெரியுது அவனுக்கு. அதனாலே மோகத்தைக் கொன்று விடுன்னு பாடறான். **Music plays its prominent part.** அதுமட்டுமில்லை. இதில வர காரெக்டர்லாம் பாருங்க. ஜட்ஜ் வீட்டு டிரைவரை எடுத்துக்குங்க. காமெடிக்கு நான் ஒரு பட்லரைப் போட்டுப் பக்கத்து வீட்டுப் பெண்ணை ஸைட் அடிக்கறான்னு ஸிச்சுவேஷன் போட்டுட்டுச் சுலபமாப் போயிருக்கலாம். ஆனா செய்யலே. அந்த டிரைவருக்குக் கூட சங்கீதம் பத்தித் தெரிஞ்சிருக்கு. இந்த மாதிரி பேட்டலா இந்தப் படத்தில மியூஸிக் ஐக்கியமாயிருக்கு..."

"இந்தப் படத்துக்கு இத்தனை வரவேற்பு இருக்கும்னு எதிர்பார்த்தீங்களா?"

"இதில நான் எடுத்துக்கிட்ட ரிஸ்க் பத்தி உங்களுக்குத் தெரியாது. சங்கீதம் பத்தின படம். ஆடியன்ஸ் எப்படி ரிஸீவ் பண்ணுவாங்கன்னு பயம் இருந்தது. 'நீ தயரதா'ன்னு பாடிட்டே இருந்தா, 'அட போய்யா'ன்னு ஒருநூறு பேர் எழுந்துட்டா அதோட ஆட்டம் க்ளோஸ். அங்கேயும் ஜனங்க உக்காரணும்.

"உங்ககிட்ட ஒரு விஷயத்தைச் சொல்றேன். ஏழாவது ரீல்ல, அதாவது படம் ஆரம்பிச்சு ஒண்ணு, ஒண்ணரை மணி நேரத்துக்கப்புறம் அந்த 'நீ தயராதா' ஸீன் இருந்தது. முதல்ல ஜேகேபி தெலுங்குக் கீர்த்தனையை முழுசாப் பாடினப்புறம்தான் சிந்து தமிழ்ல அதைப் பாடற மாதிரி ஷூட் பண்ணியிருந்தேன். ஆனா அப்புறம் தெலுங்குப் போர்ஷனை கட்

பண்ணிட்டேன்." உண்மைல ஜேஸுதாஸ் அந்தக் கீர்த்தனையை ரொம்ப அற்புதமாப் பாடியிருக்கார். அடடா, இவ்வளவு நல்லாப் பாடியிருக்காரே. அதை கட் பண்ணாம இருந்திருக்கலாமேன்னு கூட ஃபீல் பண்ணுவேன். கட் பண்ணதினால எட்டாயிர ரூபா வேஸ்ட். ஆனா படத்தோட நல்லதுக்குத்தானே செய்யறோம்னு நெனைச்சி விட்டுட வேண்டியது தான்.

"இசையைப் பயன்படுத்திக்கற படம் தான். ஆனா அதுவே ஓவராப் போயிடக் கூடாதுன்னு கவனமா இருந்தேன்."

"இந்தப் படத்துக்குக் குறிப்பிட்ட இசைக் கலைஞர் யாரையாவது மனசுல வச்சிக்கிட்டுக் கதையை அமைச்சீங்களா?"

ஒரு அழுத்தமான 'நோ' பதிலாக வருகிறது. அப்புறம்...

"இன்னிக்கு இருக்கற பாடகர்களை எடுத்துக்கங்க. பல பேர் மதுவுக்கு அடிமையானவங்கதான். இல்லேன்னா ஒரு பெண்ணோடை ஐக்கியமானவங்கதான். I do not say a passing affair. கலையை நேசிப்பதில் ஆரம்பித்து கலைஞனையே நேசிப்பது என்பது வாழ்க்கையில் நாம் அவ்வப்போது காண்கின்ற விஷயம்தான். ஊர் வம்பு இதுபற்றி விரசமாகக் கூடப் பேசும். ஆனால் என் படத்தில் நான் ரொம்ப டீஸண்டாத்தான் அதை எடுத்திருக்கேன். அவனுக்கு சங்கீதம் பத்தி நெறைய தெரிஞ்சிருக்கு. பாரதியார் சின்னஞ்சிறு கிளியேக்கு என்ன ராகம் போட்டார்னு சொல்றா. நீ தயராதாவைத் தமிழ்ப் படுத்திப் பாடறா. ராகங்களைப் பத்தி அவன் கூட டிஸ்கஸ் பண்றா. அவ இசையைப் பத்தி சொல்ல சொல்ல சொல்ல அவனுக்குள்ள ஒரு... ஒரு... ஒரு ஆவேசம் வருது. அப்படியே இழுத்துக் கட்டிப் பிடிச்சி ஒரு கிஸ் பண்ணினா என்னன்னு தோணுது. You understand my point? ஆனா கிஸ் கொடுக்காம மோதிரத்தைக் கழற்றிக் கொடுக்கறான்னு கண்ணியமா அந்த கேரக்டரை அமைச்சிருக்கேன்."

"அதே பாடகனைப் பின்னால கண்ணியக் குறைவா காமிச்சிருக்கீங்க. டப்பாங்குத்தே ஜாஸ்தி. அதிலயும் வேஷ்டி அவிழ்ந்து விழற அளவுக்குன்னு... இந்த ஸீன்ல பாடகனை மட்டுமில்லாம சங்கீதத்தையே நீங்க கேவலப் படுத்திட்ட மாதிரி இருக்கு."

"தட் ஈஸ் யுவர் ஒபீனியன்., இட் வாஸ் இன்டென்ஷனல். ஜேகேபி சங்கீத வித்வானாயிருந்தாலும் அடிப்படையில அவனும் ஒரு மனுஷன்தான். ஒரு மனுஷனுக்கு வரக்கூடிய கோபதாபங்கள் அவனுக்கும் வருது. இதெல்லாம் நிஜத்தில நடக்கறதுதான்.

"நம்ம கூட வாழற ஒரு ஜீனியஸ். அவர் பேரை நான் சொல்ல விரும்பலே. அந்த



சிவகுமார் பற்றி...

'என்ன இருந்தாலும், ஒரு சாஸ்திரீய பாடகருக்குண்டான 'கெத்து' கம்மிதான்'னு ஒரு பத்திரிகை சிவகுமாரை விமரிசனம் பண்ணியிருந்தது. சிவகுமார் உங்க எதிர்பார்ப்பைத் திருப்திப்படுத்தினாரா?

(ரொம்பக் கோபமாக)"தட் இஸ் அப்ஸொல்யூட்லி மீனிங்லெஸ். கெத்து – கெத்துன்னா என்ன அர்த்தம்? சங்கராபரணம் ஹீரோவுக்குத்தான் கெத்தா? நம்ப ஹீரோவுக்குக் கல்யாணம் ஆயிருக்கு. கொழந்தையே இல்ல. அப்படி ஒரு காரெக்டர் அது. கொஞ்சம் Middle aged man. சிவகுமார்தான் என் மனசில தோணினார். இப்படிப்பட்ட காரெக்டர் லைஃப்ல இன்னொரு ரசிகை குறுக்கிடறான்னு கொண்டு வந்தா கெத்து கம்மின்னா, இவரை விட வேற யார் பர்ஃபார்ம் பண்ணிடுவார்னு நெனைக்கறீங்க?

"சிவகுமாரைப் பொறுத்தவரைக்கும் என்ன சொல்லணும்னா... அவருடைய முழு ஈடுபாடு... ஹண்ட்ரட் பர்சன்ட் ஈடுபாடு... கதை சொல்லும்போதே, 'ஆஹா, இந்த ரோலை நல்லாப் பண்ணணும்னு' கதைக்குள்ள வந்துடறார் பாருங்க — சிவகுமார்கிட்ட அது எனக்கு ரொம்பப் பிடிச்சது.

"விசாகப்பட்டினத்தில ஷூட் பண்ணின எடத்தில அலை அடிச்ச வேகத்தில நீங்கள்லாம் உக்காந்திருக்கவே முடியாது. அதில உக்காந்து அலையால அறைபட்டு மூணு குட்டிக்கரணம் போட்டுக்கீழே விழுந்தாரு. உயிரைக்கொடுத்து நடிச்சிருக்கார்னு சொல்லுவோமே விட்டரலா இந்த விஷயத்துலே உண்மையாயிடுமோன்னு கதிகலங்கிட்டேன். தொழிலிலே, கலையிலே எத்தனை ஈடுபாடு இருந்தா இப்படி ரிஸ்க் எடுக்கத் துணிவார்! படத்தில நிறைய ஸ்வரங்கள்லாம் வருது. இதையெல்லாம் பாடறது எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் லிப் மூவ்மெண்ட் குடுக்கறது. சிவகுமார் எல்லாப் பாட்டையும் ரெகார்ட் பண்ணி காசெட்டை வீட்ல வெச்சு கேட்டுக்கேட்டு மனப்பாடம் பண்ணிக்கிட்டார்."

ஜேசுதாஸ் பற்றி...



None like Jesudoss for சாஸ்திரிய சங்கீதம். நீங்க ஜேசுதாஸ் குரலோட பால சுப்ரமணியம் குரலை ஒப்பிட முடியாது. பாலசுப்ரமணியம், அவரோட கோணத்தில் அவர் ஒரு பெரிய ஆசாமி. ஆனா கிளாஸிக்கல் ஸிங்கிங்னா ஜேசுதாஸ் தான். வயலின் இல்லாம கூட அவர் குரல் ரொம்ப இனிமையா இருக்கும். அவருடைய குரல் இந்தப் படத்துக்கு ஒரு பெரிய ப்ளஸ் பாயின்ட். சம்ஸ்கிருதம் ரொம்பஸ்பஷ்டமா இருக்கும். அஃப் கோர்ஸ் தமிழ்தான் அங்கங்க கொஞ்சம் தடுமாறும். அதைக் கிட்ட இருந்து கரெக்ட் பண்ணினா திருத்திப்பாரு.

மனுஷரை ஒரு நாளைக்கு பிளாட்ஃபாரத்திலேர்ந்து பிக் அப் பண்ணினாங்க. குடிச்சிட்டு வேஷ்டியில்லாம கெடந்தாரு. உண்மைல அவர் ஒரு ஜீனியஸ். டிரைவர்கிட்டயே பத்து ரூபா இருக்கான்னு கேக்கற ஸீன் கூட அவரோட வாழ்க்கைல நடந்த விஷயம்தான்.''

''ஆனா வில்லன் கேரக்டர் தேவையா?''

''அவங்க என்ன ஹாஹாஹாஹான்னு சிரிச்சாங்களா? என்ன ஸார் நீங்க ஐ'ம் வெரி ஸாரி ஸார். யூ ஆர் நாட் அப் டு த மார்க் இன் ஸர்ட்டன் திங்க்ஸ். சங்கீத சாம்ராஜ்யத்துக்குள்ள என்னெல்லாம் பாலிடிக்ஸ் நடக்கறதுன்னு உங்களுக்குத் தெரியுமா? ஒருத்தனை அழிச்சிடணுங்கறதுக்காகவே எத்தனை பேர் வேலை செய்றாங்கங்கறதெல்லாம் கதை கதையாச் சொல்றாங்க. சங்கீத உலகத்தில நெஜமா நடக்கறதை வச்சிப் பார்த்தா நான் எழுதினதெல்லாம் நத்திங் ஸார்.''

''இசைக்குப் பேர் வாங்கின தஞ்சாவூர் கிராமப் பின்னணில இந்தக் கதையை எடுத்திருந்தா...?''

''கிராமத்தில் பச்சை'பச்சையா இருந்திருக்கும். அவ்வளவுதான். ஜே.கே.பி. ஒரு இடத்தில சொல்வான். சமுத்திரத்தோட சத்தம்தான் எனக்கு சுருதின்னு. ஸோ, படத்தை ஏதாவது சமுத்திரக் கரைல எடுக்கணும்னு தீர்மானம் பண்ணினேன். மெட்'

இளையராஜா பற்றி...



சாஸ்திரீய சங்கீதம் பற்றி சரியாத் தெரிஞ்சிக்க யார் கிட்ட கன்ஸல்ட் பண்ணீங்க?

"நான் மிகச் சரியான ஆசாமிகிட்ட போனேன். இளையராஜா! 'ராஜா, மியூஸிக்னாலதான் படம் ஓடிச்சுன்னு சொன்னா நான்தான் ரொம்ப சந்தோஷப்படுவேன்'னு முதல்லேயே சொல்லிட்டேன்.

"சாஸ்திரீய சங்கீதத்திலேர்ந்து நாட்டுப் பாடலுக்கு வந்து மறுபடியும் சாஸ்திரீய சங்கீதத்துக்குப் போற மாதிரி ஒரு ஸிச்சுவேஷன்னு சொன்னேன். அது இளையராஜாவுக்கு ஒரு சவால். ஒருநாள் டயம் கேட்டாரு.'மறி மறி நின்னே'choose பண்ணிக்கிட்டாரு. நாட்டுப் பாடலையும் அதையும் சேர்த்து ரொம்ப அழகாப் பண்ணிட்டார். Hats off to இளையராஜா. மிருதங்க வித்வான் தண்ணி போட்டுட்டு வர ஸீன்ல மிருதங்கமே இல்லாம பாட்டை அமைச்சாரு பாருங்க. ரொம்ப நல்லா இருந்தது. மிருதங்கம் இல்லைன்னு ஃபீல் பண்ணவே முடியலைன்னு ஒருத்தர் எழுதியிருக்காரு.

''அதே மாதிரி அந்தக் கடைசிப் பாட்டு. அவரோகணமே இல்லாம அமைக்கறது. அதுவும்ரொம்படஃப்ஜாப். இளையராஜா ரொம்ப நல்லாப் பண்ணாரு. அந்த ஸஜெஷனைக் கொடுத்தவரே அவர்தான்!

"சாதாரணமா இளையராஜா மியூஸிக் போட்டப்புறம் ஒரு படத்தைப் பாக்க மாட்டாரு. ஆனா இந்தப் படத்தைப் பார்க்கணும்னு சொன்னாரு.

"பாத்துட்டு என்ன சொன்னார் தெரியுமா?

"நம்ப ரெண்டு பேரும் சேர்ந்து வொர்க் பண்றதுக்கு ஏன் இவ்வளவு நாள் தள்ளிச்சின்னு இப்பத்தான் தெரியுது. இந்தப் படத்துக்காகக் காத்திருந்திருக்கோம்!"

ருஸ்ல அலைகள்லாம் ரொம்ப சாது. ஆவேசமான அலைகள் என் படத்துக்குத்தேவைன்னு இந்த லொகேஷனைத் தேடித் தேடிப் பிடிச்சேன்.

"I took the aid of certain visuals to plant the bigness or vastness of Music.

"திருவையாறுலேர்ந்தெல்லாம் எனக்குப் பாராட்டி லெட்டர் வந்திருக்கு. ஒரு இசைக் குடும்பத்தோட பழகிட்டு வந்த மாதிரி இருக்குன்னு."

"படத்தில கடைசிப் பாடல் அவரோகணம் இல்லாம ஆரோகணத்தில மட்டும் இருக்குன்னு சொல்லி ஒரு சாதனை மாதிரி சொல்றீங்க. எத்தனை பேருக்குப் புரியும்?"

"பாடகன்ற அவனுக்கு ஒரு அச்சிவ்மெண்ட் இருக்கணுங்கறதுக்காக அதைப் பண்ணினோம். முதல்ல எனக்கே புரியலை ஸார். எக்ஸ்ப்ளெயின் பண்ணினப்புறம் தான் புரிஞ்சது. ஜனங்களுக்குப் புரியணும்னு தான் ஜட்ஜ் கேரக்டர் மூலம் ஆரோகணம், அவரோகணம்னா என்னன்னு விளக்கினேன். அப்படியும் புரியாதவர்களுக்கு விட்டுற வேண்டியதுதான்."

"உங்களுக்குச் சங்கீதத்தில எத்தனை தூரம் ஞானம் உண்டு?"

"கத்துக்க ஆசை உண்டு. ஆனா சின்ன வயசிலயே என் மைண்ட்லாம் டிராமா பக்கம் போயிட்டதால சங்கீதம் கத்துக்க முடியலை."

"இந்தப் படத்து மூலமா என்ன மெஸேஜ் கொடுக்க நெனைக்கறீங்க?"

(சற்று கோபமாக) "இதையெல்லாம் நீங்க கேக்கவே கூடாது. படத்தை உங்க முன்னால வச்சாச்சு. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு மெஸேஜ் கெடைக்கும். என்ன மெஸேஜ் கெடைக்குதோ எடுத்துக்குங்க.


"நான் ஒரு இசைக் கலைஞனோட வளர்ச்சி, வீழ்ச்சி, மறுபடியும் வளர்ச்சி இதைத்தான் படமாக்கினேன்."

கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் ஓடிப் போயிருந்தது.

இவ்வளவு நேரமும் கே. பி. உணர்ச்சிப் பிழம்பாகப் (பல்லைக் கடித்து, மேஜைமேல் குத்தி, கைகளை ஆவேசமாக ஆட்டி, நெருப்பு சிந்தும் கண்களுடன் பார்த்து) பேசி எங்களை மறக்கடித்திருந்தார். பிரிய மனமில்லை. இருந்தாலும் பிரிய வேண்டிய சூழ்நிலை. ஒரு அற்புதமான கச்சேரியைக் கேட்ட உணர்வோடு வெளியே வந்தோம்.

சந்திப்பு: **ஜெயமன்மதன்.**




Blackbelt
Blackbelt
BRIEFS & BANIANS
For strong ones
who wish to remain in style and comfort.
BRIEFS
Sultan
BANIANS
BOXER
TRUNKS
FIANCEE
COMFORT BRIEFS
SAHEB
BANIANS
MARSHALL
BRIEFS
Quality Products of Aristocrat Hosiery Pvt. Ltd.
Post Box No. 3359, Bombay-400 003. Tel: 321861 • 330251



“பட்டங்கள் பொறுப்பை அதிகமாக்குகின்றன!”

—என்கிறார், மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸின் 'சங்கீத கலா நிபுண' விருது பெறும் என். ரமணி

* எஃகு (பிலாய்) நகருக்குப் போய், குழலோசை வழங்கிவிட்டுத் திரும்பியிருந்தார் ரமணி. ''கச்சேரிக்குக் கூட்டமும் வருகிறது. நன்றாக ரசித்தும் கேட்கிறார்கள்.'' ஒரிசாவிலுள்ள பெர்ஹாம்பூரில் இரவு எட்டரை மணிக்குக் கச்சேரி துவங்கி நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு முடிந்ததாம். ஏராளமான பெண்கள் உட்பட கூட்டம் கடைசிவரை அமைதியாகக் கேட்டதாம். ''வெளியூர்களில் நிறைய ரசிகர்கள் இருப்பதுதான் எங்களுக்கு உற்சாகமாக இருக்கிறது.''

* ரமணியிடம் தற்போது பத்துப் பேருக்கு மேல் புல்லாங்குழல் வாசிக்கக் கற்றுக் கொள்கிறார்கள். எல்லாரும் பள்ளி, கல்லூரி மாணவர்கள். நம்பிக்கையூட்டுபவர்கள்? கார்த்திகேயன், சுப்பிரமணியன் (MBA மாணவர்கள்); பெண்களில் சுந்தரி, ரஞ்சனி, பிரெஞ்சு மாணவி ஸில்வியா. ''அன்றைக்கு நாங்கள் துணிந்து இதுதான் நம் தொழில் என்று எடுத்துக் கொண்ட மாதிரி இன்றைக்குச் செய்ய முடியவில்லை. உத்தியோகத்திற்குப் போகட்டும்... ஆனால் காலையில் குறிப்பிட்ட நேரம் கட்டாயம் வாசிக்க வேண்டும்.''

இந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்? —

ஹைகூ கவிதை ஞாபகம் வருகிறது.

* மாலி என்ற ஒரு மேதை — இவர் குரு. ''என் தாத்தா ஆழியூர் நாராயணசாமி ஐயர்தான் எனக்கு முதல் குரு. பிறகு மாலி வாசிப்பைக் கேட்டு, திருவாரூரிலிருந்து எப்படியாவது சென்னைக்கு வந்து அவரிடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற வெறி மாதிரி உண்டாயிற்று. 1945 ல், என்னை எல்லா விதத்திலும் உற்சாகப்படுத்திச் சென்னைக்கு அழைத்து வந்தவர் மாலிதான்.'' அவரிடம் பல வருஷங்கள் கற்றுக் கொண்டும், கூடவே பல கச்சேரிகள் வாசித்தும் இருக்கிறார் ரமணி. ''மாலியின் மனசு விசாலமானது. ஓடி வந்து பாராட்டுகிறவர்...''

* ஹரிபிரசாத் சௌராஸியாவுடன் 25 க்கு மேற்பட்ட ஜுகல்பந்தி கச்சேரிகள் செய்த ரமணி சொல்கிறார்: ''இப்போது வடக்கத்திக்காரர்கள் நிறைய கர்நாடக இசை கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். முன்பு மாதிரி இல்லை. மத்திய அரசும் இந்துஸ்தானி இசையைப் போல, கர்நாடக சங்கீதம் சம்பந்தமான விஷயங்களில் அக்கறை காட்டி ஒத்துழைப்பும் தர வேண்டும்.''

* ''பட்டங்கள் சிலருக்குச் சீக்கிரமே கிடைக்கிறது. சிலருக்குத் தாமதமாகக் கிடைக்கிறது. ஆனால் மொத்தத்தில் இவை பொறுப்பை அதிகமாக்குகின்றன. இன்னும் சிரத்தையுடன் நம் தொழிலைக் கவனிக்கத் தூண்டுகின்றன. அதனால் கலையில் செழிப்பு உண்டாகிறது — இல்லையா?'' ரமணிக்கு நிறையப் பட்டங்கள். அவராலேயே சட்டென்று நினைவுகூர முடியவில்லை.

* ''கேரளாவில் நிறையக் கர்நாடக இசை கேட்கக் காரணம், கோயில்களில் அவர்கள் ரெகுலராக வைக்கும் பிரம்மாண்டமான கச்சேரிகள். இதுபோல் தமிழ் நாட்டிலும் செய்ய வேண்டும்.''

* இவ்வளவு பிரயாணங்கள் அலுப்பைத் தரவில்லையா? ''கடவுள் கிருபையில் இப்படியே பழகிவிட்ட பிறகு, வெளியூர் நிகழ்ச்சிகள் இல்லையென்றால்தான் கஷ்டமாக இருக்கும்! டி. கே. ரங்காச்சாரிக்கு அப்படி ஒரு நிலை வந்த போது, ட்யூஷன் சொல்லிக் கொடுக்க என்றே பெங்களூர் போய் வந்து கொண்டிருந்தார்!''

* ''தினம் தினம் ஒவ்வொரு கச்சேரியும் பரீட்சை மாதிரிதான். வாத்தியத்தைத் தெய்வமாக நினைத்து வாசிக்கும்போது ஓரளவு வெற்றி கிடைக்கிறது...''

* சென்னையில் சங்கீத ஸீஸன் முடிந்த கையோடு மறுபடி அயல்நாட்டுப் பிரயாணம் (லால்குடி, வேலூர் ராமபத்ரன் சகிதம்.) பாஹ்ரேன், மஸ்கட்... ''உங்கள் குரு மாலிக்கு ஒரு 'சங்கீத கலா நிபுண' பட்டம் அல்லது 'சங்கீத கலாநிதி' பட்டம்..?'' ஒரு புன்சிரிப்பு மட்டுமே ரமணியின் பதில், 'யாருக்கு யார் கொடுப்பது? அதை யாரிடம் வந்து கேட்கிறீர்கள்?' என்கிற மாதிரி.

பேட்டி: சாருகேசி.


கல்கி
பொங்கல் சிறப்பிதழில்
ராஜேஷ்குமார்
எழுதும்
A ஃபார் ஆப்பிள்;
M ஃபார் மர்டர்!
மர்மத் தொடர் ஆரம்பம்

மாதங்களின் மார்கழி நாள். பகவான் கூறுகிறார்:

சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகின்றது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளையாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒருநாள் ஆகும். தை மாதமாகிய உத்தராய புண்ணியண காலம் அவர்களுக்கு சூரியோதயம் அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்குப் பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணாயணம் அவர்களுக்கு இரவு. அதில் மார்கழி மாதம் விடியற் காலம் தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனை, வந்தனை வழிபாடு முதலியன மனதை நன்கு பண்படுத்த வல்லவைகளாம். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள்வழிபாடு ஆகியவைகளோடு முழுதும் இணைக்கப்பட்டிருக்கிறபடியால் மாதங்களுள் தாம் மார்கழி மாதம் என்கிறார் பகவான்.

இசையின் எதிர்காலம் இளைஞர் கையில்!

தொடர்ந்து 24 மணிநேரம் கோட்டுவாத்தியம் வாசித்துச் சாதனை புரிந்தவர் ரவிகிரன். தொடர்ந்து 25 மணிநேரம் வயலின் வாசித்துச் சாதனை புரிந்தவர் மீரா நாராயணன். இளைஞர் ஆண்டு முடிகிற இந்தச் சமயத்தில், இந்த இருவரும் சந்தித்துப் பேசிய போது:

ரவிகிரன்: ஹலோ மீரா! கங்கிராட்ஸ்! உங்களோட 25 மணிநேர மாரதான் வயலின் நிகழ்ச்சியை வெற்றிகரமா முடிச்சதுக்கு!

மீரா நாராயணன்: ரொம்ப தேங்க்ஸ். உங்களுக்கும் என்னோட கங்கிராஜுலேஷன்ஸ். ஐதராபாத்ல சரளாகுமாரி 24 மணி நேரம் டான்ஸ் ஆடினாங்க. அப்புறம் நீங்க 24 மணிநேரம் கோட்டு வாத்தியம் வாசிச்சீங்க. இதையெல்லாம்பார்த்தபோது, 'இவங்களும் நம்மை மாதிரி இளைஞர்கள்தானே! நாமும் ஏன் முயற்சி பண்ணக் கூடாது'ன்னு நினைச்சேன்.

ரவி: உங்க வீட்டிலே உடனே ஓ.கே. சொல்லிட்டாங்களா?

மீரா: நோ! நோ! ஏற்கெனவே நாகை முரளிதரனோட ரெக்கார்டு 24 மணிநேரம். அதனால், நான் 25 மணிநேரம் வாசிச்சாகணும். எல்லாரும் உன்னால 'தொடர்ந்து ஐந்து மணி நேரம் ஒரே இடத்துல உட்கார்ந்து இருக்கிறது கூட முடியாது. நீ எப்படி 25 மணிநேரவயலின்கச்சேரிபண்ணப்போறே?' என்றார்கள். ஆனா எனக்குத் தன்னம்பிக்கை இருந்தது. 'முடியும்'னு அடிச்சுச் சொன்னேன். சம்மதிக்க வைச்சேன்.... அது சரி! உங்களுக்கு எப்படி இந்த 24 மணிநேர ஐடியா வந்தது?

ரவி: நான் ரெகார்டு செட் பண்ணணும்னோ, 'பப்ளிஸிடி கிடைக்கணும்னோ இதைச் செய்யலே. ஒருநாள் இப்படிப் பண்ணினா என்னன்னு தோணிச்சு; அதை நான் ஏதோ தெய்வத்தோட கட்டளையா நினைச்சு, நிறைவேற்றினேன், மீரா! உங்க அம்மா (ராதா நாராயணன்) சௌக்கியமா? அவங்க தானே உங்களுக்கு குரு?

மீரா: ஆமா, எனக்கு ஒரே ஒரு தம்பி. ஸ்கூலில் படிக்கிறான்; மிருதங்கம் கத்துக்கறான். நீங்க 'இரண்டு வயசிலேயே ராகங்களையெல்லாம் கண்டுபிடிச்சு சொல்லிடுவீங்களாமே. அது ஞாபகம் இருக்கா?

ரவி: என் அம்மாவும், அப்பாவும் சொல்லித்தான் தெரியும். வாய்ப் பாட்டுக் கத்துண்டேன். சுமாராப் பாடவும் செஞ்சேன். ஆனா, என்னமோ தெரியலே; தாத்தா, அப்பா (நாராயண அய்யங்கார்; நரசிம்மன்) மாதிரி எனக்கும் கோட்டு வாத்தியத்துல கவனம்





திரும்பிச்சு. அப்பாதான் குரு. ஒன்பதுவயசில அரங்கேற்றம். திருப்பதியிலே, ஆண்டவன் சன்னதியில, பெருமாள் பாதத்துல வாத்தியத்தை வெச்சு, எடுத்துத் தரச் சொல்லி வாசிச்சேன். உங்களோட முதல் கச்சேரி அனுபவம் எப்படி? எங்கே?

மீரா: அப்போ நாங்க கல்கத்தாவுல இருந்தோம். அம்மா நிறையக் கச்சேரிகள் பண்ணுவாங்க. என்னுடை முதல் கச்சேரி அம்மாவோடத்தான். இடம் ராஞ்சி. அங்கே தமிழ்ச் சங்கம் ஏற்பாடு பண்ணின புரோகிராம். அம்மா கூட இருந்ததால்பயமில்லாமல் இருந்தது. அப்புறம் தனியே கச்சேரிகளில் வாசிக்கவும் இது தைரியம் கொடுத்தது.

ரவி: எந்தெந்த வித்வான்களுக்கெல்லாம் வயலின் வாசிச்சிருக்கீங்க?

மீரா: ஆல்மோஸ்ட் எல்லா பிரபல வித்வான்களுக்கும் வாசிச்சிருக்கேன். எம்.எல். வசந்த குமாரி, டி.கே. பட்டம்மாள், ஃப்ளூட் ரமணி, டி.வி. கோபாலாகிருஷ்ணன், மாலி, மாண்டலின் சீனிவாஸ், பாம்பே ஸிஸ்டர்ஸ், சிக்கல் ஸிஸ்டர்ஸ்... ரவி! கோட்டு வாத்தியம் வாசிக்கிறது ரொம்ப கஷ்டம்னு சொல்றாங்களே! அப்படியா?

ரவி: வடநாட்டுப் பெரிய வித்வானிடம் இந்தக் கேள்வியைக் கேட்டபோது, அவர் சொன்னதாய் என் அப்பா சொன்ன ஒரு கதைதான் எனக்கு இப்போ ஞாபகம் வருது. ஒருவரிடம் நாலைந்து விதமான பொருள்களைக் காட்டிவிட்டு, பின் அவருடைய கண்களைக் கட்டி ஒவ்வொன்றாய்த் தொட்டுப் பார்த்து, 'அது என்ன?' என்று சொல்லச் சொன்னார்களாம். சரக்டாய்ச் சொன்னாராம். அப்புறம் கையில் ஒரு சிறு குச்சியைக் கொடுத்து, அதனால் ஒவ்வொன்றையும் தொட்டுப் பார்த்து, 'என்ன?' என்று சொல்லச்சொன்னபோது, அவரால்சொல்லமுடியவில்லையாம். அதுபோலத்தான் கோட்டு வாத்தியமும். வாத்தியத்தை நாம் கையால் தொட்டு வாசித்து, ஸ்வரம் எழுப்பவில்லை பாருங்கள்! அதனால் சிலர் இதைச் சிரமம் என்று நினைக்கிறார்கள். கலைஞனுக்கும் வாத்தியத்துக்கும் இடையில் ஒட்டுதல் ஏற்படாது என்றும் எண்ணுகிறார்கள். ஆனால் என்னைக் கேட்டால், இந்தக் கருத்துக்களெல்லாம் சுத்தத் தப்பு என்பேன். வீணை, வயலின் போல கோட்டு வாத்தியத்தையும் பிரபலமாக்கிக் காட்ட வேண்டும் என்று லட்சியம் வைத்துக்கொண்டிருக்கிறேன். அதுசரி, மீரா! நீங்க படிப்பை முடிச்சுட்டீங்களா, இல்லே இடையிலே முற்றுப்புள்ளி வைச்சுட்டீங்களா?

மீரா: பாதி கிணறு தாண்டி என்ன பயன்? 'கச்சேரிக்குப் போறதாலே டயம் கிடைக்கலே, படிப்பை நிறுத்திட்டேன்'னு சொல்றதிலே எனக்கு நம்பிக்கை கிடையாது. பி. எஸ்ஸி முடிச்சுட்டு இப்ப ஸி. ஏ. பண்றேன், நீங்க...?

ரவி: கரஸ்பாண்டன்ஸ்லே பி. காம். படிக்கிறேன். ஆமா, கலைத் திறனிலே தன்னம்பிக்கை இல்லாததால்தான் படிப்பையும் கூடவே தொடர்கிறோம்னு ஒரு குற்றச்சாட்டு இருக்கே, தெரியுமா?

மீரா: வெறும் வாயை மெல்றவங்க எதுவும் பேசிக் கொண்டுதான் இருப்பாங்க. அதையே இப்படி நினைச்சுப் பார்க்கலாமே... படிப்புங்கற பக்க பலம் இருப்பதாலே கலையிலே இன்னும் அதிகமான தன்னம்பிக்கையுடன் நாம் செயல்பட முடியும் இல்லையா?

ரவி: கரெக்டா சொன்னீங்க மீரா! கர்நாடக இசை இன்றைய இளைஞர்களைக் கவருவதில்லைன்னு ஒரு குற்றச்சாட்டுச் சொல்றாங்களே! அதுபத்தி என்ன நினைக்கிறீங்க?

மீரா: இப்போ இளைஞர்கள் ரசனை கர்நாடக சங்கீதத்தின் பக்கம் திரும்பறதுன்னுதான் நினைக்கிறேன். எந்தக் கச்சேரிக்குப் போனாலும் ரசிகர்கள்லே பெரும்பான்மையினர் இளைஞர்களாகத்தான் இருக்காங்க. இதை இன்னும் அதிகரிக்கணும்னு, இளைய தலைமுறை வித்வான்களுக்கு நிறைய ஊக்கம் தரப்படணும். தெய்விகமான இந்தக்கர்நாடக இசையின் வளமான எதிர்காலம் இன்றைய இளைஞர்கள் கையிலேதான் இருக்கு என்பது சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பிலும் உணரப்படணும். நமக்குள்ள பெரிய பொறுப்பு இல்லையா இது?

ரவி: சரியாச் சொன்னீங்க, இப்பவே சிலர் பயப்படற மாதிரி எதிர்காலத்திலே கர்நாடக சங்கீதத்துக்கு மவுசு குறைந்து ரசிகர்களும் ரொம்பக் குறைஞ்சு போயிட்டாங்கன்னு இன்றைய இளம் தலைமுறைக் கலைஞர்களான நம்மைத்தான் குறை சொல்வாங்க! அதனாலே நமக்குப் பொறுப்பு அதிகம்தான். நாம இன்னும் சிறப்பாச் செய்யணும். வித்வத்தை மட்டுமின்றி வாசிப்பையும் சிகரத்துக்குக் கொண்டு போக முயற்சிக்கணும். ரசிகர்களை ஈர்க்கிற உத்திகளையும் புரிஞ்சுண்டு செயல்படணும்.

மீரா: நீங்க சொல்றதைப் பார்த்தா கொஞ்சம் நடுக்கமாக் கூட இருக்கு. ஆனால் பயமுறுத்தறதுக்காக நீங்க சொல்லலே; பொறுப்பை உணர்ந்து தைரியமாச் செயல்பட்டு நம்ம ஆற்றலை உச்ச நிலைக்கு வளர்த்துக் கொண்டு நல்ல பேர் வாங்கணும்னு சொல்றீங்க. செய்து காட்டுவோம் ரவி. இன்றைய இளம் தலைமுறை பற்றி நாளைக்கு எல்லாரும் பெருமையாப் பேசும்படியாகவே நடந்துக்குவோம்.

ரவி: இந்த வருஷம் மியூஸிக் அகாடமில நீங்க வாசிக்கிறீங்க, இல்லையா?

மீரா: ஓ! டிசம்பர் 29ம் தேதி 5 மணிக்கு மாண்டலின் சீனிவாசுக்கு வாசிக்கிறேன். நீங்க?


ரவி: அதே அரங்கிலே 28ம் தேதி ராத்திரி எட்டு மணிக்கு வாசிக்கிறேன்.

மீரா: அப்போ, 28ம்தேதிமியூஸிக் அகாடமில பார்க்கலாம். வரட்டுமா? தேங்க்யூ.


ரவி: சந்தோஷம்! ஸீ யூ!

தொகுப்பு: **எஸ். சந்திரமௌளி.**

படம்: **யோகா.**




பார்லிமெண்டில் எதிர்க் கட்சிகளுக்குக் கொடுக்கப் பட்ட அறைகளை இ காங்கிரஸ் சீல் வைத்துப் பூட்டி விட்டது!


இடைக்கால நிவாரணம்
சமரசம்

ராஜீவ் - சென்னை விஜயம்


மூப்பனார்



1985 டிசம்பர் 22
மலர் 44 இதழ் 21
குரோதன மார்கழி 7

கல்கி



பொங்கல் பரிசா? தேர்தல் பரிசா?

முதல்வர் அறிவித்த பொங்கல் பரிசைத் தேர்தல் பரிசு என்றும் வர்ணிக்கலாம். 'போனஸ்' என்று சொன்னால் என்ன 'பரிசு' என்று புதுப் பெயர் சூட்டினால் என்ன? பெயர் மாற்றத்தினால் தெருவின் திசையா மாறிவிடப் போகிறது? இந்த வருஷம் தந்த பரிசை அடுத்த வருஷம் கிடையாது என்று கூறிவிட முடியாது. பரிசுத் தொகை அதிகரிக்கப் படவேண்டும் என்று, வரும் ஆண்டுகளில் கிளர்ச்சி நடப்பதைத் தடுக்கவும் முடியாது. ஆக மொத்தம், கிளர்ச்சி செய்வோரிடம் பேசமாட்டேன் என்று முதல்வர் முதலில் பிடிவாதம் செய்வதும் பிறகு அழைத்துப் பேசுவதும் எதற்காக? 'எம்.ஜி. ஆரிடம் மட்டுமே நியாயம் கிடைக்கும்; மற்றவர்கள் கடின சித்தம் படைத்தவர்கள்' என்ற எண்ணத்தை உருவாக்கவா? அல்லது, 'செய்யாறு தேர்தல் நெருங்கி விட்டதே நற்பெயர் வாங்க வேண்டுமே' என்ற கவலையா? கிளர்ச்சிகள் தீவிரமடையவும், கிளர்ச்சி செய்தால்தான் அரசு நம்மைக் கவனிக்கும் என்ற எண்ணம் வேரூன்றவும் கிளர்ச்சிகளும் வேலை நிறுத்தங்களும் வாழ்க்கை முறையாகவே மாறிவிடவும் அரசாங்கமே தனது போக்கினால் வழி வகுப்பது போலாகிறது.

அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தத்தம் வேலைகளைக் கவனிக்கத் தொடங்குவது மகிழ்ச்சி அளிக்கிறது என்றாலும் நடந்து முடிந்த கிளர்ச்சி ஒரு அடிப்படைப் பிரச்னைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. அரசு வருமானத்தில் 55 சதத்துக்கு மேல் ஊதியமாகவே போய்விடுகிறதென்றும் அதனால் அபிவிருத்திப் பணிகளுக்கும், சமுதாயப் பணிகளுக்கும் போதிய பணம் கிடைப்பதில்லை என்றும் எனவே அரசு ஊழியர்கள் மேலேமேலே கேட்டுக் கொண்டே இருந்தால் கொடுக்க முடியாது என்றும் அரசுத் தரப்பில் வாதிக்கப்படுகிறது.

அரசு ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போயிருக்கிறதென்றால் காரணம் யார்? ஆட்சிக்கு வருகின்ற அரசியல்வாதியே! முன்பு எட்டு அமைச்சர்கள் இருந்த இடத்தில் இன்று 25 அமைச்சர்கள் இருப்பது கட்சிக்குள் இருக்கிற கோஷ்டிகளைத் திருப்திப்படுத்தவே. ஒவ்வொரு அமைச்சருக்கும் அதிகாரிகள், ஊழியர்கள் பட்டாளம் பெருகுகிறது. இத்தனை அமைச்சர்கள் இருந்தாலும் யாரும் துரிதமாக முடிவெடுப்பதுமில்லை; நேர்மையான முடிவாக அது அமைவதுமில்லை. எனவே "பெட்டிஷன்"கள், கோப்புகள் என்று தேவையற்ற "காகித வேலை" மலையாகக் குவிகிறது. கூடவே ஊழியர்கள் எண்ணிக்கையும் பெருகுகிறது. மக்களும் சரி, அரசு ஊழியர்களும் சரி அநீதிகளுக்கு எதிராக நீதிமன்றம் போகலாம் என்று உணர்ந்துவிட்டதால், ஒவ்வொரு இலாக்காவிலும் சட்டப் பாயிண்டுகளைக் கவனிக்கவே "லீகல் ஸெல்" அமைந்தால் தேவலாம் என்ற நிலை வளர்ந்து வருகிறது.

இவை எல்லாவற்றையும்விட முக்கியமான விஷயம் 'கிடைப்பதைக் கொண்டு திருப்தி அடைந்து எளிமையான வாழ்க்கை நடத்துங்கள்' என்று அரசு ஊழியர்களிடம் கூறுகிற அருகதையை அமைச்சர்கள் இழந்து நிற்பதுதான். அரசியல்வாதிகள் ஆடம்பரமாக வாழ்வதையும் அநியாயமான முறையில் பணம் பண்ணுவதையும் அரசு ஊழியர்கள் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். கட்சிக் கண்ணோட்டத்தில் மக்களின் வரிப் பணம் அநியாயமாகவும், அபரிமிதமாகவும் செலவிடப்படுவதைக் காண்கிறார்கள். ஆட்சியில் இருப்பவரிடம் இவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் குறைந்து போகிறது.

வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவது என்றால் உற்பத்திக்கு உதவாத கோப்புகளைப் பரிசீலிக்கிற அரசு ஊழியர் பட்டாளத்தை அதிகரித்துக் கொண்டு போவது அல்ல. தொழில் வர்த்தகத்துறை வளம்பெற ஆக்கமும் ஊக்கமும் அளித்து அங்கே வேலை வாய்ப்புக்கள் பெருக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதைச் செய்யாமல் அரசு ஊழியர்களின் எண்ணிக்கையை ஏகமாய் அதிகரித்துவிட்டு அதே நேரத்தில் விலைவாசி உயர்வையும் கட்டுப்படுத்த முடியாமல் அரசு கைவிரிக்குமேயானால் பிரச்னைகள் எழவே செய்யும். அரசியல்வாதிகள் தம்மிடம் உள்ள அடிப்படைத் தவறுகளைச் சீர் செய்யாமல் 'வரிப் பணமெல்லாம் சம்பளம் கொடுக்கவே சரியாய்ப் போய்விடுகிறதே' என்று புலம்புவது அபத்தம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.



வட்டமேஜை

நக்கீரனின் வம்சமோ!

* ஆளுங்கட்சிக்காரர் என்று தெரிந்தும், துணிச்சலாகப் பாக்யராஜின் கிண்டலுக்குத் தக்க பதில் கொடுத்தும், தவறு யார் செய்தாலும் தவறுதான் என்று கூறியிருக்கும் உங்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. எனக்கு ஒரு சந்தேகம், நீங்கள் நக்கீரனின் வம்சமோ!

பாப்பம்பட்டி, கவிப்பிரியன்.

நல்ல காரியம்!

* பாக்யராஜ் அவர்களுக்குச் சரியான பதிலடி கொடுத்து மூக்கறுத்து விட்டீர்கள்; நல்ல காரியம். கல்கி எப்போதும் ஆதாரமில்லாமல் எதையும் பிரசுரிக்காது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

திருச்சி—1, முத்து சண்முகம்.

வயிற்றெரிச்சலைக் கிளப்பாதீர்!

* பாக்யராஜ் அவர்களே! நடிகர்களுக்கு எந்த அளவுக்கு ரசிகர்கள் இருக்கிறார்களோ, அந்த அளவுக்குமேல் பத்திரிகைகளை விமர்சிக்கவும் கடிதம் எழுதவும் வாசகர்கள் இருக்கிறார்கள். இது தங்களுடைய அறிவுக்கு ஏன் எட்டவில்லை? அனாவசியமாக வாசகர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதீர்.

ஆங்கரை, ஆனந்.

முதல் பக்கம் வீண்!

* பாக்யராஜின் கடிதத்திற்கு முதல்பக்கத்தை ஒதுக்கி, முக்கியத்துவமளித்திருக்க வேண்டியதில்லை. மேலும் கல்கியின் தரத்தைக் குறித்து, அவர் விமர்சித்து, அதை வாசகர்களாகிய நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமுமில்லை.

சென்னை—15, இரா. சி. இரஞ்சன்.

நடுநிலையான தலையங்கம்!

* பிரதமரின் திறமைகளை மற்ற பத்திரிகைகள் எல்லாம் 'ஆஹா! ஓஹோ!' என்று புகழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அவருடைய ஒரு சில செயல்களில், எந்த அளவுக்குப் பின் விளைவுகள் உள்ளன என்பதைச் சுட்டிக் காட்டி தாங்கள் எழுதியுள்ள தலையங்கம் எங்களைப் பரவசப்படுத்தியது!

சீர்காழி—609 110, ஆர். எஸ். இராஜ்.

நீதிபதிக்கு மட்டுமல்ல...

* 'மறக்க முடியாத அனுபவம்' நீதிபதிக்கு மட்டுமன்று, பெரியவரை நேரில் காண முடியாமல் மானசீகமாக வணங்கிவரும் என் போன்ற எளியோனுக்கு, அவரின் பெருமைகளைத் தங்கள் பத்திரிகை மூலம் அறிந்த தானது எனக்கும் 'ஒரு மறக்க முடியாத அனுபவத்தை' அளித்தது. நன்றி!

சிங்காரப்பேட்டை, என். சங்கர்.

மத்தளமானேன்!

* 'ஜால்ராவைத் தவிர மற்ற எல்லா இசைக் கருவிகளும் பிடிக்கும்' — தராசு பதிலைப் படித்ததும் மத்தளத்தைப் போல் அதிர்ந்து சிரித்தேன்.

கோவை, உமார்த்தி.

வேண்டாம் ராஜினாமா!

* தன்மானமுள்ள ஆசிரியர் சற்குணம் அவர்களே! ('இரண்டு ரூபாய் — சிறுகதை') தங்களின் ராஜினாமா முடிவைக் கைவிட்டுத் துணிந்து நில்லுங்கள்; இதோ நாங்களும் தயார்! இந்தச் சாராய சாம்ராஜ்யத்தைச்சாம்பலாக்குவோம்!புதிய—பொறுப்புள்ள — உலகம் படைப்போம்!

அம்மையப்பன்—1, கே. எம். பொன்னுசாமி.

உதவிக்கு நன்றி!

* 'விளையாட்டு வினையாகியது' மூலம் வாசகர்களின் அனுபவங்களை ஒரு பாடமாக எமக்களித்தீர்கள். இனியும் எம் வாழ்வில் விளையாட்டு வினையாகாமல் தடுக்க உதவியதற்கு நன்றி.

காரைக்குடி, கலைபிரியன்.

படுகஞ்சனய்யா நீர்!


* 'ஜோக்ஸ்' வெளியிடும் விஷயத்தில் நீங்கள் படுகஞ்சனாக இருப்பது கொஞ்சங்கூட நல்லா யில்ல சார்!

சென்னை—28, எம். தியாகராஜன்.

அனைவருக்கும் வாய்ப்பு வேண்டும்!

* போட்டி என்று வைத்துவிட்டால் 'கல்கி' வாசிக்கும் அத்தனை வாசகர்களும் பங்கு கொள்ளும்படியான தலைப்பைக் கொடுங்கள்! சமீபத்தில் சென்னையில்தான் புயல் அடித்தது. திருவனந்தபுரத்தில் புயல் வீசவில்லை! ஆகவே என்னால் 'புயலில் ஓர் அனுபவம்' போட்டியில் கலந்து கொள்ள முடியவில்லையே!

திருவனந்தபுரம், க. ஜெயப்ரகாஷ்.



"சாராய சாம்ராஜ்யத்தைச் சாம்பலாக்குவோம்!"


இதோ!
வி.வி.டி. தேங்காய் எண்ணெய்
கையடக்கமான அளவில் . . .
V.V.D
COCONUT OIL
MICRO FILTERED PURE
MADE IN INDIA
100 கிராமிலும்
200 கிராமிலும்
கிடைக்கும்
தரமான தேங்காய்களிலிருந்து தயாரிக்கப் படுவது. துல்லியமாக வடிகட்டப்படுவது. சுத்தமானது. உங்கள் கூந்தலை போஷித்துப் பராமரிப்பது. உடலுக்குக் குளிர்ச்சி தருவது. மென்மையான இயற்கை மணம் கமழ்வது.
இது ஒரு விவிடி தயாரிப்பு.
V.V.D இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்

"மிஸ்டர் பட்டாபி... நாளைக்கு கவர்ன்மெண்ட் ஆடிட்டர்ஸ் வரப்போகிறார்களாம். உங்களுக்குத்தான் தெரியுமே. இன்னதுதான் கேட்பார்கள் என்றில்லை. ஆறேழு வருஷத்துக்கு முந்தின ரிகார்ட்ஸைக் கூட, பீடா ஸ்டாலில் சோடா கேட்பதுபோல் சுளுவாய்க் கேட்டுவிடுவார்கள். தேடி எடுத்தாகணும். திடீர் திடீர்னு ஃபிகர்ஸ் வேணும் என்பார்கள். தயாரிக்கணும்... ஹும்... ஹும்" மென்று தொணதொணத்தார், சீனியர்.

"ஆகட்டும்," என்றான், பட்டாபி.

"பை தி பை, இன்னொரு ரிக்குவஸ்ட்.

"சொல்லுங்கள்."

"இன்றைக்கு ராத்திரி நீங்கள் ஊருக்குப் போகும் கெடு, இல்லையா?"

"ஆமாம்."

"அதைக் கான்சல் பண்ணிவிடுங்கள்."

"சார்..."

"ஏனென்றால், ஆறு மணிக்குப் பஸ் பிடித்து நீங்கள் ஊர் போய்ச் சேர இராத்திரி பத்தரை ஆயிடும். பன்னிரண்டு மணிக்குச் சாப்பிட்டுப் படுப்பீர்கள். நள்ளிரவு இரண்டரை மணிக்குப் பஸ். அதைப் பிடித்தால் தான் காலையில் ஆபீசுக்கு வர முடியும்."

"வந்திடுவேன், சார்.

"வருவீங்க... வருவீங்க... நான் அதைச் சொல்ல வரவில்லை. ராத்தூக்கம் இல்லாமல், பிரயாணக் களைப்புடன் ஆபீசுக்கு வந்தீங்கன்னு உடம்பெல்லாம் அசத்தும். சுறுசுறுப்பாய் வேலை செய்ய முடியாது. வருஷம், எண்பத்தஞ்சா, மூணு என்று தெரியாமல் தூக்கம் கண்ணை மறைக்கும். ஆகையினால் ராத்திரிக்கு நீங்கள் ஊருக்குப் போகாமல் இருப்பதுதான் உத்தமம். இந்த ஒரு தடவை எனக்காக ப்ளீஸ், ஊருக்குப் போகாதிருங்களேன்," கெஞ்சலுடன் கையேந்தினார், சீனியர்.

"சரி, சார்," உறுதியுடன் தலையாட்டினான், பட்டாபி.

ஆனால், அலுவல் முடிந்ததும் —

ஆறு மணி பஸ்ஸைப் பிடித்த முதல் பிரயாணி, பட்டாபிதான்.

அந்த ஊர், மேஜராகாத ஒரு பஞ்சாயத்து.

முதல் காட்சி சினிமா முடிந்து, டீக்கடைக்காரர்கள் வியாபாரத்தை முடிக்கும் ஆயத்தமாய், பேசினில் இருந்த அழுக்கு நீரை சாலையில் வீசிக் கொண்டிருந்தனர்.

தெரு முழுக்க நிசப்தமாகி, தொலைவிலுள்ள குளத்து நீரின் படித்துறை சலசலப்புக் கூட துல்லியமாய் அச்சமூட்டியது.

பொருட்படுத்தாமல் —

வாசல் விளக்கைப் போட்டுக் கொண்டு கொட்டக்கொட்ட விழித்திருந்தாள், மைதிலி

பட்டாபியைக் கண்டதும் விட்டெறிந்த பந்துபோல் விசைத்தெழுந்த அந்த வேகம்!

வந்துட்டீங்களா... ஏன் இவ்வளவு



தொட்டனைத்தே ஊறும் மணற்கேணி

—தமிழினியன்

லேட்... பஸ்... கிஸ், ஏதாவது தகராறு பண்ணிடுச்சா?''

எப்போதும் — அதாவது கோடை விடு முறைக்காக மைதிலி குழந்தைகளுடன் ஊருக்கு வந்த கடந்த இருபது நாட்களில், இரண்டு நாளைக்கொரு தரம் இரவோடிரவாக வந்துபோவதை வாடிக்கையாய்க் கொண்டிருந்தான், பட்டாபி. இதுவரை ஆறேழு தரம் வந்திருப்பான். இதே நேரம் தான். ஆனாலும், 'ஏன் லேட்?' என்ற கேள்வியைத் தப்பாமல் கேட்பாள், மைதிலி. அதிலேயும் ஓர் ஆனந்தம், அவளுக்கு.

பட்டாபி முறுவலித்தான்: ''எப்போதும் வரும் நேரம்தானே?''

''சரி... சரி... சீக்கிரம் மேலுக்குக் கழுவி விட்டு வாங்க, சாப்பிடலாம்...''

''குழந்தைகள் சாப்பிட்டார்களா? பையில் பூப்பொட்டலம் இருக்கிறது. ஜாதிப்பூவை இப்பவே வச்சுக்க. மல்லிகையை விடிஞ்சதும் வச்சுக்கலாம். மைசூர் பாகு, உனக்குப் பிடித்த கடையிலேதான் வாங்கினேன். புதுசு என்றார்கள். கொஞ்சம் டேஸ்ட் பார்க்கறியா. நீ கேட்ட மாதிரி ஹேர்பின், மலைவாசல் முழுவதும் பார்த்தேன்; கிடைக்கலே... அடுத்த தடவை வர்றபோது டவுன்ஹால் பக்கம் பார்த்து வாங்கிட்டு வர்றேன்...'' பாத்ரூம் வரை பேசிக்கொண்டே போனான் பட்டாபி.

சோற்றில் ஆவி பறந்தது.

தாமதமாய் வருவான் என்று அவனுக்காக ஒன்பது மணிக்குப் பிறகு தனியே வடித்தது.

வெண்டைப் பிஞ்சுடன் வற்றல் குழம்பு, மிளகு ரசம்.





சங்கீதப் பிரியர்களுக்கு!

சங்கீதப் பிரியர்களுக்குப் பிடித்த மாதிரி சோபாக்களும், இருக்கைகளும் வந்துள்ளன இப்போது! படத்தைப் பாருங்கள், சிதார் மாடலில் சோபா! இதுபோல் தபலா மாடலில் பூ ஜாடிகளும், 'டிரம்' மாடலில் குப்பைத் தொட்டிகளும் கூட வந்துள்ளன.

— சம்பத்குமாரி.

ஆதாரம்: 'சொஸைட்டி.'

"அப்பளம் சுட்டிருக்கியா?"

"அப்பளம் மட்டுமா, பக்கத்துக் கொல்லையிலே சாயந்திரம் கொத்துமல்லி பறித்தார்கள். துவையல் பண்ணி இருக்கிறேன்."

அவன் விட்ட எச்சில் தட்டில் அவள் சாப்பிட்டு முடித்து, பாத்திரங்களை ஒழுங்கு படுத்திப் படுக்க வந்த போது மணி 12.25.

"நம்பி ராது இன்னிக்கு ஒரு காரியம் பண்ணினு."

"என்ன?"

"அடுத்த வீட்டுக்குப் போய் டேப் ரிகார்டரை ஆன் பண்ணி அவள் ஃபேவரிட் பாட்டு 'கடவுள் உள்ளமே... கருணை இல்லமே' என்று பாடி வச்சுட்டாள்."

"பேஷ்... பேஷ்..."

"மிச்சத்தையும் கேளுங்கள். அந்த டேப்பிலே சவுதியிலே இருக்கும் அவர்களின் பையன் பேசியது பதிவாகி இருந்ததாம். அத்தனையும் போச்சுது."

"அடடா... அப்புறம்?"

"அந்த விஷமக் கொடுக்கைப் பிடித்துத் திட்டினேன். அந்த வீட்டுக்காரர்கள் நல்ல மாதிரி; 'பரவாயில்லே. அடுத்த வாரம் அந்தப் பையனே ஊருக்கு வரப் போகிறான். நேரிலேயே குரலைக் கேட்கப் போகிறோம். குழந்தையைத் திட்ட வேண்டாம்'னு சமாதானப் படுத்திட்டாங்க."

"பரவாயில்லே."

"இவள் பண்ணுகிற லூட்டிக்குத் திருச்சியிலே இருக்கிற டேப் ரிகார்டரையாவது பத்து நாளைக்கு இங்கு கொண்டு வந்து வைத்துக் கொள்ளலாம் போலத் தோணுது. அப்புறம் இன்னொண்ணு... எதிர்வீட்டு மாமி ஆயிரம் ரூபாய் சீட்டுப்பிடிக்கிறாளாம். மாதம் ஐம்பது ரூபாய். சேரட்டுமா?"

"அடுத்த மாதம் நீ திருச்சிக்கு வந்துடுவியே."

"மாதாமாதம் மணியார்டர் பண்ணிவிட்டால் போகுது. இல்லேன்னா நீங்களும்தான் அடிக்கடி இங்கு வருவீர்களே."

"ஓ...கே..."

"ம்... ஹூம்... ச்... நாளைக்கு.. நாளைக்கு..." தயங்கினாள்.

"நாளைக்கு?"

"வேல்முருகன் தியேட்டரிலே சலங்கை ஒலியாம்."

"பார்த்ததுதானே...!"

"சொல்வீங்கன்னு தெரியும். ஆனால் அன்னிக்கு நாமெல்லாம் சலங்கை ஒலிக்கு கிளம்பறதாகத்தான் இருந்தோம். ஆனால் சாயந்தரமே விலகும்படி ஆயிடுச்சு. நீங்கள் மட்டும் தானே போயிட்டு வந்தீங்க?"

"ஆமாமாம்... அத்தையையும் அழைச்சுக்கிட்டுக் கவனமாகப் போயிட்டு வா."

எதற்கோ லேட்டைப் போட்ட மைதிலி வியந்தாள்.

"மணி இரண்டாகுதே."

"ஆயிடுச்சா?" கொஞ்சம் திகைப்பு. கொஞ்சம் அலுப்பு.

"இப்போது கிளம்பினால்தான் இரண்டரை பஸ்ஸைப் பிடிக்க முடியும். சீக்கிரம் முகம் கழுவிக்கிட்டுக் கிளம்புங்க."

"முகம் கழுவ என்ன இருக்கு? தூங்கினால் தானே கழுவணும்... உம்... அந்த பேக்கை எடு... பர்சிலே பணம் இருக்கிறதா, பார். இல்லேன்னா ரொப்பிக் கொடு."

"சரிதான். சம்பளப் பாக்கெட்டை பெண்டாட்டிகிட்டே கொடுத்திடறேன்னு ஊரிலே பேர் வாங்கிடுறீங்க. ஆனால், கொஞ்சம் கொஞ்சமா. அவ்வளவையும் கறந்துட்டுப் போயிடறீங்களே!"

"போனாலும்... திரும்ப இந்த... இந்த... பொண்ணுகிட்டதானே வர்றேன்..." நெருங்கினான்.

"உஷ்... ஷ்... போதும் விடுங்கள். வீட்டுக்குப் போயிட்டுத்தானே ஆபீசுக்குப் போவீங்க?"

"ஆமாம்.. ஏன்?"

"போனதும் முதலில் ஷேவ் பண்ணுங்கள். ம்மா... ஊசி மாதிரி குத்துது!"

திங்கள்கிழமை ஆரம்பமாயிற்று.

ஆறு பேர் அடங்கிய குழு செக்‌ஷனை ஆக்கிரமித்துக் கொண்டது.

அத்தனை கப்போர்டு கதவுகளும் விரியத் திறந்திருக்க, மொத்தை மொத்தையாய் லெட்ஜர்கள் மேசை முழுவதும் பரப்பப்பட்டன. கிளார்க் பட்டாளம், நாற்காலிக்கும் ரிகார்டு ரூமுக்குமாக ஆலாய்ப் பறந்தது.

"ப...ட்...டா...பி" கொட்டாவி விட்டுக் கொண்டே கூப்பிட்டார், சீனியர்.

"சார்."

"இந்த ஸ்டேட்மெண்டை கொஞ்சம் பாருங்களேன். மூணு தரம் டோட்டல் பண்ணினேன். மூணுவிதமான ஃபிகர்ஸ் வர்றது." மறுபடியும் கொட்டாவி.

"என்ன சார், இப்படி?"

"அதை ஏன் கேட்கிறீங்க? நேற்று வீட்டிலே பெரிய ரகளை."

"காரணம்?"

"ஐந்து மணிக்கு வீட்டுக்குப் போனேனா. வீட்டுக்காரி கோயிலுக்குப் போகணும் என்றாள். எனக்கு ஒரே அலுப்பு. "நீ மட்டும் போய்

வா' என்றேன். கழுதை, போக வேண்டியது தானே.' போகிறதா இருந்தால் இரண்டு பேருமாப் போகணும். இல்லாவிட்டால் வேண்டாம்'னு போகலே. சரி, எனக்கென்ன ஆச்சதுன்னு விட்டுட்டேன்.''

''ஆக மொத்தம் கோயிலுக்குப் போனபாடில்லே.''

''ஆமாம். சாப்பிட்டுப் படுத்தோம். தூங்கணும் இல்லையா? அவள் அத்தை பிள்ளைக்கு அடுத்த வாரம் கல்யாணமாம். எப்போது போகலாம். என்ன அன்பளிப்புச் செய்யலாம் என்று டிஸ்கஷன் பண்ண ஆரம்பிச்சுட்டாள். 'நாளைக்கு ஆடிட் நடக்கப் போறது. வேலை நெட்டி முறிக்கும். என்னைத் தூங்க விடு' என்று சொல்கிறேனே. கழுதை புரிந்து கொண்டாளா? ஊஹூம். திரும்பத் திரும்ப ஊர்ச் சேதி, உளுந்திலே புழு வச்சுட்ட ஆதங்கம்... இப்படி ஒரே ரோதனை. எனக்குத் தாங்கலே. திட்டினேன்.

''அவ்வளவுதான். அழ ஆரம்பிச்சுட்டாள். ராத்திரி முழுக்க முகாரிதான். அப்புறம் தூக்கமாவது... ஏழவாவது...''

''அடப்பாவமே!''

''பொழுது விடிந்து பார்த்தால், வெந்நீர் விளாவவில்லை. காப்பி ஒரே கசம். எனக்குப் பொறு... பொறுன்னு ஆயிடுச்சு. இட்டிலித் தட்டை ஓங்கி அடித்தாளா... எட்டி உதைச் சுட்டு வந்துட்டேன். ராத்திரி தூக்கம் போச்சுது. காலையில் மூடே அவுட்டாயிடுச்சு... சேச்சே...

''நல்ல வேளை. என் பேச்சைக் கேட்டு நீங்கள் நேற்று ஊருக்குப் போகாதிருந்தீர்கள். போயிருந்தால் நீங்களும் என்னைப் போலத்தான் ஒரு சின்ன டோட்டலைக் கூட போட முடியாமல் தடுமாறுவீங்க...''

பட்டாபி சிரித்தான்.

''ராத்திரி முழுக்க நன்றாய்த் தூங்கி இருக்கிறீர்கள். அதனால்தான் முகம் ஃப்ரெஷ்ஷா, பளிச்சுனு... சுறுசுறுப்பாய் உங்களால் வேலை செய்ய முடியுது.'

பட்டாபி தொடர்ந்து சிரித்தான்.

'இந்த மலர்ச்சியும், உற்சாகமும் ராத்திரி தூங்கியதால் வரல்லே சார்' என்று சொல்லலாமா...?

'புருஷனை வெளியில் அனுப்பிவிட்டுப் பொழுது முழுக்க வீட்டோடு அடைந்து கிடக்கும் குடவிளக்குப் போன்றவள் மனைவி. அவளுக்குக் கணவன்தான் உலகத்தைக் காட்டும் ஜன்னல். தனக்குண்டான ஆசைகளையும், அபிலாஷைகளையும் பகிர்ந்து கொள்ள கணவனைவிட்டால் அவளுக்கு வேறு யார் இருக்கிறார்கள். ஆகவேதான் வேலைக்குப் போன கணவன் வீடு திரும்பும் நாழிக்காகப் பாதையிலேயே தவம் இருக்கிறாள் அப்பேதை என்பதை சீனியரிடம் சொன்னால் என்ன...?'

'அப்பேதை மனத்தைப் புரிந்து அவள் பேசுவதை எல்லாம் கரிசனத்துடன் கேட்கவும், அவளது கோபதாபங்களுக்கு ஈடு கொடுக்கவும், மகிழ்ச்சியில் பங்கு போடவும், கோரிக்கைகளுக்கு இணங்கவும் எந்தப் புருஷனுக்குத் தெரியுமோ, அவன்தான் லட்சணமான கணவன் என்பதை இவருக்குப் புரிய வைத்தால், என்ன...?'

''என்ன மிஸ்டர் பட்டாபி, ஏன் அப்படிப் பார்க்கிறீங்க, என்னவோ குற்றவாளியைப் பார்க்கிற மாதிரி?''

'இரவோ... பகலோ... எந்த நேரமானாலும் மனைவியின் எதிர்பார்ப்புகளை, ஆசைகளை நிறைவேற்ற வேண்டிய கடமை ஒரு கணவனுக்கு இருக்கிறது. அதைப் புரிந்து கொள்வதுதான் தாம்பத்திய ரசனை. அந்த ரசனை இல்லாத ஒவ்வொரு கணவனும் குற்றவாளியே.'

''என்ன முணுமுணுக்கிறீங்க...?''

'துணைக்குத் துணையாய், நட்புக்கு நட்பாய், ஆண்டு அனுபவிக்க வந்த மனைவியைக் கழுதை என்று வர்ணித்தீர்களே... அது என்ன நியாயம்? கோயில் என்றதும் எப்படி தெய்வ சிந்தனையும், பயபக்தியும் உண்டாகிறதோ, அதைப்போல் வீடு என்றதும் மனைவியைப் பற்றிய நேச ராகம் நெஞ்சை நிரப்ப வேண்டும், சார். அதுபோல் அன்பு செலுத்தினால்தான், அதற்குப் பிரதியுத்தரமாக கனிவு, பணிவு, பாசம், பக்குவம் நிறைந்த உபசரணைகள் அவளிடமிருந்து ஏராளம் நமக்குக் கிடைக்கும். என்னதான் களைத்தாலும், எவ்வளவுதான் சோர்வடைந்தாலும் மனத்தைப் புதுப்பிக்கும் மகத்தான அமுத பானம் அதுதான். அதைப் பருகிவிட்டால், தூங்காமையா, உடல் சோர்வா அத்தனையும் இருக்கும் இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து விடும்...'

''பட்டாபி... இப்படி வெறித்துப் பார்த்தால் என்ன அர்த்தம். பேசுங்களேன்!''

பட்டாபி பேசினான்:

''அதொன்றும் சொல்கிற மாதிரி இல்லே, சார்.''

''நம்ப பாகவதர் காலத்திற்கேற்ப காலட்சேபம் செய்ய ஆரம்பிச்சிருக்கார்.''

''எப்படி?''

''முன்னே மாதிரி, 'ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே' அப்படின்னு ஆரம்பிக்கிறதில்லே. 'முன்னொரு காலத்தில் தமிழ்நாட்டில் பஞ்சாயத்து தேர்தல் நடந்த சமயத்திலே' அப்படின்னுதான் ஆரம்பிக்கிறார்.''

— வி. ந. ஸ்ரீதரன்.



சொர்க்கத்தின் கதவுகள்

7

விமலா வீடு திரும்பிச் சில நாட்கள் சென்று விட்டிருந்தன.

உடல் பாதியாகி—முகம் சுறுத்து—எழுந்து நடமாடத் தள்ளாடிக் கொண்டிருந்தாள்.

அவள் இன்னும் கொஞ்ச காலம் ஓய்விலே இருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து விட்டிருந்தார், சுவாமிநாதன்.

மனைவியின் படுக்கையைத் தட்டிப்போட்டு ஒழுங்கு செய்து அவளது அன்றாடத் தேவைகளுக்கு உதவுவது வரை — முணுமுணுப்பில்லாமல் செய்தார் அவர்.

கணவனது முன் கோபத்தையே பார்த்து வாழ்ந்திருந்த விமலாவுக்கு அவரது பொறுமை மிகுந்த வியப்பை அளித்தது.

"எதுக்காகச் சிரமப்படறேள்? வெறும் சாதத்தை மட்டும் குக்கரில் நான் மெதுவா வச்சு எடுத்துடறேனே...?" என்று சொல்லிப் பார்த்தாள், அவள்.

"கூடவே கூடாது. உன்னை ஒவ்வொரு பாகமாச் சலிச்சு எடுத்தாப்பல வியாதிகளிலிருந்து எடுத்திருக்கேன். இப்ப நான் சமைக்கிறதைத் தண்டனையா நினைச்சுப் பாரு." கேலியும் — பரிவுமாக மனைவியை அதட்டினார்.

ஒருநாள் உப்புப்போட மறந்து போய்ப் புடலங்காயைக் கூட்டு செய்து மனைவிக்குப் பரிமாறியபோது அவள் எதுவும் சொல்லாமல் சாப்பிட்டாள்.

அவர் சாப்பிட்ட போதுதான் உண்மை தெரிந்தது.

"ஏன் விமலா... கூட்டில் உப்பு இல்லை என்று சொல்லக் கூடாதா?..."

"நாக்கு ருசி மரத்துப் போச்சா"—கவலையுடன் கேட்டார்.

"உப்பில்லாத பத்தியம் இருக்கணும்னு டாக்டர் சொல்லியிருக்கிறாரோ என்னவோன்னுதான் நான் பேசாமல் இருந்து விட்டேன்...." மெதுவாகக் கூறிவிட்டுச் சிரித்தாள்.

சுவாமிநாதனுக்கு நெஞ்சில் முள் நெருடிய வேதனை.

'வீட்டு வேலைகளைச் செய்து மிகுந்த நேரத்தில் வீட்டில் பெண்கள் தூங்கிக் கொண்டிருப்பவர்கள். ஆண்கள்தான் அலுவலகத்தில் நாள் முழுவதும் போராடிக் களைத்து வீடு திரும்புகிறவர்கள்' என்று எண்ணுகிற கும்பலைச் சேர்ந்தவர் அவர்.

வீட்டில் எந்த நியதியும் தடம் புரளாமல் ஒழுங்காகச் செயல்பட வேண்டுமென்ற கெடுபிடி அவரிடம் பிடிவாதமாகவே இருந்தது. ஒருசமயம் விமலா குழம்பில் உப்புப் போட மறந்து சமைத்துவிட்டிருந்தாள்.

சாதத்தைப் பிசைந்து வாயில் போட்டுக் கொண்ட சுவாமிநாதன்... 'தூ...' என்று துப்பினார்.

"உப்புப் போட்டுத்தானே சாப்பிடறே? சமையலில் உப்புப் போடக் கூட உனக்குச் சுரணை இல்லாமல் போய் விட்டதா...?" என்று கையை உதறிவிட்டுக் கோபமாக எழுந்து விட்டார்.

விமலா நடுங்கிப் போய் விட்டாள். தன் மறதிக்காக மன்னிப்புக் கேட்டுக் கெஞ்சியும்... மனிதர் அன்று சாப்பிட மறுத்தார்.

"பரவாயில்லை... கொஞ்சம் உப்பைப் போட்டுக் கலக்கினால் சரியாயிடும்" என்று சொல்லும் பொறுமை அவருக்கு அன்று இருக்கவில்லை.

ஆனால் இப்போது அவருக்கு நிறைய பொறுமை தானாகவே வந்து விட்டிருக்கிறதே...!

"அருணா ஆஸ்பத்திரிக்கு வந்தப்போ எனக்கு நினைவு இல்லை... இப்பொழுது இன்னும் ஏன் அவள் வரவில்லை?" என்று தம் மனைவி கேட்டபோது பொங்கி எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டார்.

'விமலாவை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டேன்' என்று கடமைக்காக அவர் அருணாவுக்குப் போன் செய்திருந்தார். ஆனாலும் அவள் உடனே வந்துவிடவில்லை...

வீட்டுக்கார அம்மாள் அடிக்கடி வந்து எட்டிப்பார்த்துவிசாரித்துவிட்டுப்போனாள்.

"சமையல் செய்து கொண்டு ஏன் திண்டாடறேள்? இரண்டு பேருக்கும் சாப்பாடு அனுப்பி வைக்கிறேனே?" என்று வலிய உதவ முன்வந்தாள்.

"உள்ளூரிலேயே தம்பி வசிக்கிறான். ஒப்புக்குக் கூட அவன் எட்டிப் பார்க்க மனமில்லாது வேலை வேலை என்று அலைகிறான் — ஒரகத்திக்குக் கடைத் தெருவுக்கு அலைய முடிகிறது... இப்பொழுது விமலாவை வந்து பார்ப்போம் என்கிற கரிசனம் அவளுக்கு இல்லை... வீட்டுக்கார அம்மாளின் இரக்கத்தைத் தொடர்ந்து சுரண்டிக் கொண்டிருப்பது

நியாயமா? வேண்டாம்.—'இந்தச் சமையல் என்ன பெரிய வேலை?' என்று சொல்லி விட்டுப் பிடிவாதமாக அவள் உதவியை மறுத்து விட்டார்.

''உங்க தம்பியும் அவர் மனைவியும் வந்து பார்த்தாளோ? நான் இரண்டு நாட்களாக சாயங்காலம் வீட்டிலேயே இல்லை...'' என்று வீட்டுக்கார அம்மாள் சந்தேகத்தோடு கேட்ட போது அவர் தம் உடல் குன்றிப் போனார்.

''நான்தான் இப்போ வரவேண்டாம் — விமலாவுக்கு ஓய்வு தேவை. அருணாவைப் பார்த்ததும் ரொம்பப் பேச ஆரம்பிச்சுடு வான்னு தடுத்து வச்சிருக்கேன்'' — சட்டென்று ஒரு பொய்யைச் சொல்லி வைத்தார்.

நல்லவேளை — அவர் தொடர்ந்து பொய்கள் சொல்லத் தேவையில்லாது போயிற்று.

லக்ஷ்மி

அடுத்தவாரம்—ஒருநாள் காலை... தங்களது படகுக் காரில்... தம்பியும், அருணாவும் வந்து அவுட் ஹவுசின் வாயிலில் இறங்கினார்கள்.

வேண்டா வெறுப்பாகப் புன்னகை புரிந்தபடி தம்பி... விமலாவின் அருகே வந்து, ''எப்படி இருக்கேள் மன்னி...? எங்களையெல்லாம் ரொம்பவே பயமுறுத்திட்டேள்...'' என்று போலியான பரிவுடன் விசாரித்தான்.

அருணா கையோடு கொண்டு வந்த ஆறு சாத்துக்குடிப் பழங்களை மேஜையின்மேல் வைத்துவிட்டு — விமலாவின் வியாதி தன்னிடம் ஒட்டிக்கொண்டு விடுமோ என்ற பயத்தில் கொஞ்சம் ஒதுக்குப்புறமாகவே, தள்ளி நின்று விசாரித்தாள்.

ஒப்புக்குக் கூட ஒரு பரிவு வார்த்தை சொல்லிவிடவில்லை.

''இரண்டு பேரும் வீட்டைப் பூட்டிவிட்டு வந்து எங்களோட பத்து நாட்கள் தங்கிக் கொள்ளலாமே. விமலா மன்னிக்கு உடம்பு பூரண குணமானதும் இங்கே வந்தால் போச்சு...!''



அருணா மூச்சு விடவில்லை.

நின்று கொண்டே கணவனும் மனைவியும் சிறிதுநேரம் பேசியபடியிருந்து விட்டு..." விரைவில் விடைபெற்றுக் கொண்டு நகர்ந்து விட்டனர்.

அப்பொழுது கூடத் தம்பியோ, அவன் மனைவியோ அவரிடம் ஒன்றும் கேட்கவில்லை.

"திடீர்னு ஏற்பட்ட இந்தச் செலவை எப்படிச் சமாளித்தேள். நாங்கள் ஏதாவது உதவலாமா...?"

அதிகநேரம் நின்றால் அண்ணன் பணத்திற்கு அடி போடுவாரோ என்கிற பயம் தம்பிக்கு. மனைவியுடன் ஒரே பாய்ச்சலாகக் காரில் ஏறிக் கொண்டு... விரைந்து விட்டான்.

விமலாவுக்கு அவர்களது திடீர் வரவு கொஞ்சம் ஏமாற்றமாகத்தானிருந்தது.

இரண்டு நாட்களாக அவள் கேட்கவேண்டுமென்றுதான் தவித்துக் கொண்டிருந்தாள்.

அவள் சாப்பிடக் கொஞ்சம் பாலைக் காய்ச்சி எடுத்து வந்து அருகிலிருந்த முக்காலி மீது கணவர் வைத்த போது அவள் துணிவை வரவழைத்துக் கொண்டு கேட்டுவிட்டாள்.

"ஆஸ்பத்திரிக்கும் — மருந்துகளுக்கும் ரொம்ப செலவாகியிருக்குமே... பணத்துக்கு என்ன செய்தேள்?"

"நானும் உன்கிட்டே இதைப் பத்தித்தான் பேச இருந்தேன். நீயே கேட்டு விட்டாய்... பணம் கடன் வாங்கினேன்!" என்றார் சுவாமிநாதன்.

திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள் விமலா... "யார்கிட்டே? உங்க தம்பிகிட்டேயா?"

"பாவம்! அவன் என்ன செய்வான்? வீடு கட்டினதிலே அவனுக்குக் கொஞ்சம் கடன் ஏற்பட்டிருக்கே... எனக்குத் தெரிஞ்ச ஒரு கடைக்காரன்கிட்டே கைமாத்தா வாங்கினேன். அவன் உடனே திருப்பிக் கொடுக்கும்படி கேட்கவில்லை. ஆனால் சீக்கிரம் தந்துடணும்னு எனக்கு ஆவலா இருக்கு.

ஆபத்துக்கு உதவியிருக்கிறவாளோட பணத்தை இழுத்தடிக்கக் கூடாது."

"பாங்கில் இருக்கிற கையிருப்பு ரொம்ப கொஞ்சம். ஒரு அவசரத்துக்கு அது தேவை.."

"அதனால் என்ன... பீரோவிலே நகைகள் இருக்கே. அதிலே எதையாவது விற்றால் சமாளிக்கலாமே?" என்றாள் விமலா.

"உன்கிட்டே இருக்கிற நகையெல்லாம்— நாலு வளைகளும்— சங்கிலியும் தோடு மூக்குத்தியும்தானே... அவற்றை விற்றால்...?"

"காலம் கெட்டுக் கிடக்கு. இப்போ நிறைய நகை வச்சுக் கொண்டிருக்கிறவாளே போட்டுக்கிறதில்லே. எனக்கு இனிமேலே இதுகள் தேவையே கிடையாது. வெளியிலே கடனை வச்சுக் கொண்டு..." — இவைகளைப் பூட்டிக் கொண்டு நிற்க எனக்கு மனசே இல்லை..."

மனைவியின் சம்மதத்துடன் — அவளது நகைகளை இப்போது விற்கலாம் என்ற நினைவு அவரது மனத்தை இலேசாக்கியது.

அதற்குப்பின் அவர் அதில் தாமதம் செய்யவில்லை —

மறுநாள் மாலையே, அண்ணாசாலையிலிருந்த அந்தப் பிரபல நகைக் கடைக்குச் சென்று விமலாவின் வளைகள் நான்கையும் விற்று முதலாக்கினார்.

நாளோடு ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்த கேசவன் அவரைக் கண்டு நிமிர்ந்தான்.

"வாங்க! உட்காருங்க..." என்று பலமாக உபசரித்தான் புன்னகையுடன். எதிரே கிடந்ததொரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு தயாராக எண்ணி வைத்துக்கொண்டிருந்த பணத்தை அவனிடம் நீட்டினார்.

என்ன ஸார்... அதுக்குள்ளே கொண்டு வந்துட்டீங்க... நான் அவசரப்படலையே..." சிரித்தான் அவன்.

"நீ வாங்கிக்க அவசரப்படலே... ஆனால் நான் கொடுக்க அவசரப்படறேன்...!

"சமயத்துக்கு நீ உதவினே... ரொம்ப நன்றி. என் மனைவி இப்போ வீட்டில் இருக்கிறாள். உடம்பு தேவலே. எப்பவாவது உனக்கு ஓய்வு இருந்தா எங்கள் வீட்டுப் பக்கம் வந்துவிட்டுப் போ..." என்று கூறிவிட்டு வீட்டு முகவரியை ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி அவனிடம் கொடுத்துவிட்டுக் கிளம்பினார்.


'அப்பாடா' என்றதொரு மனநிம்மதியுடன் விமலாவைத் தனியே அதிகநேரம் விட்டு விட்டு வந்திருக்கிறதை நினைத்து ஒரு ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு... வீட்டுக்கு விரைந்தார்.

மெதுவாக எழுந்து நடமாடத் தொடங்கிவிட்டிருந்த விமலா... தோட்டத்திலே மெள்ள வளைய வந்து கொண்டிருந்தாள்.



ஜாம்ஷெட்பூரில் இருக்கும் பெரிய நிறுவனமான 'டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி'யின் அலுவலக ஊழியர்கள் யாவரும் வேலையை ஆரம்பிக்கு முன் இருபது நிமிடங்கள் கட்டாயத் தேகப் பயிற்சி செய்கிறார்கள்.

— தகவல்: சாவித்திரி மணி.



30,00,000
அன்பர்கள் அன்றுடம்
நரசூஸ் காபியை அருந்துவதே
அதன் தரத்திற்கு சான்று.
நரசூஸ்
தெர்மலோ முறை காபி!
நரசூஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ADWAVE-NCC 2956 R



வித்வான்கள் வித்யையை ஈச்வரோபாஸனையாக, அதாவது வேறு ப்ரதி ப்ரயோஜனம் எதிர்பாராமல், பேணி வளர்த்துக் கொள்ள ப்ரயத்னம் பட்டால் எப்படியாவது அவை உயிரைப் பிடித்துக் கொண்டு வ்ருத்தியாகிவிடும்; அவர்களும் உயிரைப் பிடித்துக் கொண்டு காலம் தள்ள ஈச்வரன் கைகாட்டாமல் போக மாட்டான்.

இப்படிப் பலர் இருந்துமிருக்கிறார்கள். பரமபக்தரான த்யாகையர்வாள் போன்றவர்கள்தான் ராஜ ஸம்பாவனை, பேர், புகழ் முதலியன வேண்டாம் என்று ஒதுக்கி, ஒதுங்கி அவர்கள் பாட்டுக்கு இருந்தார்களென்றில்லை. மஹாவித்வான்களிலுங்கூடப் பண வசதி, பாராட்டு, பிராபல்யம், வேண்டாம் என்றே இருந்தவர்களுண்டு.

வித்வானாக இருக்கிறவர் பணத்தைத் தள்ளுவதை விடப் பாராட்டைத் தள்ளுவது ச்ரமம். தனக்கு நல்ல புத்தி இருக்கிறது, நிறையத் தெரிந்து கொண்டிருக்கிறோம், ஆராய்ச்சி செய்து பெரிசாக எழுதியிருக்கிறோமென்றால் உடனே இதை லோகம் 'ரெகக்னைஸ்' செய்ய வேண்டும், தம்மைப் புகழ வேண்டும், மரியாதை பண்ண வேண்டும் என்ற எண்ணங்களும் ஏற்பட்டு விடுகின்றன. ஒரேயடியாக வித்யா கர்வம் ஏறி, இந்த உலகத்துக்கு நம்மைப்புரிந்துகொள்ள சக்தி உண்டா, நம்மைப் பாராட்ட அதற்கு யோக்யதை உண்டா என்று நினைக்கிற அளவுக்கும் சில வித்வான்கள் போய் விடுகிறார்கள். ஆதலால் அவர்கள் வித்வத்துக்காகப் பாடுபடுகிறது போலவே, அல்லது அதை விடவும், அதோடு கூட விநய ஸம்பன்னர்களாவதற்கும் பாடுபட வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

"ரொம்ப சீக்கிரம் திரும்பிட்டேளே... நீங்கள் வருவதற்கு நாழியாகும்னு நினைச்சேன்!" என்றாள் புன்முறுவலுடன்.

"உனக்குச் சாப்பிட எதுவும் தரலே... நீ தனியா இருப்பே. மயக்கம் வந்து விழுந்து விடுவாயோன்னு பயந்து ஓட்டமும் நடையுமா வர்றேன். நீ தோட்டத்திலே உலாத்தறே... கால் ரொம்பவே முளைச்சிருக்கு..." வேடிக்கையாகக் கூறியபடி... வீட்டுக்குள் நுழைந்தார்.

"உங்களுக்கு ஒரு சந்தோஷமான சங்கதி..."

வியப்புடன் திரும்பினார் சுவாமிநாதன்.

"உங்க பொண்ணு கடிதாசி போட்டிருக்கிறாள்." மாலை தபாலில் வந்த வெளிநாட்டு ஆகாயத்தபாலை அவரிடம் நீட்டினாள் விமலா.

பரபரப்புடன் சுவாமிநாதன் பிரித்தார். ஐஸ்வரியா எழுதியிருக்கும் கடிதத்தைக் கண்டதுமே அவருக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி.

தம்பி மகளைத் தம் குழந்தையாக ஆசையுடன் வளர்த்தவர். அந்தப் பாசம்.

"அன்புள்ள பெரியப்பாவுக்கு, ஐஸ்வர்யா அநேக நமஸ்காரம். பெரியம்மா உடம்பு பற்றிக் கேள்விப்பட்டேன். அன்ன ஆகாரமின்றி நர்ஸிங் ஹோமில் ரொம்ப அபாயகரமான நிலையில் இருந்தாள் என்றும், இப்போ கொஞ்சம் தேவலை என்றும் செய்தி கிடைத்தது.

"உடனே வந்து பெரியம்மாவையும் — உங்களையும் பார்க்கணும் போல மனம் தவித்தது.

"இப்போ பெரியம்மா எப்படி இருக்கா? நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். டாக்டருக்கும் — மருந்துக்கும் பணம் தேவைப்பட்டால் நான் உடனடியாக அனுப்பி வைக்கிறேன். இன்னொரு முக்கிய சங்கதி. அடுத்த மாதக் கடைசியில் நான் குழந்தையுடன் ஊருக்கு வருகிறேன்.

"பெரியம்மாவைப் பார்க்கவும் — அதே சமயம் உங்களிடம் எனது சொந்தப் பிரச்னை ஒன்றைப் பற்றிக் கலந்து ஆலோசிக்கவும். நான் அங்கே வரப் போகிறேன்... மற்றவை நேரில் — அன்புள்ள ஐஸ்வர்யா..."

கடிதத்தை இரண்டு முறை படித்தார். ஐஸ்வர்யா குறிப்பிட்ட பிரச்னை என்னவாக இருக்கும்?

"குழந்தை என்ன எழுதியிருக்கா?" ஆவலுடன் கேட்டாள் விமலா.

"ஐஸ்வர்யா அடுத்த மாசம் இந்தியாவுக்கு வரப் போறாளாம். உன்னை வந்து பார்க்க ஆசையா இருக்காம்...!"

"என்னைவிட உங்களைப்பார்க்கக்குழந்தை ரொம்பவே ஆசைப்படுவாள். அது நியாயந்தான். பெரியப்பா தன்பக்கம் இருந்து பேசி— ஒரு வழியாகக் குழப்பத்தைக் கலைச்சு — தனக்கு வாழ்வு தேடிக் கொடுத்தார்னு உங்க மேலே அவளுக்கு ரொம்ப... விசுவாசம்...!"

சுவாமிநாதன் பதில் பேசவில்லை. அவர் மனத்தை இனம் காணாத ஒரு கவலை... லேசாக வருடத் தொடங்கியது...

(தொடரும்)



சௌ. பாரதி — சிர. சுப்ரமணியன்.

காஞ்சிபுரம் ஸ்ரீ ராமா லாட்ஜ் மற்றும் கூட்டு நிறுவனங்களின் பார்ட்னரும் எழுத்தாளருமான திரு. V.R. கோபாலகிருஷ்ணன் (வியார்ஜி) அவர்களின் புதல்வியும், திரு. V.G. ராமசுவாமி அய்யர் அவர்களின் பேத்தியுமான சௌ. பாரதி (என்கிற) சீதாலக்ஷ்மிக்கும் பாலக்காடு தத்தமங்கலம் திரு. T.S. ராமய்யர் குமாரர் சிரஞ்சீவி பானு (என்கிற) சுப்ரமணியனுக்கும் சென்னை நுங்கம்பாக்கம் கதீட்ரல் சாலை ஸ்ரீ ராமா கல்யாண மண்டபத்தில், சென்ற 29.11.85ல் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. 28ம் தேதி நடைபெற்ற நிச்சயதார்த்தம், மற்றும் கலைமாமணி ஸ்ரீ குன்னக்குடி வைத்யநாதன் குழுவினரின் இன்னிசைக்கும், 29ம் தேதி காலை முகூர்த்தம், மாலை நடைபெற்ற வரவேற்புக்கும், சங்கீத கலாநிதி ஸ்ரீமதி M.S. சுப்புலக்ஷ்மி குழுவினரின் இன்னிசைக்கும், 30ம் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெற்ற வரவேற்புக்கும் திரு. A. V. ரமணனின் மெல்லிசை நிகழ்ச்சிக்கும், உறவினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், நண்பர்கள், திரளாக வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்தும், பரிசுகள் வழங்கினர். வாழ்க—மணமக்கள்.



21. அன்னையின் ரக்ஷை! அக்னிப் பரீட்சை!

திருமண தினத்தன்று இரவில் எந்தப் பெண்ணும் என்ன இன்பநிலையை எதிர்பார்ப்பாளோ அதை எதிர்பார்த்த சித்தரஞ்சனி, கௌதமிபுத்திரன் பதிலால் பெரும் ஏமாற்றத்தையே அடைந்தாள். சண்டி ஹோமத்திற்குப் பிறகு தாபிலேசுவரர் கோவிலுக்கு வந்து உணவருந்திய பிறகு கோவில் உள்மண்டபத் தூணில் சாய்ந்தவண்ணம் கௌதமிபுத்திரன் ஏதோ தீவிர யோசனையில் இறங்கி விட்டதைக் கண்ட புதுமணப் பெண்ணான சித்தரஞ்சனி அந்த யோசனை தன்னைப் பற்றியதாகத்தான் இருக்கும் என்ற மனப்பூரிப்பில் என்ன யோசிக்கிறீர்கள் என்று வினவியதும், குறிப்பறிந்து சேனாதிபதியும் அப்புறம் சென்று விட்டதையும் கவனித்ததும், தனது கையைக் கணவனது கையோடு இணைத்துக் கொண்டாள். ஆனால் இரவு தான் எதிர்பார்த்ததுபோல் இருக்காது என்றும், பெருத்த அபாயத்தை எதிர்பார்ப்பதாகவும் சதகர்ணி சொன்னதும் ஏமாற்றத்தையும், ஏமாற்றத்தால் ஏற்பட்ட துன்பத்தையும் அடைந்த சித்தரஞ்சனி "என்ன அப்பேர்ப்பட்ட அபாயம்?" என்று கேட்டதும் அவன் சொன்ன பதில் அவளைத் திகைக்க வைத்தாலும் அவள் அவன்மீது சாய்ந்து கொண்டு சொன்னாள்: "நாகபாணனை நீங்கள் அளவுக்கு அதிகமாக எடை போடுகிறீர்கள்" என்று.

"இல்லை சித்தரஞ்சனி. க்ஷஹரத இனத்தைச் சேர்ந்த நாகபாணன் அபராந்தா முழுவதையும் மகாராஷ்டிரத்தையும் கைப்பற்றியிருப்பவன். அவனைக் குறைவாக எடை போடுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். எத்தனையோ வெற்றிகளைக் கண்டிருக்கும் நாகபாணன் இந்த ஒரு தோல்வியைக் கண்டு அஞ்ச மாட்டான். ஆகையால் நாம் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்" என்று கூறிய சதகர்ணி மீண்டும் கண்களை மூடிச் சிந்தனையில் ஆழ்ந்தான்.

அப்படியும் மனம் சமாதானப்படாததால் அவன் கையுடன் தனது கையை மேலும் பிணைத்துக் கொண்ட சித்தரஞ்சனி, "முதல் கோணல் முற்றும் கோணல் என்றொரு தமிழ்ப் பழமொழி உண்டு" என்றாள்.

''தெரியும் எனக்கு'' என்றான் சதகர்ணி.

''முதல் நாளே ஏற்படும் வாழ்க்கைத் தடங்கல் மேலும் தொடர்ந்தால்?'' என்று கேட்டாள் சித்தரஞ்சனி.

''தொடராது.'' இதைத் திட்டமாகச் சொன்னான் சதகர்ணி.

''அதை எப்படி அத்தனை திட்டமாகச் சொல்கிறீர்கள்?'' என்று சித்தரஞ்சனி வினவினாள்.

''அபராந்தாவுக்கும் மகாராஷ்டிரத்துக்கும் தக்ஷிணதேசம் முழுமைக்குமே நான் சக்கரவர்த்தியாக வேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கிறது'' என்ற சதகர்ணி, ''அதுமட்டுமல்ல சித்தரஞ்சனி! என் தாயின் ஆசையும் லட்சியமும் அதுதான்'' என்று அழுத்திச் சொன்னான்.

''உங்கள் தலையெழுத்தை நீங்கள் பார்க்க முடியாது. உங்கள் தாயின் ஆசையும் நிறைவேறுமென்பது என்ன நிச்சயம்? ஆசை நிராசையானால்?'' என்று கேட்டாள் சித்தரஞ்சனி. அவள் குரலில் துன்பம் தோய்ந்து கிடந்தது.

கௌதமிபுத்திரன் மெல்லப் புன்முறுவல் கொண்டான். ''சித்தரஞ்சனி! சந்தேகம் மனிதனின் முதல் சத்ரு. தவிர என் தாயின் வாக்கு தெய்வ வாக்கு. அவள் சொன்னது இதுவரை பொய்யானதில்லை. என் தந்தை போர்க்களத்தில் இறப்பார் என்று அவள் தான் சொன்னாள். இந்தப் பிசாசு விஷயத்தை ஆராய என்னை அனுப்பியவளும் என் தாய் தான். இதோ என்னிடமிருக்கும் இந்த ரக்ஷையைப் பார்,'' என்று கச்சையில் பத்திரப் படுத்தியிருந்த ரக்ஷையைக் காட்டினான்.

''இது என்ன செய்யும்?'' அதைக் கையில் வாங்கி வைத்துக் கொண்டு திருப்பித் திருப்பிப் பார்த்தாள் சித்தரஞ்சனி.

''ரக்ஷிக்கும். அதனால்தான் ரக்ஷை என்று சொல்கிறோம்'' என்றான் சதகர்ணி.

''என் தாயின் பெயர் கௌதமி பாலஸ்ரீ'' என்றும் சொன்னான்.

''அதனாலென்ன?''

''பெயருக்குத் தகுந்த சக்தியுள்ளவள். பாலா உபாசினி. சக்தியை உடையவள். அவள் கையினால் ரக்ஷை வாங்கிக் கொள்ள எத்தனையோ வீரர்கள் *பிரதிஷ்டானவுக்கு வருகிறார்கள். சாகர்களின் முன்னேற்றம் தடைப்பட்டதற்கு என் தாய்தான் காரணம் என்று பிரதிஷ்டானவில் அனைவரும் நம்புகிறார்கள். அவளைச் சாதாரணமாக நினைக்காதே. அவள் தெய்வம்'' என்று தாயை

சாண்டில்யன்

நினைத்து உணர்ச்சிவசப்பட்டான் கௌதமி புத்திரன்.

சித்தரஞ்சனி அதற்குமேல் கேள்வி எதுவும் கேட்கவில்லை. கேள்வி எதுவும் பயன் படாது என்ற காரணத்தால். கண்களை மறுபடியும் மூடிவிட்ட சதகர்ணி நீண்ட யோசனைக்குப் பிறகே கண்விழித்தான்.

சித்தரஞ்சனியும் அதற்குமேல் ஏதும் பேசவில்லை. தூணில் அவன் பக்கத்தில் தானும் சாய்ந்து அவன் உடலுடன் தனது உடல் உராயச் சிந்தனை வசப்பட்டு உட்கார்ந்திருந்தாள். கண்ணை விழித்ததும் அவளைத் திரும்பிப் பார்த்த கௌதமிபுத்திரன் சித்தரஞ்சனி அருகில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, ''சித்தரஞ்சனி! இன்றிரவில் நல்ல நிலவிருக்கும்'' என்றான்.

அவன் எதற்காக அதைச் சொல்கிறான் என்பதை அறியாத சித்தரஞ்சனி, ''நீங்கள் பேசுவதெல்லாம் புதிராக இருக்கிறது. நிலவிருக்கும். இருந்தால் என்ன? அதனால் நமக்கென்ன பலன்?'' என்று கேட்டாள்.

''நாம் தூங்காதிருக்கலாம். நிலவில் பயணம் செய்யலாம். எத்தனையோ விதமாக இன்பமாக இரவைக் கழிக்கலாம்'' என்றான் சதகர்ணி.

சித்தரஞ்சனி பதிலேதும் சொல்லாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். அந்தச் சமயத்தில் தலைநீட்டிய சேனாதிபதி, ''புரவிகள் சித்தமாயிருக்கின்றன'' என்று பணிவுடன் தெரிவித்துக் கொண்டான்.

''இன்னும் நேரமிருக்கிறது. சந்தியா காலப் பூஜை முடியட்டும்,'' என்றான் சதகர்ணி. ''சித்தரஞ்சனி! எனது பட்டுகளை எடுத்து வை. நான் நீராடிவிட்டு வருகிறேன்'' என்றான்.

''இதுதான் என் வேலையா?'' என்று சீறினாள் சித்தரஞ்சனி.

''பூஜைக்குஉதவுவதுமனைவியின்முக்கிய கடமை'' என்று சுட்டிக்காட்டினான் சதகர்ணி.

''பூஜைப் பாத்திரங்களைத் துலக்கட்டுமா? மணியைச் சுத்தம் செய்யட்டுமா?'' என்று எரிச்சலுடன் கேட்டாள் சித்தரஞ்சனி.

''பாத்திரம் மணி எல்லாம் சேனாதிபதியின் பொறுப்பு'' என்று கௌதமிபுத்திரன் சொல்லிவிட்டு, ''சேனாதிபதி! இங்கு நீ கவ

சித்தரஞ்சனி

னித்துக் கொள்'' என்று எச்சரித்துவிட்டுத் தனது வாளை எடுத்துக் கொண்டு வெளியே சென்றான் சதகர்ணி.

கௌதமிபுத்திரன் மலைப்பகுதியில் கிளம்பிக் கொண்டிருந்த அதே சமயத்தில் நாகபாணனும் அஞ்சன்வேல் கோட்டையிலிருந்து கிளம்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனைத் தொடர முற்பட்ட காஷ்டானனை நோக்கிய நாகபாணன், ''எங்கு வருகிறாய்?'' என்று வினவினான் எரிச்சலுடன்.

''தாங்கள் எங்கு போகிறீர்கள்?'' என்று காஷ்டானன் வினவினான்.

''போகும்போது எங்கே போகிறேனென்று கேட்கக் கூடாது என்று உனக்கு எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்?''

''கேட்காவிட்டால் நீங்கள் போகுமிடத்தைத் தெரிந்து கொள்வது எப்படி?'' என்று காஷ்டானனும் கேட்டான்.

பகலில் காஷ்டானன் காட்டிய முட்டாள் தனத்தை எண்ணிப் பார்த்த நாகபாணன் சினத்தின் எல்லையை அடைந்தான் அந்த நேரத்தில். பகல் காட்சி அப்பொழுதும் அவன் கண்முன்னால் நின்று கொண்டிருந்தது. க்ஷத்ரபன் காஷ்டானன் பின் தொடர ஐம்பது வீரர்களுடன் படகுகளில் திரும்பியதையும், அந்த வீரர்களில் சிலர் காயமடைந்து தள்ளாடி வந்ததையும் கோட்டை மீதிருந்தே கவனித்த நாகபாணன் தனது முயற்சி தோல்வியடைந்ததைப் புரிந்து கொண்டதால் வேகமாகக் கீழே இறங்கி வந்தான். க்ஷத்ரபன் தன்னை அணுகியதும் அணுகாததுமாக, ''எங்கே சித்தரஞ்சனி? எங்கே சாதவாகனன்?'' என்று வினாக்களை வீசினான்.

''தப்பி விட்டார்கள்,'' என்றான், க்ஷத்ரபன்.

''நீ அழைத்துப் போன ஐம்பது வீரர்கள்...'' வாசகத்தை முடிக்கவில்லை நாகபாணன். முடிக்காத நிலையே அவன் வெறுப்பையும் சினத்தையும் காட்டியது.

க்ஷத்ரபன் பேசுமுன்பு காஷ்டானன் முன் வந்து, ''அங்கு நடந்தது வீரர் போரல்ல'' என்றான்.

''வேறென்ன போர்?'' நாகபாணன் குரல் சாந்தமாயிருந்தது. அது மயானத்தின் சாந்தத்தை ஒத்திருந்தது.

''கிராமவாசிகள் எதிரியின் துணைக்கு வந்தார்கள். மரங்களின் மறைவிலிருந்து பெரும் கற்களை வீசினார்கள். பல வீரர்களின் மண்டைகள் உடைந்தன,'' என்று காஷ்டானன் விளக்கினான்.

''நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?''

''சேனாதிபதி தான் தப்ப என் உதவியைப் பெற்றுக் கொண்டான்.''

''உன் உதவியைப் பெற்றுக் கொண்டானா?''

''ஆம். தான் தப்ப என்னைத் தனக்கு முன்பாகப் பிடித்துக் கொண்டான். அதனால் வில்லவர் வாளிகளை எய்யவில்லை.''

''ஓகோ?''

''பிறகு நான்...''

''மாப்பிள்ளையாக இருந்தாய்?''

''இல்லை. சதகர்ணி என்னை மாப்பிள்ளைத் தோழனாக ஆக்கிக் கொண்டான்.''

''மாப்பிள்ளை யார்?''

''அவன்தான்.''

இதைக் கேட்டதும் பயங்கரமாக நகைத்த நாகபாணன், ''நன்று! நன்று!'' என்று நகைப்பின் ஊடே சிலாகிக்கவும் செய்தான்.

பிறகு சொன்னான், அவனுக்கும் பேசாமலே நின்ற க்ஷத்ரபனுக்கும்: ''இன்னும் ஒரே ஒரு சந்தர்ப்பம் தருகிறேன், சதகர்ணியையும், சித்தரஞ்சனியையும் கூட்டிக் கொண்டு வர. அதில் நீங்கள் தோல்வியடைந்தால் உங்களைத் தூக்குப் போட்டுவிடுவேன்'' என்று உறுமிவிட்டு, ''இரவு கோட்டையில் எனது அறைக்கு வாருங்கள்'' என்று உத்தரவிட்டு நடக்க முற்பட்டவனை க்ஷத்ரபன், ''அந்த சண்டி ஹோமம் மக்களின் பயத்தை அகற்றிவிட்டது'' என்று மெதுவாகச் சமாதானம் சொல்லத் துவங்கினான்.

''சண்டி ஹோமம் அதற்காக மட்டும் ஏற்பட்டதல்ல. அந்தப் புகை யமப்புகை. க்ஷத்ரபா! கடற்கொள்ளைக்காரர்கள் தங்கள் இருப்பிடத்தைச் சகாக்களுக்குத் தெரியப் படுத்தவும் இம்மாதிரிப் புகை கிளப்புவார்கள். அதைத்தான் செய்கிறான் சதகர்ணி.

தவறைத் திருத்திய நிருபர்



நகைச்சுவை எழுத்தாளர் 'மார்க் ட்வைனை' ஒரு நிருபர் பேட்டி கண்டபோது, ''நான் இளைஞனாக இருந்த போது ஜனாதிபதி மேடிசன் என்னிடம் சொன்னார்...'' என்று அவர் எதையோ கூற நினைத்த போது நிருபர் குறுக்கிட்டு, ''மேடிசன் ஜனாதிபதியாக இருந்த போது நீங்கள் பிறந்திருக்கவே மாட்டீர்களே?'' என்றதும் மார்க்ட்வைன் கூறினார்:

''அச்சுக்குப் போகுமுன் தவறைத் திருத்திய முதல் நிருபர் நீங்கள்தான் என்று நினைக்கிறேன்!''

— வெங்கட்ராமன்.

யாரையோ அழைக்கப் பார்க்கிறான். அது யார்? தனி மனிதனா? தனிப் படையா? எனக்குப் புரியவில்லை. ஆனால் நாம் சீக்கிரம் சாதவாகனனை அழிக்காவிட்டால் அவன் நம்மை அழித்துவிடுவான்'' என்று சொன்ன நாகபாணன், நேரே ஆற்றங்கரையை நோக்கிச் சென்றான். அங்கிருந்து ஒரு படகை எடுத்துக் கொண்டு தானே துடுப்புகளைத் துழாவி தனது கப்பலுக்குச் சென்றான்.

அன்று இரவின் ஆரம்பத்தில் திரும்பிக் கோட்டைக்கு வந்த நாகபாணன், தனது அறைக்கு க்ஷத்ரபனையும் காஷ்டானனையும் வரவழைத்து, சாதவாகனனை அழிக்கப் பயங்கரத் திட்டமொன்றை விளக்கினான். ''நன்றாகக் கேளுங்கள். கௌதமிபுத்திரன் கிராமவாசிகள் அனைவரையும் மலைப்பகுதியில் குடியேற்றிவிட்டால் நான்கு நாட்களில் நான் இங்கு எதிர்பார்க்கும் நமது மரக்கலங்களில் வரும் நமது படைகளை மலைப்பகுதியில் இறக்கித் தளம் அமைக்க முடியாது. ஆகவே இன்று நாளைக்குள் நாம் திட்டமான முடிவுகளைக் காணவேண்டும். சில வீரர்களுடன் க்ஷத்ரபர் சென்று மலைக்காட்டின் தனிப் பகுதிஒன்றில்தீவைக்கட்டும். அதை அணைக்க மக்கள்கூட்டமாகவருவார்கள். அப்பொழுது அவர்களை மடக்கி அழித்துவிடுவோம். அந்தத் தீயைச் சமாளிக்கவும் மக்களைக் காப்பாற்றவும் கௌதமிபுத்திரன் விரைந்து வருவான். அந்த நேரத்தில் கோவிலுக்கு காஷ்டானன் சில வீரர்களுடன் சென்று சித்தரஞ்சனியையும் சேனாதிபதியையும் பிடித்து வரட்டும். ஒருவேளை கௌதமிபுத்திரன் தப்பினால் சித்தரஞ்சனியை வைத்து அவனைப் பிடிக்கலாம், ஆட்டை வைத்துப் புலியைப் பிடிப்பது போல'' என்று மகா க்ஷத்ரபன் கூறினான், குரூரமான புன்முறுவலும் கொண்டான்.


அவன் திட்டப்படியே க்ஷத்ரபன் இருபது வீரர்களுடனும் காஷ்டானனுடனும் கிளம்பினான் அக்கரைக்கு. அக்கரையில் இறங்கியதும் பத்து வீரர்களைக் காஷ்டானனுடன் கோவிலை நோக்கி அனுப்பிவிட்டுத் தான் பத்து வீரர்களுடன் மலைக்காட்டின் ஒதுக்குப்புறமான ஒரு பகுதிக்குச் சென்றான்.

தாபோல் மலையின் ஒரு தனிப்பகுதி அது. மரங்கள் மிக அடர்த்தியாயிருந்தாலும் இரண்டு மூன்று பெரும் பாறைகள் மீது அவை தனிப்பட முளைத்திருந்ததால் காடு முழுவதும் தீப்பிடிக்காது என்ற முடிவுக்கு வந்தான் க்ஷத்ரபன். ''காடு முழுவதும் தீப்பிடிக்க விடாதே. அப்படித் தீப்பிடித்தால் பேரழிவு ஏற்படும். பிறகு மக்கள் நம்மைத் தூற்றுவார்கள். அக்கம்பக்க நாடுகளும் இந்த மாதிரி நாசத்தைச் சகிக்க மாட்டார்கள்'' என்று எச்சரித்திருந்தான் நாகபாணன்.

அதை மனத்தில் கொண்ட க்ஷத்ரபன் பெரும் அக்கினியை ஏற்படச் செய்வதும், பீதியை அளிக்க வல்லதும், ஆனால் மலைக் காடு முழுவதையும் கொளுத்தாததுமான அந்தத் தனிப்பகுதியைத் தனது திட்டத்துக்குத் தேர்ந்தெடுத்தான். அடுத்து பந்தங்களைக் கொளுத்த உத்தரவு பிறப்பித்தான். நான்கு பந்தங்களைக் கொளுத்திய நான்கு வீரர்களை நோக்கி, ''உம் வையுங்கள் தீயைச் சற்று பட்ட கிளைகளாகப் பார்த்து'' என்று உத்தரவிட்டான்.

பந்தங்களை ஏந்திய வீரர்கள் உலர்ந்து கிடந்த சில கிளைகளை நோக்கி நடந்தார்கள். முதல் பந்தத்தின் ஜ்வாலை உலர்ந்த ஒரு கிளையுடன் சம்பந்தப்பட்டது. அடுத்து அந்தக் காட்டில் பிரளயாக்கினி பரவும் என்று நினைத்த க்ஷத்ரபன் குதூகலித்தான்.

(தொடரும்)


சங்கீதச் சி
பாடறியேன்.. பாட்டறியேன் பள்ளிக்கூடம் நானறியேன்!
எல்லாம் இந்த பாலசந்தராலே வர்ற வினை!.. சபாவிலேயே 'சிந்து பைரவி' சினிமாவா?
வித்வான் சார், யாரோ உம்ம எதிரி வெடிகுண்டுப் புரளி கிளப்பி விட்டிருக்கான்! ஒரு ஈ, காக்கை காணோம்!
நீ கேக்கற பணத்தைக் கொடுத்துடறேன்.. நீ கடத்திக்கிட்டுப் போன பாகவதரை விட்டுடு!
பணம் யாருக்கு வேணும்! சபாவிலே அவர் கச்சேரியைக் கான்சல் செய்யாத நான் விடுவேன்!
இவர் பாடற அமிர்தவர்ஷணிக்கு இப்படி சொட்டு சொட்டாத்தான் வடியும்! பின்னே என்ன கொட்டோ கொட்டுன்னு மழை கொட்டுமாக்கும்!...
பாகவதர் என்ன, சிஷ்யனையே பாடச் சொல்லிக்கிட்டிருக்காரு!


நீங்க 'பேகடா' பாடுனது தப்பு! ரசிகர்களுக்கு பக்கோடா ஞாபகம் வந்து கான்டீனுக்கு ஓடறாங்க!
மார்கழி மாத பஜனை டெமான்ஸ்ட்ரேஷன்! குளிர்க்காத்து வேருந்து ஆரம்பிக்கிறீர்!
மார்கழி மாத பஜனை டெமான்ஸ்ட்ரேஷன்
இவ்வளவு பக்கவாத்ய கோஷ்டி வெச்சுக்கிட்டு தனி ஆவர்த்தனம் விடாதீங்கன்னேன்! கேட்டீங்களா?
பாடுறதுக்கும் சுருதிக்கும் ரொம்ப தூரம்!
இன்னிக்கு கச்சேரி ஏகப்பட்ட அமர்க்களம்! ஏகப்பட்ட காயங்கள்..
காதல் அம்புகளா?

தனித்துப் போகும் நாதங்கள்

தனது கணவன் மாலை வீடு திரும்பியதும், அதிகமாகப் பேசாமல், அதிகமாக எதிலும் பட்டுக் கொள்ளாமல், ஈஸிசேரில் சாய்ந்து விடுவது, பிரபாவைப் பொறுத்த வரையில் முதலில் எந்தவிதக் கிலேசத்தையும் ஏற்படுத்தவில்லை. ஈஸிசேரில் சாய்ந்த பிறகு, இவளாக ஏதாவது கேட்டால்தான் — அதுவும் கேள்வி முக்கியமாக இருக்கும் பட்சத்தில் மட்டும் — ஓரிரு வார்த்தைகளில், அல்லது மௌனமாகத் தலை அசைத்து, எனும்படியாக அவருடைய பதில்கள் முடிவு கொள்ளும்.

எப்போதும் ரசித்து வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருப்பார்; பன்னீர்ப் புகையிலை போடுவார். இரவு எட்டு மணிக்குச் சாப்பிட உட்காருவார். ஒன்பது மணிக்கு ஆங்கிலத்தில் செய்தி கேட்டு முடித்துவிட்டுப் படுத்து விடுவார்; அப்படிப் படுத்துக் கொள்ளாவிட்டால், இரவு நெடுநேரம் ஈஸிசேரில் சாய்ந்திருப்பார். மனம் எதையோ பின்னிக் கொண்டிருப்பது போல், ஒருவிதமாக அவர் லயித்துத் தென்படும்போது, அவளுக்கு அவர் ஒரு புதிராகக் காட்சி அளிப்பார். அந்தப் புதிரை விடுவிக்கும் ஒரு வேட்கை அவளிடம் ஏற்படாது.

பிரபாவுக்கு இருபத்தொன்பது வயது ஆகிறது. தலையில் நரை பெரிதாகக் கிளம்ப ஆரம்பித்து விட்டது. இத்தனை வயதில் அவள் ஆண் — பெண் உறவைப் பற்றி அவ்வளவாக — தீவிரமாகச் சிந்தித்ததில்லை. வீட்டில் பொறுப்பும், பணம் பண்ணித் தரவேண்டும் என்கிற நிலையும், இதையெல்லாம் சிந்திக்க ஒட்டாமல் தடுத்திருந்தது. வீட்டுப் பிடுங்கல் ஓய்ந்து, இவள் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கும்போது, வாழ்க்கையில் பிடிப்பு என்பது, — தீவிரப் பிடிப்பு என்பது விடுபட்டிருந்தது. கூட்டில் இருந்த பறவைகளுக்கு இறக்கை முளைத்தது போல், தம்பி, தங்கைகள் வீட்டை விட்டுப் போனதும், தாயையும், தகப்பனையும், கடைசியாக எரியும் தீயில் இட்ட பிறகு, இனிமேலும் வயது ஆக ஆகத் தனிமை கொல்லும் என்று பயந்து, மணப்பெண் வேண்டி, விளம்பரம் செய்திருந்த மூன்று, நான்கு விளம்பரங்களுக்கு விண்ணப்பித்து, சென்று பார்த்துக்கொண்டதில், கடைசியாக இவரிடம் இவளுக்குப் பிடிப்பு ஏற்படக் கல்யாணம் நடந்தது.

பிரபாவக்குக் கல்யாணம் ஆகி ஒரு வருட



மும் சில மாதங்களும் ஆகியிருக்கின்றன. அவளுடைய கணவன் பெயர் ராமசந்திரன். பத்து வருடங்களுக்கு மேலும், வங்கியில் கிளார்க்காக இருந்துவருகிறார். 'ஏன்?' என்று அவள் கேட்டுப் பார்த்தாள். (கல்யாணத்திற்குப் பிறகுதான்) பதில் இல்லை.

சில சமயங்கள், அவர் மௌனம் சாதிப்பது அவளில் சிறிதே எரிச்சலை ஏற்படுத்தும். கல்யாணத்திற்குச் சிறிது முன்பே கூட அவரைப் பற்றி ஒரு விஷயத்தில் அவளுக்கு எரிச்சல் ஏற்பட்டது.

அப்போது அவள் திருச்சிராப்பள்ளியில் ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினியாக வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். தனக்கு, வேலையை விட மனத்திற்குக் கஷ்டமாக இருப்பதாகவும், இவர் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றிக் கொண்டு வர முடியுமா எனவும் கேட்டதற்கு, ''அதற்கென்ன?'' என்றவர் — ''இரண்டு மாதம் இதற்குத் தேவைப்படும்'' என்று சொன்னவர், இரண்டு மாதங்கள் கழித்து வந்து, ''நான் திருச்சிக்கு மாற்றிக் கொள்ளவில்லை. நீ மெட்ராஸுக்கு வந்துவிடு'' என்றார்.

''ஏன், மாற்றல் கிடைக்கவில்லையா?'' என்றாள் பிரபா.

''அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை.''

''பின்?''

''எனக்கு இஷ்டமில்லை'' என்றார் அவர்.

ஏதோ இனம் புரியாத விதத்தில் உடம்பில் சூடு பறக்க அவள், ''எனக்கும் வேலையை விடச் சம்மதம் இல்லை என்றால்?'' என்றாள்.

''உன் இஷ்டம்'' என்று சொன்னவர் தன்னிடத்திலிருந்து எழுந்து கொண்டார். இரண்டு, நான்கு அடிகள் அவர் நடந்திருப்பார். இவள் ஹிருதயத்தில் ஏதோ துணுக்குற, அவர் முன் சென்று வழிமறித்தாள்.

'கல்யாணம் திருச்சியில்தான் நடந்தது. அவள் அவருடன் மதராசுக்கு வரும்போது, அந்த அதிகாலை வேளையில், ஜன்னல் பக்கம் உட்கார்ந்திருந்தவள், தாம்பரத்திலிருந்து ரயில் புறப்பட்டதும் எழும்பூர் வரை நிற்காது ஓடியபோது அவளில், ஐந்து வருடங்கள் முன்பு, கடைசியாகப் பயிற்சி தொடராமல், ஏங்கி ஏங்கி மடிந்த சங்கீதம் உயிர்க்க ஆரம்பித்ததைத் தரிசித்தாள். திரும்பியவள், சாந்தமாகத் தூங்கும் அவள் கணவன் முகம், உயிர்க்க ஆரம்பித்த சங்கீதத்துடன், சோகமாகக் கலப்பதை இனங்கண்டாள். ராமசந்திரனுக்கு அப்போது முப்பத்தைந்து வயது.

பிரபா, பட்டினம் வந்து ஆறு மாதங்களில் வீட்டில் எப்போதும் உட்கார்ந்திருப்பது என்பது ரொம்பவும் வாட்ட, முக்கியமாக, மத்தியான வேளைகளில் நேரத்தைக் கழுத்தை முறித்துப் போட வேண்டும் என்கிற நிலை ரொம்பவும் பாதிக்க, ஒருநாள், ''நான் இங்கு ஏதாவது வேலை தேடிக் கொள்ளலாமா?'' என்றாள்.

''உன் இஷ்டம்'' என்றார் ராமசந்திரன்.

அவர் கொடுத்த அந்தச் சுதந்திரத்தை மனதாரச் சப்புக் கொட்டிக் கொண்டிருந்தாளே ஒழிய, அதைப் பற்றித் தீவிரமாக நினைக்கவில்லை. இருந்தும் விரைவிலேயே, அவள் வேலைக்குப் போக வேண்டிய ஆசையைப் பிசாசாகத் தூண்டிய ஒரு சம்பவம் நடந்தது.

'ஐராவதம்'



அன்று ஞாயிற்றுக்கிழமை. உலகத்தில் அவ்வளவு நேரத்தையும், அப்படியே ஸ்தம்பிக்க வைத்து விட்டது போன்றும், அதனால் அதிகமாக அலட்டிக் கொள்ளத் தேவை இல்லை என்பது போன்றும், அவர் எண்ணெய் தேய்த்துக் கொள்ள ஆரம்பித்ததைக் கண்ட அவள்,

"இன்று சினிமா போகலாமா?" என்றாள்.

வெகுநேரம் பதில் இல்லை.

"உங்களைத்தானே?"

ஏன் என்பது போல் ஏறிட்ட பார்வை. ஆனால் வாய் திறந்து பேசவில்லை.

அவர் வாய் திறந்து பேசவில்லை என்பது சிறிதே அவளிடம் எரிச்சலைத் தோற்றுவித்தது. இருந்தும் சிரிப்பு வந்துவிட்டது. சிரித்துக் கொண்டே, "ஏன் என்று கேட்டால் வாய் முத்து உதிர்ந்துவிடும் என்று பயப்படுகிறீர்களா?" என்றாள்.

பிறகு, "இன்றைக்குச் சினிமா வருகிறீர்களா இல்லையா?" என்றாள் சிறிதே குரோதத்துடன்.

"நானும் ஆறு ஏழு வாரங்களாகத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றாள்.

"என்னத்துக்கு அந்தச் சினிமாக்கள். என்ன சொல்கின்றன அந்தச் சினிமாக்கள்?" என்றார் அவர்.

"எனக்குப் பார்க்க வேண்டும்" என்றாள் அவள்.

"எனக்கு இஷ்டமில்லை," என்றார் அவர்.

"எனக்குப் போகணும்" என்றாள் அவள்.

"செய்."

அவள் அவருடைய 'செய்' ஐ கோணங்கி செய்து அபிநயித்தாள். சாப்பிட்டு விட்டு ஈஸிசேரில் சாய்ந்து விட்டார்.

ஞாயிற்றுக்கிழமை அந்த ஈஸிசேர் விஷயம் அவளில் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது. ஈஸிசேரில் காலை பதினொரு மணி வாக்கில், சாய்ந்து கொள்பவர், இரவு எட்டு மணிவரை, அதிலேயே சாய்ந்திருப்பார். அடிக்கடி வெற்றிலை — புகையிலை போட்டுக்கொள்வார். வெற்றிலையைத் துப்புவதற்காக — பாத்ரூம் போவதற்காக எப்போதாவது எழுந்து கொள்வார். அவ்வளவுதான். மற்ற நேரங்களில் ஈஸிசேரில் சாய்ந்திருப்பார். காப்பி வேண்டும் என்று கேட்க மாட்டார். பிரபாவாக மூன்று மணிக்குக் காப்பி கொடுக்கும் போது சாப்பிடுவார். ரேடியோ கேட்க மாட்டார். தினசரியைக் காலையிலேயே முடித்திருப்பார். அதை மீண்டும் கையில் எடுப்பதில்லை. வாராந்திர, மாதாந்திரப் பத்திரிகைகள் படிப்பதில்லை. இதற்கு மேலும் ஆச்சர்யமான, எப்போதாவது பிரபாவுக்குச் சிறிது எரிச்சல் ஊட்டும் விஷயம் — மறந்து கூட ஒரு கணத்திற்குக் கூட பகல் வேளைகளில் கண் அயர மாட்டார். "என்ன பண்ணுகிறார் இந்த மனுஷன்?"

அன்று பிரபா வழக்கத்திற்குச் சற்று முன்னதாகவே பகல் இரண்டு மணிக்குக் காப்பி போட ஆரம்பித்த போது வாசல் அழைப்பு மணியை யாரோ அழுத்தவே, 'அவராவது எழுந்து போவதாவது!' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டே போய்க் கதவைத் திறந்தாள்.

வாசலில் வந்து நின்ற நபருக்கு இருபத்தைந்து வயதிருக்கும். அவன் ரொம்பவும் அழகாக இருப்பதைப் பார்த்துப் பிரபா துணுக்குற்றாள். தேவலோகத்திலிருந்து வந்தவன்போல் அவன் காணப்பட்டான்.

"எஸ்?" என்றாள், பிரபா, தன்னைச் சுதாரித்துக்-கொண்டு.

"ராமசந்திரன் இருக்கிறாரா?"

"இருக்கிறார். உள்ளே வாருங்கள்."

அவள் காப்பி போட்டுக் கொண்டிருக்கும் போதே வந்த நபரின் நோக்கம் அவளுக்குப் புரிந்து விட்டது. அவர்கள் வீட்டில் மொத்தம் மூன்று அறைகள். அதில் ஓர் அறையை, அந்த நபருக்கு, தங்குவதற்குக் கொடுப்பதாக அவர் சொல்லியிருக்கிறார் போலும். வந்தவன், தன்னுடைய அறை, அந்த வீடு, அவர்கள் இருவரையும் ரொம்பவும் பிடித்துவிட்டதாகச் சொன்னான். பிரபா அவன் அதற்குள் 'தன்னுடைய அறை' என்று சொன்னதைக் கவனித்தாள். அவளுக்கு அதற்குள்ளாக அவனுடைய அந்த நெருக்கம், ஈடுபாடு பிடிக்கவில்லை.

அவளுடைய முக பாவத்தைக் கவனித்த ராமசந்திரன், "உனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லையே, பிரபா?" என்றார், அவளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே.

"இல்லை," என்று சொன்னாள் பிரபா.

உதய் சங்கர், அவர்களுடைய வீட்டுக்கு வந்தபிறகு பிரபாவுக்கு வாழ்க்கையில் எதிர்பார்ப்பு அதிகமாகியது. அவன் அவர்கள் வீட்டுக்கு வந்த இரண்டு, மூன்று மாதங்களாகவே, அவள், அவனைக் கவனித்துக் கொண்டிருந்தாள். முதலில் அவன் ஒரு மேஜை விளக்கு வாங்கி, ஓரமாக வைத்து, அந்த அறையையே ஒரு தனிக் குடித்தன அறையாக மாற்றி விட்டதாக நினைத்ததும் அவளிடம் சிறிய பொறாமை ஏற்பட ஆரம்பித்தது. ஒரு திரைச்சீலையை வாங்கி அறை வாசலில் தொங்கவிட்டான். இதற்குப் பிறகு இரவு பகலாக நேரம் கிடைத்தபோதெல்லாம் சம்பள உயர்வுக்காகப் படிக்க ஆரம்பித்தான். அவன் படிக்க ஆரம்பித்தது அவளில் உபாத்தியாயினி வேலையையும், தினமும் வெளியே போய்வர வேண்டும் என்கிற ஆசையையும் வளர்த்தது.

அன்று இரவு மீண்டும் அவர் ஈஸி சேரில் சாய்ந்திருந்த போது பிரபா அவரிடம் வந்து, "ஏன், நீங்களும் ஆபீஸில் உதய்சங்கரைப் போல் பரீட்சை எழுதலாம் இல்லையா?" என்றாள்.

"எதற்கு?" என்றார் அவர்.

காலி 'லிப்ஸ்டிக்' குப்பிகளைச் சுத்தப்படுத்தி வைத்துக் கொண்டால் தையல் ஊசிகளைப் போட்டு வைத்துக் கொள்ள உதவும். — தகவல்: வி. பிருந்தா.

''வீட்டில் மேஜை விளக்கு,மேஜை, இன்னும் நிறைய வாரப் பத்திரிகைகள் எல்லாம் வேண்டாமா?'' என்றாள் அவள்.

''எதற்கு?'' என்றார், அவர்.

''எனக்கு வேண்டும்'' என்றாள் அவள் குரோதமாக.

''செய்து கொள்.''

பிறகு படுக்கப் போகும்போது ''நானும் வேலைக்குப் போகலாம் என்றிருக்கிறேன்'' என்றாள்.

''ம், சரி,'' என்றார் அவர்.

ஓர் உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்புக்கு உபாத்தியாயினியாகச் சேர்ந்தாள் பிரபா. உதய்சங்கர் எதையெல்லாம் செய்கிறானோ, அதை எல்லாம் அவள் தன் வீட்டிற்கும் செய்யலானாள். ராமசந்திரன் அவளைப் பார்த்து ஓரிரு தடவை தனக்குத்தானே புன்னகைத்துக் கொள்வதை அவள் கவனிக்கவில்லை.

பிரபா, உதய்சங்கருடன் போட்டியிட்டுக் கொண்டிருந்த ஒருநாள், ராமசந்திரன், தன்னுடைய அலுவலகத்திலிருந்து ஒரு ஃபோன் செய்தார். மறுமுனையில், அந்த நபர் வர, நான்கு நாட்களாகும் என்றார்கள். இவர் தன்னுடைய தொலைபேசி எண், முகவரி எல்லாம் கொடுத்தார்.

இருபது நாட்கள் கழித்து ஒருநாள் அவருக்கு ஃபோன் வந்தது. அன்று மாலை, நண்பர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டார்கள். விசு, ராமசந்திரனின் நண்பன். உலக அளவில் நிதி விவகாரங்களில் ஈடுபட்டிருந்தார். உலக வர்த்தகக் குழுக்கள் இவருடைய ஆலோசனைக்காகக் காத்திருந்தன. பதினைந்து நிமிடங்கள் விசு ராமசந்திரனுடன் பேசிக் கொண்டிருந்தார். கடைசியாக உன்னோடு என் இல்லத்தில் உணவருந்த வேண்டும் என்றவர் டைரியில் நாட்களைப் பார்த்து மூன்று தினங்களைக் குறிப்பிட்டு, ''என்று சௌகரியப்படும்?'' என்றார். அதில் ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கவே, அதைக் குறிப்பிட்டார் ராமசந்திரன். கார் அனுப்புவதாகச் சொல்லி விசு இவரிடம் விடைபெற்றுக் கொண்டார்.

விருந்துக்கு முதல் தினம், ராமசந்திரன் குறிப்பிட்டபோது பிரபா, அசட்டையாக அதை ஏற்றுக் கொண்டு, தான் புதிதாக வாங்கிய மேஜை நாற்காலி அருகில் சென்று ரொம்பவும் ஸ்டைலாக மேஜை விளக்கு ஸ்விட்சை தட்டிவிட்டு குமுதம் படிக்க உட்கார்ந்தாள்.

மறுநாள் காலை வந்த டட்ஸன் காரைப் பார்த்து அவள் சிறிதே பயந்தாள். நட்பும், ஆதரவும் வேண்டி உதய்சங்கர் முகத்தைப் பார்த்தபோது, அது அசடு வழிவதைக் கண்டவுடன், அவளை இந்த ஜன்மம் முழுதும் மன்னிக்க முடியாத ஒரு நிலையைத் தான் அடைவதைக் கண்டாள்.

சாதாரணமான வேஷ்டி சட்டை அணிந்திருந்த ராமசந்திரன் அதில் ஏறி உட்கார்ந்த பாங்கு மீண்டும், அவளை நின்று அவரைக் கவனிக்க வைத்தது.



''மணமேடையில்பெண் ஏதோ உன்னிடம் சொன்னாளே என்ன?''

''பெண்கள் பக்கம் என்ன பார்வை வேண்டிக்கிடக்கு, ஒழுங்கா உட்கார்ந்திருங்கன்னாள்.''

— சேலை அ. கதிர்வேல்.

வெள்ளைச் சீருடை அணிந்த கார் ஓட்டி, குளிர்பதனப்படுத்தப்பட்ட அந்த கார், போவதே தெரியாமல் அது மிதந்த விதம், வார்த்தைகளால் விவரிக்க முடியாத, அந்த போட் கிளப் பங்களா, தோட்டம், வீட்டினுள் பல இடங்களில், சாப்பாட்டு மேஜைகளில் பளீர் என்று சிரிக்கும் மிகச் சிவந்த ரோஜாக்கள், சாப்பாடு பரிமாற வெள்ளை உடை உடுத்திய நாலு சிப்பந்திகள், பிறகு சமீபத்தில் உயிரை உறைய வைக்கும் ஓநாய் போன்ற கத்தல் சப்தம், இவ்வளவு பெரிய நாய்களா! என்று அவைகளைப் பார்த்ததும் அவளில் ஏற்பட்ட விக்கல், ஐஸ் கிரீம் காப்பியுடன் ஸ்டீரியோவில் வீணை...

— இப்படி வாசிப்பது — இது யாராக இருக்கும், கேட்டதில்லையே, என்று வீட்டின் தலைவியிடம் விண்ணப்பித்துக் கொண்டபோது, அவள் ஏதோ சொல்ல வாய் எடுக்கவே, ராமசந்திரன் ஏதோ அவளுக்குச் சைகை செய்ததை பிரபா நிச்சயமாகக் கவனித்தாள்.

— அவளுக்கு எதற்காகச் சைகை செய்ய வேண்டும்? நமக்குத்தான் போலும். எதற்கு அதிகமாகப் பேசுகிறாய் என்று இருக்கலாம் என்று குழம்பியவளுக்கு, ''ஹோ, மிஸஸ். ராமசந்திரன், நம்முடைய நண்பர்களில் ஒருவர்தாம். இன்னொரு முறை அவரும் இருக்கும் போது அறிமுகப்படுத்திவைக்கிறேன்'' என்ற விசுவின் பத்தினியிடம்,

''எவ்வளவோ கச்சேரிகள், வீணை, பிடில் வாத்தியங்கள் கேட்டிருக்கிறேன் — ஆனால் இந்த நயம்?'' என்றாள் பிரபா மீண்டும் இமைகள் படபடக்க — என்பதோடு — பிரபா தன்னுடைய முன் இருபது வயதுகளில் எப்போதாவது விரும்பிச் சினிமாவுக்குப் போவாள். சினிமாவில் காணும், பண மிதப்புக்களைப் பார்வையிடும்போது, இப்படியும் பண மிதப்புக்கள் உண்டா என்று நினைத்தவள், இங்கு பணம் கற்பிக்கும் சௌகரியங்கள், அந்தச் சினிமா உலகங்களை எள்ளி நகையாடுவது போலிருந்தது. ''ஏன்?'' என்று நினைத்துப் பார்த்தாள். இங்கு எக்கச்சக்கப் பணத்தோடு, எக்கச்சக்க, ஈடுபாடு மிகக் கொண்ட ரசனையையும் அவள் பார்த்தாள்.

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—

விஐபி
கன்கார்டு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள
புதிய விஐபி கன்கார்டு! நாகரீக
நரம்போடிய அலாதி ஸ்டைலிங்.
கண்டறியாத வர்ண வகைகள்:
பீச் க்ரீம் (செவ்விள மஞ்சள்),
டெஸர்ட் பிரவுன் (மணற் கபில
நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச்
சாம்பல்), க்ரீம் சாக்கலேட்,
மேலும் பலப் பல. உட்புறமோ
இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்:
அருகிலுள்ள வியாபாரியிடம்...
சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



**தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.**

LINTAS VIP M 10 2013 TM

அவர்களை மீண்டும் காரில் கொண்டு விட ஏற்பாடு ஆன போதும், மீண்டும் காரில், வீடு நோக்கிச் செல்லும்போதும், பிரபாவின் ஆச்சரியம் விடுபடவில்லை.

''கடவுளே! இவ்வளவு, வாழ்நாளில் சாத்தியமா?'' என்றாள்.

பிறகு, ''இது நம்மால் முடியுமா?'' என்றாள். அவளுடைய முகத்தில் செம்மை படருவதை ராமசந்திரன் கவனிக்கவில்லை. அவர் வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில், ''இதற்கெல்லாம் உழைப்பு மட்டும் போதாது'' என்றார் அவர்.

அன்று வீடு திரும்பியதும், உதய்சங்கர், எப்போதும்போல், சகஜமாகப் பேச வந்த போது பிரபா எரிந்து விழுந்தாள். பிறகு அவனை ஏளனமாய்ப் பார்த்தாள்.

''இன்னும் இருபது ஆண்டுகளில் நீ!'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். அதற்குப் பிறகு வீட்டில் அவள் மேஜை, நாற்காலி பக்கம் போவதேயில்லை.

அப்படியே போனாலும் மேஜை விளக்கை உபயோகிப்பதில்லை. ஏதோ ஒரு உலகம் அவளிடமிருந்து விடுபட்டது. இதற்கு ஒரு மாதம் கழித்து, அவர் ஒருநாள் ஈஸிசேரில் உட்கார்ந்திருக்கும்போது, ஏதோ ஒரு இழை சங்கீதம் அவரிடமிருந்து வெளிப்பட்டது. பிரபா துணுக்குற்றாள். எங்கோ கேட்டது போலிருக்கிறதே என்று நினைத்தாள். பிறகு அவளுக்கு மின்சாரம் பாய்ந்தது போன்று ஓர் உணர்வு ஏற்பட்டது. அது சென்று பின் மண்டையைத் தாக்கியது. அவள் அன்று கேட்ட வீணையின் தொடர்ச்சி இது. விகவின் மனைவி, இவர், இருவரும் சைகை செய்து கொண்டார்களே! அந்த வீணையின் நாதத்தை எழுப்பியவர் இவர்தானா? மேடைக் கச்சேரி ஏன் இவர் செய்வதில்லை?

அன்று படுக்கையில் அவரை அவள் வம்புக்கு இழுத்தாள். ''நீங்கள்தானே, அந்த வீணையை இசைத்தவர்?'' என்றாள். அவரோடு இழையாவிட்டால் மண்டை வெடித்து விடும் போலிருந்தது. அவரோ மசியவில்லை. தினம் இரவு இனம் புரியாத விதத்தில் அவர்களிடையே இவர் தள்ள அவள் கேட்க, எனும்படிக்கு இரவு பன்னிரண்டு மணி வரை ஒரு சண்டை தொடர ஆரம்பித்தது. பிறகு தினம் அவள் இரவு அழ ஆரம்பித்தாள். ஒருநாள் அவளை அவர் தானே வலிய அணைத்துக் கொண்டார். அப்போது அவள் அவருக்கு முதுகைக் காட்டிக் கொண்டு உடல் சிறிதே நடுங்க, அழுது கொண்டிருந்தாள். அன்றிரவுக்குப் பிறகு, அதற்குப் பிறகு இன்னும் ஒரு ஏழெட்டு நாட்களில், யார் அந்த வீணையை மீட்டியிருக்கக் கூடும் என்ற அவளுடைய சந்தேகம் விடுபட்டது.

அதற்கும் மேல், ஆரம்பத்தில் அந்த வீணை நாதத்தில் அவள் தரிசித்த பண உலகம் மீண்டும் உயிர்க்கவில்லை.


வீட்டின் வெளியே பவழமல்லி பூக்க ஆரம்பித்திருந்தது. காலையில் அதை எடுக்கும் போது ஒருநாள் சிறிதே நின்றாள். வயிற்றில் ஏதோ இசை பாடுவது போலிருந்தது.

"இங்கும் எங்கும். இன்றும் என்றும்.



திரு ஜோதீந்தா மகன்லால் தேசாய்
13/22, சாவித்ரி குஞ்ச், கரோடியா நகர்,
காட்கோபர், பம்பாய் 400 077.

திருமதி உஷாபென் கிரீட் தேசாய்
24, பஞ்சவடி 'சி' ஜுஹூ லேன், அந்தேரி
தொலைபேசி: 570239. பம்பாய்-400 058.




CTS 605

CTS 919

கலர் டிவி வாங்குமுன் நீங்க, சாலிடெர் வச்சிருக்கும் நண்பரைக் கேளு

சாலிடெருக்கு இணை சாலிடெர்தான்!"



திரு ஜோதீந்தர எம். தேசாய், பம்பாயிலுள்ள நவபாரத நூதன் வித்யாலயாவின் பிரின்சிபால். அவர், தாம் வாங்கிய கலர் டிவியை, தம் மைத்துனி திருமதி உஷாபேன் கிரீட் தேசாய்க்கும் சிபாரிசு செய்தார். அவர் நினைவு கூர்கிறார்: "நான் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்கறதில்லே. ஸ்கூல்லேயும் சரி, வீட்டிலேயும் சரி சில வழிமுறைகளை வைத்திருக்கிறேன். அதன்படிதான் முடிவு எடுக்கிறேன்.

அதனாலேதான், அண்ணிக்கு என் மச்சினி 'தான் எந்த கலர் டிவியை வாங்கறதுன்னு' என்னைக் கேட்டபோது, எல்லாத்தையும் வெவரமா வெளக்கிச் சொன்னேன் ...நான் எத்தனையோ வெளி நாடுகளுக்குப் போயிருக்கேன். அங்கெல்லாம் எத்தனையோ கலர் டிவிகளை பார்த்திருக்கேன். இதெல்லாம் நான் கலர் டிவி வாங்கறத்துக்கு முன்னாலே. அந்த நாடுகள்லே எத்தனையோ பிராண்டுகளைப் பார்த்து, அது ஒவ்வொண்ணும் வேலே செய்யறதை ஒப்பிட்டுக்கூட பார்த்திருக்கேன்.

ஆனா, நெஜமாச் சொல்றேன், ஒரு சில பிராண்டுகள்தான் எனக்குப் பிடிச்சது. அப்புறம், எனக்காக டிவி வாங்க நெனைச்சப்போ தொழில் நுட்பம், விற்பனைக்குப் பிந்தி கெடைக்கிற சேவை, அந்தந்த டிவியின் விலே, ஆக எல்லா அம்சங்களையும் கவனமாப் பார்த்தேன். கடைசியிலே, எனக்கு வேண்டிய எல்லாத்தையும் சாலிடெர் மட்டுமே தருதுன்னு தெரிஞ்சபோச்சு. ஆக, சாலிடெரை வாங்கி வீட்டுக்கு வந்து, அது வேலே செஞ்சதைப் பார்த்தப்போ என் முடிவு எவ்வளவு சரியானதுன்னு நிச்சயமா தெரிஞ்சுடுத்து. இதே காரணத்தாலேதான், 'வாங்கினா சாலிடெர் மட்டுமே வாங்கு'ன்னு உஷா பேனிடம் உறுதியாகச் சொன்னேன்.

என் யோசனைப்படி அவரும் சாலிடெரைத்தான் வாங்கி இருக்கார். இப்ப அவரையே கேளுங்க. "சாலிடெருக்கு இணை சாலிடெர்தான்"னு அவரும் இன்னும் எத்தனையோ காரணங்களைச் சொல்லுவார்.

இது உண்மையான கதை. சாலிடெரின் சிறந்த தரத்திற்கு இதுவே சான்று. சாலிடெர் மட்டுமே மக்களிடையே இத்தகைய நன்மதிப்பைப் பெற்றுள்ளது. காரணம், அது அளிக்கும் தெளிவான படம், தத்ரூபமான வண்ண ஒளிபரப்பு மற்றும் தரமுயர்ந்த தொழில் நுட்பம். எனவே இன்று மேன்மேலும் அதிக மக்கள் இதை வாங்குகின்றனர். முதன் முதலில் வாங்குவோரும், மற்ற முன்னணி பிளாக் & ஒயிட் டிவி வைத்திருப்போரும் இதையே நாடுகின்றனர். இந்த சிறப்புகள்தான் சாலிடெர் கலர் டிவியின் உண்மையான பின் பலம். சாலிடெரையே நீங்கள் தேர்ந்தெடுப்பதற்கும் சான்று.

இதன் மற்ற சிறப்பம்சங்கள்—சாலிடெர், மேற்கு ஜெர்மனி தொழில் நுட்பத்தால் உருவானது. மேற்கு ஜெர்மனியின் ITT-யிலிருந்து வரும் பிழையற்ற உறுப்புகள் கொண்டது. அதோடு, நம் நாட்டின் கடுமையான பருவநிலைகளிலும் சிறப்பாக வேலை செய்ய உருவாக்கப்பட்டது.

தவிர, சாலிடெரில் VCR, வீடியோ விளையாட்டுகள் மற்றும் ஹோம் கம்ப்யூட்டர் கனெக்ஷன் முதலான வசதிகளும் உள்ளன. இவற்றுக்கெல்லாம் சிகரமாக, சாலிடெரின் விற்பனைக்குப் பிந்தைய சேவை எல்லாப் பகுதிகளிலும் உண்டு.

ங்க.

Solidaire ITT

கலர் சாலிடெர்

-தொல்லையில்லாத் தொலைக்காட்சி



கர்நாடக இசையும் நானும்

* ஜான் ஹிக்கின்ஸ்.

வாசகர் பங்கு

மனம் இலேசாகும்!

மனம்கவலையுடன்இருக்கும்போதும் ஏதேனும் முடிவெடுப்பதில் குழப்பம் ஏற்படும் போதும் கர்நாடக இசையைக் கேட்டால் மனம் இலேசாகி ஒரு நல்ல முடிவெடுக்க முடிகிறது. அதற்காகவே நான் கர்நாடக இசையை விரும்பிக் கேட்கிறேன்.

வி. அவிச்சி, மோகனூர்.

ஜோடி சேர்த்த இசை!

நான் பெண் பார்க்கச் சென்ற போது, முதலில் பெண்ணுக்கு என்னைப் பிடித்திருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம் என்று கருதினேன். ஆனாலும் எப்படித் தெரிந்து கொள்வது என்று நான் குழம்பிய நேரத்தில், பெண்ணைப் பாடச் சொன்னார்கள். 'கஜவதனா...' பாடலைப் பாடிச் சரணம் வந்தபோது, "நீயே வாழ்வில் என் ஜீவா தாரடி..." என்ற அடியுடன் அவள் என்னைப் பார்த்ததும் புரிந்து கொண்டேன். பிறகென்ன? திருமணம் இனிதாக நடந்தேறியது. அது முதல் நான் கர்நாடக இசையின் ரசிகனாகி விட்டேன்.

டி. பாலகிருஷ்ணன், சென்னை—59.

பொறுக்க முடியாத சேஷ்டைகள்!

கர்நாடக இசை பாடும் வித்வான்கள் பாட்டின்முதல்வரியையேதிருப்பித்திருப்பிப் பாடி நம் பொறுமையைச் சோதித்து விடுகிறார்கள். மேலும் அவர்கள் பாடும் போது செய்யும் சேஷ்டைகளையும் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. உரலில் மாவு ஆட்டுவது போலவும், கைகளை ஆட்டிக் கொண்டு உடம்பை வளைத்து, நெளித்து, கண்களை மூடிக் கொண்டு... பிறகு கண்களை விழித்துப் பார்த்து... கண்றாவி! கண்றாவி! இந்நிலையில் எப்படி நான் கர்நாடக இசையைக் கேட்க முடியும்?

ஞானாம்பிகை, சிக்கட்பல்லி (ஆந்திரா).

வானத்தில் பறக்கிறேன்!

கேட்கிறேன் என்பதெல்லாம் வெறும் வார்த்தை.சிலவித்வான்களின்கச்சேரிகளைக் கேட்கும்போது அந்தந்த ராக தேவதைகளை

மனக்கண்ணில் தரிசிக்கிறேன் என்பதுதான் உண்மை. சில சமயங்களில் வானத்தில் பறப்பது போல இருக்கும் எனக்கு. இந்த ஜென்மத்தில் அரைகுறையாய் நின்றிருக்கும் அந்தத் தெய்வீகக் கலை அடுத்த ஜென்மத்திலாவது எனக்கு முழுமையடைய வேண்டும். அந்தத் துக்கத்தையெல்லாம் கச்சேரிகளைக் கேட்கும் போது மறக்கிறேன்.

குமாரி. பி. லக்ஷ்மி, சென்னை—53.

கேஸட் மாறியது; ரசனையும் மாறியது!

'போனிஎம்' குழுவினருடைய மிகச் சிறந்த பாடல்களைப் பதிவு செய்வதற்காக கேஸட் கொடுத்திருந்தேன். அதை வாங்கி வந்து போட்டுப் பார்த்தபோது, ஆங்கிலப் பாடல்களுக்குப் பதிலாக அருமையான கர்நாடக இசை மிதந்து வந்தது! ஆங்கிலப் பாடல்களையே கேட்டுச் சலித்திருந்த எனக்குக் கர்நாடக இசை ஒரு புத்துணர்ச்சியளிப்பதுபோல் இருந்தது. அதன் பிறகுதான் கர்நாடக இசையை ரசிக்கத் தொடங்கினேன்.

கு. ஆனந்த், திருச்சி—1.

புரியாத இசை!

கர்நாடக இசைதான் அனைத்துக்கும் ஆதாரம். அப்படிப்பட்ட இசை அனைவருக்கும் புரிய வேண்டாமா? பாடுவதற்கு முன் என்ன ராகம்? என்ன தாளம்? என்பதைச் சொல்லிவிட்டுப் பாடினால் அனைவரும் புரிந்து கொண்டு ரசிக்க வசதியாக இருக்கும். மேலும் பாடலுக்கு முன்பு நீண்ட நேரம் ஆலாபனை செய்வது எரிச்சலைத்தான் மூட்டுகிறது. இதனாலேயே நான் கேட்பதில்லை.

எஸ். வி. ராஜசேகர், சென்னை—5.

உலகமே அழகாகிறது!

கர்நாடக இசையில் எனக்குத் தியானத்தில் கிடைப்பது போன்ற ஆழ்ந்த அமைதி கிடைக்கிறது. உயர்ந்த ரசனைகளை வளர்த்து, உணர்வுகளைச் சமநிலைப்படுத்துகிறது. மனநிலையையே ஆரோக்கியமாக மாற்றுகிறது. பார்வை விசாலமாகி உலகமே அழகாக உருவெடுத்து வாழ்க்கையே பசுமையாகிறது. பிரபஞ்சமே இசையின் வெளிப்பாடுதான் என்று உணர ஆரம்பிக்கிறேன்.

கேதார், சென்னை—28.

சினிமாவால் வந்த மாற்றம்!

கர்நாடக இசை என்றாலே காத தூரம் ஓடும் நான் என் குடும்பத்தாரின் வற்புறுத்தலின் பேரில் 'சங்கராபரணம்' படம் பார்த்தேன். அன்றிலிருந்து கர்நாடக இசைக் கச்சேரிகளைத் தேடி ஓடுகிறேன். இந்த ஆண்டு இசை விழா மழையில் நனைந்தே தீருவது என்றும் முடிவு செய்துள்ளேன்.

ஏ. ஜனார்த்தனன், நாமக்கல்.

சப்தமே உண்டு; சாரீரமில்லை

நமது வித்வான்களிடம் சப்தம்தான் இருக்கிறதே தவிர, சாரீரமில்லை; நாதம் இல்லை. இனிய சேர்க்கையில்லாத சங்கீதம் சங்கீதமேயில்லை. தியாகய்யர் நினைத்த 'சுகம்' மிருதங்கச் சேர்க்கையில் இல்லை. கடமும், கஞ்சிராவும் சேரும்போது கூச்சல்தான் வானைப் பிளக்கிறது. தம்புரா சுருதிசேராமல்தள்ளாடுகிறது. அந்நிய வாத்தியமான வயலின் 'கொர் கொர்' என்று மூச்சுத் திணறுகிறது. கேட்பவர்களின் தாளம் மனநிறைவைக் கெடுக்கிறது. ஆக மொத்தம் ஐந்து நிமிடம் இந்துஸ்தானி கேட்கும்போது கிடைக்கும் சுகம் இப்போது கர்நாடக இசையைமூன்று மணிநேரம் கேட்டாலும் கிடைப்பதில்லை.

எம். எஸ். சீனிவாசன், ராணிப்பேட்டை.

இறைவனை நெருங்குகிறேன்!

மனம் சஞ்சலப்படும்போது சாந்தி அளிப்பது கர்நாடக இசைதான். உடற்பிணிகளையும் போக்க வல்லது அது. கர்நாடக சங்கீதத்தைக் கேட்கும்போதும், அதை நாமே பாடும் போதும் இறைவனுக்கும் நமக்கும் உள்ள இடைவெளி குறைகிறது. இவை



* காருக்குறிச்சி



* சங்கராபரணம்.



ஜோசியர்: "என்னங்க இது? நீங்க நினைச்சது நடக்கும்னு சொன்னதுக்கு இப்படி கோபப்படறீங்க?"

மற்றவர்: "அட, நான் ரேஸ் குதிரையை நினைச்சேன்யா."

— கிழை அ. கதிர்வேல்.

போதாதா அதை விரும்புவதற்கு?

ஏ. கோபாலகிருஷ்ணன், சென்னை—28.

'கைக்குழந்தை தானறியும்!'

என் ஒன்றரை வயதுக் குழந்தை இரவில் தூங்காமல் அழுதபோது டாக்டரிடம் காட்டியும் பலனில்லாமல் போனது. பக்கத்து வீட்டு நண்பர், "குழந்தை அழும்போது நல்ல நாதஸ்வர இசையைப் போட்டுக் கேட்கும்படி செய்யுங்கள்!" என்றார். மறுநாளே நான் காருக்குறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வர இசையைப் போட்டேன். அழுத குழந்தை அப்படியே தூங்கிப் போனது. அதிலிருந்து நானும் கர்நாடக இசையை விரும்பத் தொடங்கினேன்.

கே. அழகம்மாள், திருச்சி—2.

சுருதி சேராத கச்சேரிகள்

தொடையை நம்பித் தொண்டையைக் கோட்டைவிட்டுச் சுருதியுடன் எப்போதாவது சேர்ந்து கொள்ளும் இசைக் கச்சேரிகளைக் கேட்கத்தான் வேண்டுமா என்ன? 'பிருகா' என்ற பெயரில் தொண்டை நடுக்கத்தைத்தான் கேட்கிறேன். தார்ஸ்தாயிகளில் அநேகமாக யாருக்குமே துல்லியமாய்ச் சுருதி சேருவதில்லை. நல்ல முறையில் பாடக் கூடியவர்களுக்கு வாய்ப்பும் கிடைப்பதில்லை.

ரா. மாதவராவ், சென்னை—75.

வெட்கப்பட்டு மாறினேன்!

ஒருநாள் இரவு பத்து மணிக்குமேல் ரேடியோவில் ஒலிபரப்பான கச்சேரியைப் படுத்துக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்தேன். இரவின் அமைதியில் அந்தக் கம்பீரமான குரலும், இனிமையும் என்னை மிகவும் கவர்ந்தது. கச்சேரி முடிந்த பிறகுதான் அதுவரை பாடியவர் ஜான் ஹிக்கின்ஸ் என்ற வெளிநாட்டுக்காரர் என்று தெரிந்தது. ஒரு வெளிநாட்டுக்காரர் நம்இசையைக்கற்றுக்கொண்டு இத்தனை சுத்தமாக, பக்தி பூர்வமாகப் பாடியதைக் கேட்டதும் எனக்கே வெட்கமாய்ப் போய் விட்டது. அதிலிருந்து ஒரு கச்சேரியையும் நான் விட்டு வைப்பதில்லை!'

திருமதி விமலா விஜயன், சென்னை—33.

கேட்டால் அழுகை வரும்!

என் சிநேகிதியின் மகள் பூமா முறையாக இசை பயின்றவள். அவளுடைய வாய் சதா ஒரு ராகத்தை முணுமுணுத்துக் கொண்டே இருக்கும். படிப்பிலும் படுசுட்டியான அவள் தனது பத்தொன்பதாவது வயதில் தொண்டையில், புற்றுநோயால் பாதிக்கப்பட்டாள்; அதனால் பேசவும் சாப்பிடவும் கூட முடியாமல் படுத்த படுக்கையாகி விட்டாள். அந்த நிலையிலும் உதட்டை அசைத்து, கைகளால் தாளம் போட்டுப் பாட முயற்சி செய்வாள். ஒருநாள் ஏதோவொரு ராகத்தைப் பாட முயற்சி செய்தபடியே நீங்காத் துயில் கொண்டு விட்டாள். அதிலிருந்து நான் கர்நாடக இசையே கேட்பதில்லை. கேட்டால் அவள் நினைவு வந்து அழுகையாகி விடும்.

ஆர். மஞ்சுளா, கடலூர்—1.

பாவம் முத்துசுவாமி தீக்ஷிதர்!

பாடகர்கள் பதம் பிரித்துப் பாடும்போது சில சமயங்களில் வேடிக்கையாக இருக்கும்; அர்த்தத்தையே மாற்றி விடுவார்கள். உதாரணமாக,

தாயேய சோதா உன்தன்
நாயர் குலத் துதித்த...

ரங்கபுர விஹார ஜயகோ
தண்ட ராமா

மர கதவு வெள்ளி — புரியவில்லையா? பாவம் ஸ்ரீ முத்துசுவாமி தீக்ஷிதர்! அவருடைய 'மரகத வல்லி மனஸா...' தான் இப்படி மாறுகிறது. எனக்கு இது ஒரு தமாஷ். இப்படிப் புதுப் புது அர்த்தங்கள் வரும்பாடல்களைக்கேட்பதற்காகவே கச்சேரிகளுக்குப் போகிறேன்!

இந்திரா சுப்ரமணியன், கோவா.

ப்ளோபிளாஸ்ட் வழங்கும் வி. ஐ. பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

எம். எஸ். சீனிவாசன்,
2—A. ரயில்வே ஸ்டேஷன் ரோடு,
ராணிப்பேட்டை (632 401),
வ. ஆ. மாவட்டம்.



உணர்வுகள் உறங்குவதில்லை

21. பணத்திமிர்

சில காரியங்கள் நமக்குப் புரிவதில்லை. ஏன்? எப்படி? என்னும் கேள்விகளுக்கு விடை காணுவது இயலாது. பணம் ஒருவனிடம் சேர்வது இந்த வகையைச் சேர்ந்தது தான். தரித்திரனாக இருந்தவன் செல்வந்தனாக ஆவதுண்டு. ஒருவேளைச் சோற்றுக்குக் கூட வகையில்லாதிருந்த பலர் அரசியலில் ஈடுபட்டு லட்சாதிபதிகளாயிருப்பதைக் காண்கிறோம். கடுமையாக உழைத்தான், கருமமே கண்ணாயிருந்தான் என்றெல்லாம் காரணம் கூறுவார்கள். ஆனால் அப்படி இருப்பவனுக்கெல்லாம் பணம் சேர்ந்து விடுவதில்லை.

இதற்குக் காரணம் சந்தர்ப்பந்தான். இதைஇன்னும்கிராமியப்பாணியில்சொல்வதென்றால், தலையெழுத்து என்று கூற வேண்டும்.

அப்படி ஓர் ஆழமான தலையெழுத்து, சினிமாக் கொட்டகை அதிபர் ராமசுப்பனுக்கு அமைந்திருக்கிறது. அவர் உழைத்ததும் இல்லை, கர்மத்தில் கண்ணாயிருந்ததுமில்லை. எல்லாம் அவருடைய தந்தைக்கு வந்த அதிர்ஷ்டம். ஆதியில் அவருடைய தந்தை, கட்டட வேலைக்குச் சிற்றாளாகச் சென்று கொண்டிருந்தவர்; மேஸ்திரியாகிப் பிறகு, காண்ட்ராக்டராகிப் பணம் சேர்த்தார். இரண்டு சினிமாக் கொட்டகைகளுக்கும் ஏழெட்டு லாரிகளுக்கும் அதிபரானார். பணமும் போகமும் கிட்டிய பிறகு பிறந்தவர் தாம் ராமசுப்பன்.

அவர் பணத்தின் சூழ்நிலையில் வளர்ந்தார். பண்பை வளர்க்க மட்டும் மார்க்கமில்லை. கல்வியும் மூளையில் ஏறவில்லை. தட்டுத் தடுமாறி எட்டாவது வகுப்பு வரை படித்தார். ஏறியதெல்லாம் பணத்திமிர் ஒன்றுதான். பணத்திமிரைப் பறைசாற்ற அவ்வப்போது சில தர்மங்களை மிகுந்த விளம்பரத்தோடு செய்தார்.

ஒரு சமயம் ஆற்றுப் பிள்ளையார் கோயிலில் அவரை மதிக்கவில்லை என்பதற்காக அந்தக் கோயிலுக்கு எதிரேயே போட்டிக்கு ஒரு பிள்ளையார் கோயிலை, தகரத்தில் கட்டினார். கல்லில் தம் பெயரையும் பெரிதாகப் பொறித்தார்.

இப்போது சந்திரசூடனிடமும் சக்திசிவத்திடமும் ஏற்பட்ட கோபத்தில் போட்டிக்காக ஒரு சிறு அம்மன் கோயிலைக் கட்ட ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

அவர் எந்த ஸ்தாபனத்தில் தலையிடுகிறாரோ அங்கு உள்ளவர்கள் அவருடைய அடிமைகளைப்போல் நடந்துகொள்ள வேண்டும். அவ்விதம் நடந்து கொள்வதற்காகப் பணம் கொடுப்பார். சினிமாப் பார்க்க பாஸ் கொடுப்பார். அதற்காகப் பலர் பல் இளித்துத் தாளம் போடுவார்கள். தன்மானம் உள்ளவர்கள் அவரை அலட்சியப் படுத்தி விடுவார்கள். அந்த வேளைகளில் தான் அவருடைய வீம்பு கிளர்ந்தெழும்.

மிகுந்த செல்வம் இருந்தும் அவருக்குப் பண்பும், நல்லறிவும் இல்லாததைப் பற்றி ஒரு சமயம் குமார் கூறியது சந்திரசூடனின் நினைவில் வந்தது —

"ஒருவனுடைய நடவடிக்கைகளுக்குக் காரணம் அவனுடைய குணம்சம்தான். குணம்சத்தின் தன்மையின் காரணத்தை அவனுடைய பிறப்பை ஆராய்ந்தால் கண்டு கொள்ள முடியும். குணக்கேடு இருந்தால், பாரம்பரியத் தொடர்ச்சியில் எங்கோ ஓரிடத்தில் கோளாறு இருக்கும். முன்னோர்களுடைய ஜீன்ஸ் தொடர்ந்து வரும்." —

இவ்விதம் பாரம்பரியத் தொடர்ச்சியில் கோளாறு உள்ளவனிடம் செல்வம் சேரும் போதுதான் ஆபத்து சூழ்கிறது. இப்போது, அம்மன் கோயிலுக்குக் கேடு விளைவிக்கும் பணியில் ராமசுப்பன் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். கோயிலை அரசாங்கப் பொறுப்பில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்க அதிகாரிகளைத் தூண்டினார். தம்முடைய ஆதிக்கத்தில் வராத கோயில், அரசின் ஆதிக்கத்தில் போகட்டும் என்ற வீம்பு. அதே வேளையில் சக்திசிவத்தைக் கோயிலை விட்டு வெளியேற்ற வேண்டும் என்றும் முடிவு செய்திருந்தார்.

முந்தின நாள் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ராமசுப்பனிடம் பணம் வாங்கிக் கொண்டு பேசியவர்கள் சக்திசிவத்தைப் பற்றி இழிவாகப் பேசினார்கள். அவருக்குப் பாதுகாப்பாக இருந்த சந்திரசூடனையும் தூற்றினார்கள்.

ஒருவர் பேசியபோது, "அம்மன் கோயிலுக்குப் பெண்கள் போகாதீர்கள். அங்கே

ர. சு. நல்லபெருமாள்

பூஜை செய்யும் பூசாரி, காமவெறியன். கோயில் அம்மனையே தன் காதலி என்று கூறித் திரிகிறான். எந்தச் சமயத்திலும் பெண்களின் மானத்திற்குக் கேடு நேரலாம். உங்கள் நன்மைக்காக வேறொரு அம்மன் கோயிலைக் கட்டித்தர வள்ளல் முதலாளி அவர்கள் தயாராக உள்ளார்கள். அந்தக் கோயிலுக்குப் பெண்கள் பயமின்றி வரலாம்,'' என்றாராம்.

இதைக் கேள்விப்பட்ட சந்திரசூடனுக்கு உள்ளூரக் கோபம் எழுந்தது.

''இந்தஎழுத்தாளர் ஆதரிக்கும்பூசாரியைச் சிறைக்கு அனுப்பி வைக்கிறேனா இல்லையா பார்,'' என்று ராமசுப்பன் கூறினாராம். அவருடைய கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் சந்திரசூடனிடமே வந்து இதைச் சொன்ன போது சந்திரசூடன் பதறிப் போனார்.

ராமசுப்பனுக்குப் பணபலம் இருந்தது. லஞ்சத்தால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையும் இருந்தது.

சந்திரசூடனிடமே சிலர், ''ஏன் சார் முதலாளிகிட்டே மோதுகிறீர்கள்? நீங்கள் வளைந்து போனால் முதலாளி உங்களுக்கு எவ்வளவோ உதவுவாரே,'' என்று கூறினார்கள்.

அதற்குச் சந்திரசூடன், ''எனக்குத் தன்மானம் உண்டு. அதனால்தான் உங்கள் முதலாளியிடம் என்றால் வளைந்து போக முடியவில்லை,'' என்றார்.

பணம் எதுவும் செய்யும் நிலை இப்போது. ஒருகாலத்தில் நாவுக்கரசரையே கொடுமைப் படுத்தவில்லையா? ஆனால் சக்திசிவம் ஒரு சித்தர்தாம். இந்த மாதிரியான பணத்திமிர் பிடித்துத் திரியும் வம்பர்களின் ஈனச் செயல், சித்தர்களைப் பாதிக்காது என்றுதான் நம்பினார். ஆனாலும் உள்ளூரப் பயமும் உறுத்திக் கொண்டே இருந்தது. எந்தச் சமயத்திலும் அவரால் சக்திசிவத்திற்கு இடைஞ்சல் நேரலாம் என்று பயந்தார்.



அந்தக் கோயிலுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு தர்மகர்த்தாவைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு சக்திசிவத்தின் ஜாதிக்காரர்களிடமிருந்தது. ஆனால் அவர்களின் ஜாதியில் யாரும் அந்தப் பொறுப்பை ஏற்காமல், ஊரிலுள்ள மற்ற ஜாதியார்களில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது பரம்பரையாக உள்ள வழக்கம்.

கோயில் தர்மகர்த்தா தேர்தலின் போது, சந்திரசூடனுக்குச் சொல்லியனுப்பியிருந்தார் ராமசுப்பன். தேர்தலில் அவருக்கு விட்டுக் கொடுத்தால் பதினாயிரம் தருவதாக ஒரு தரகர் மூலம் சொல்லியனுப்பினார். அது அவருடைய கௌரவப்பிரச்னையாம். ஆனால் சந்திரசூடன், "லஞ்சம் வாங்கிப் பழக்கம் இல்லை," என்று பதில் கூறி அனுப்பி விட்டார்.

குமார் ஒருநாள் முழுவதும் சந்திரசூடனை இதற்காகத் திட்டித் தீர்த்தார். "அம்மன் கோயில் தர்மகர்த்தா பதவி, பெரிய கவர்னர் பதவியோ? வலிய வந்த பதினாயிரம் ரூபாயை விட்டு விட்டாயே. உன் நிழல் பத்திரிகையை நீ ஒருநாளும் தொடங்கப் போவதில்லை" என்றார் குமார் கோபத்துடன்.

"ஒரு தரமான பத்திரிகையை இந்த மாதிரி இழிவான பேர்வழி தரும் லஞ்சத்தைக் கொண்டு தொடங்க வேண்டாம்," என்றார் சந்திரசூடன் திடமாக.

ராமசுப்பன் பணத்தைக் கொண்டு எப்படியெல்லாமோ செயல்படுவார். இன்றையச் சீர்கேட்டில் அவருடைய பணத்திற்குத்தான் வலு அதிகம் —

இந்த நினைவுகளால் சந்திரசூடன் மனம் குழம்பியிருந்தார். அப்போதுதான் பத்திரிகையின் அதிபர் அவரைக் கூப்பிட்டு ஆள் அனுப்பியிருந்தார்.



அதிபரின் அறைக்குள்நுழைந்ததுமே அவர் உற்சாகத்திலிருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டார் சந்திரசூடன். "உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்," என்று அதிபர் உற்சாகமாக வரவேற்றார்.

சந்திரசூடன் புரியாமல் குழம்பி நின்றார். "சங்கீத மகாநாட்டில் சர்மாவின் மூக்கை நன்றாக அறுத்து விட்டீர்கள். அந்த ஆள் ஒரு வெற்று வேட்டு," என்றார் அதிபர்.

சந்திரசூடன் இரண்டு நாட்களுக்கு முன்பு சங்கீத மகாநாட்டில் கலந்து கொண்டார். நீதிபதி சர்மா தலைமை வகித்த போதுதான் அது நடந்தது. அவர் தமக்கு எல்லாம் தெரிந்த மாதிரியான தோரணையில் பேசிக் கொண்டிருந்தார். இந்த மாதிரி ஆசாமிகளைச் சீண்டி வேடிக்கை பார்ப்பதில் சந்திரசூடனுக்கு மிகுந்த உற்சாகம். மகாநாட்டில் இசை வரலாறு பற்றிய ஆராய்ச்சி சம்பந்தமான பேச்சு வந்த போது சந்திரசூடன் அவரைச் சீண்டினார்.

ஒரு கட்டத்தில், "தமிழ்நாட்டின் இசை வரலாறு சரியாகத் தெரியாததால் இப்படிச் சொல்கிறீர்கள்," என்றார் சந்திரசூடன்.

நீதிபதி சர்மாவிற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "எனக்கா வரலாறு தெரியாது?" என்றார் அலட்சியமாக.

"நீங்கள் அடிக்கொருதரம் கூறிக் கொண்டிருக்கிறீர்களே சங்கீதமும்மூர்த்திகள் என்று; இவர்கள் பிற்காலத்தில் வந்த மும்மூர்த்திகள். இவர்களுக்கு முன்பே சங்கீதத்திற்கு ஒரு மும்மூர்த்திகள் இருந்தார்கள்," என்றார் சந்திரசூடன். அவர்கள்தாம் சங்கீதத்தின் ஆதி மும்மூர்த்திகள். உங்களுக்கு தியாகையர், சியாமா சாஸ்திரி, முத்துசாமி தீக்ஷிதர் இவர்களைப் பற்றி மட்டுந்தான் தெரியும். ஆனால், கர்நாடக இசையின் வரலாறு அவர்களுக்கு முன்பே தமிழில் தொடங்கிவிட்டது." என்றார் சந்திரசூடன்.

சபையில் நிசப்தம் நிலவியது. பாவம், நீதிபதி, வசமாகச் சந்திரசூடனிடம் மாட்டிக் கொண்டாரே என்று பலர் பதறினார்கள்.

"தெருவில் வாரானோ பதத்தை இயற்றியவர், சீர்காழி முத்துத் தாண்டவர். கீர்த்தனங்களில் மூன்று சரணங்கள் அமைய வேண்டும் என்னும் மரபிற்கு முத்துத்தாண்டவர் தாம் வழிகாட்டி. தமிழில் முதன்முதலாகப் பதம் பாடியவரும் இவர்தாம். காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே என்னும் பாடலை இயற்றியவர், தில்லைவிடங்கன் மாரி முத்தாப் பிள்ளை. ஆரோ இவர் ஆரோ என்னும் கீர்த்தனையைச் சீர்காழி அருணாசலக் கவிராயர் இயற்றினார். இம்மூவரும் இப்படிப் பல இசைப் பாடல்களை இயற்றியிருக்கிறார்கள்.

இவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவில்லையென்றால், இசை வரலாறு தெரியவில்லை என்றுதான் பொருள்."

மகாநாட்டில் நீதிபதியின் கர்வத்தை அடக்கியதில் சிலருக்குப் பரம சந்தோஷம். சிலருக்கு சதஸில் நீதிபதியின் மூக்கை உடைத்து விட்டாரே என்று சந்திரசூடன் மீது கோபம்.

நீதிபதி சர்மாவைச் சீண்டி வேடிக்கை காட்டியதில் சந்திரசூடனுக்கு மிகுந்த உற்சாகம்.

சந்திரசூடன், மகாநாட்டில், சர்மாவின் அறியாமையை வெளிப்படுத்தியதை எண்ணிப் பத்திரிகை அதிபர் உற்சாகமடைந்திருந்தார்.

"மிஸ்டர் சந்திரசூடன், இன்னொரு சந்தோஷமான விஷயம் தெரியுமல்லவா?" என்று அதிபர் கேட்டார்.

அதிபர் மேஜை மீது கிடந்த தினப் பத்திரிகையை எடுத்து, நான்காவது பக்கத்தைப் புரட்டி நீட்டினார். அதை வாங்கிப் பார்த்த சந்திரசூடன் திகைப்படைந்தார். அரைப் பக்க விளம்பரம் இருந்தது. அவருடைய வாரப் பத்திரிகையில் இந்திராணியின் வரலாறு தொடராக வெளிவரப் போவது பற்றியும்; புகழ்பெற்ற நடிகையைப்பற்றி மாபெரும் எழுத்தாளர் சந்திரசூடன் எழுதப் போவது பற்றியும் விளம்பரம் விவரித்தது. இந்திராணியின் கவர்ச்சி மிக்க புகைப்படம் ஒன்றும் அச்சாகியிருந்தது.

"நான் பாதி கூட எழுதி முடிக்கவில்லையே சார். அதற்குள் விளம்பரப்படுத்திவிட்டீர்களே," என்றார் சந்திரசூடன்.

"அதனால் என்ன? மெள்ளவே எழுதுங்களேன். தேதி குறிப்பிடவில்லையே. இன்னும் ஒரு மாதத்தில் எழுதி விட மாட்டீர்களா? இப்போதே விளம்பரப்படுத்தினால்தான் பரபரப்பு இருக்கும்," என்றார் அதிபர்.

"எனக்கு இதை எழுதுவதில் உற்சாகம் இல்லை சார். சம்பத் சொன்னான் என்பதற்காக ஏதோ சம்மதித்தேன். எழுதுவதை நிறுத்தி விடுவோமா என்று கூட நினைத்துக் கொண்டிருக்கிறேன்."

"மிஸ்டர் சந்திரசூடன், விளம்பரப்படுத்தியாகி விட்டது. இனி எழுதாமல் முடியாது. எப்படியும் எழுதி முடித்து விடுங்கள்."

சந்திரசூடன் சம்மதித்துத் தலையை ஆட்டி விட்டு வந்தார். பத்திரிகையில் விளம்பரம் வந்தாகி விட்டது. இனி இந்திராணியின் வரலாற்றை எப்படியும் எழுதி முடித்துத்தான் தீர வேண்டும்.

சினிமா உலகில் அவள் ஒரு லெஜண்ட். அவளுடைய சகாப்தம் நடைபெற்றது. அதைப் பற்றிய வரலாறு, ரசமானது தான். ஆனால் சந்திரசூடனின் ஆற்றாமையெல்லாம் ஊர்வசிப் பட்டம் கிடைக்காததால் தற்கொலை செய்து கொண்டாளே என்பதுதான். அதற்கு அவர்தாம் காரணம் என்ற எண்ணம் அவரை அரித்துக் கொண்டிருந்தது. அவர் மீது தவறில்லை; அவள் தனக்குத் தகுதியில்லாத பரிசை எதிர்பார்த்தாள் என்பதெல்லாம் உண்மைதானென்றாலும்; அந்த உண்மை அவளைக் கொன்று விடும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. ஒரு பெரிய லட்சியத்தை எதிர்நோக்கி அதற்காக உயிரை விட்டாளே! புகழ், பணம், செல்வாக்கு எல்லாவற்றையும் ஒரு நொடியில் வெறுத்து உயிரைத் துறந்தது அவருக்கு மிகுந்த வியப்பை அளித்தது. புகழின் உச்சியிலிருக்கும்போது சாகத் துணிவது என்பது... ஓ. இந்த எண்ணமே அவள் மீது அவருக்கு மரியாதையை உண்டு பண்ணியது.

இனி, மேற்கொண்டு அவளுடைய வரலாற்றை எழுத வேண்டுமானால் அவளுடைய டைரி வேண்டும். அவள் டைரி எழுதிக் கொண்டிருந்தது சந்திரசூடனுக்குத் தெரியும். அதில் இவருக்கே தெரியாத பல உண்மைகள் கூடக் கிடைக்கும். கடைசியாக உள்ள இரண்டு வருஷ டைரிகள் போதும். அவற்றை அவளுடைய தாயாரிடமிருந்து வாங்கி வர வேண்டும் என்று எண்ணியபடியே இந்திராணியின் வீட்டை நோக்கிச் சைக்கிளைத் திருப்பினார் சந்திரசூடன்.

(தொடரும்)

அரசு ஊழியர்களிடையே ஒரு சாராயக் கடை!

அரசு அதிகாரிகள், அமைச்சர்கள், உதவியாளர்கள், ஐ. ஏ. எஸ். உயர் அதிகாரிகள் அரசு அலுவலர்கள், ஆகியோர் வசிக்கும் பட்டினப்பாக்கம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் தமிழ்நாடு அரசு கலால் துறையினரால் அனுமதி வழங்கப்பட்ட சாராயக் கடை (A. S. No. 83) ஒன்று 17.11.85 அன்று ஆளும் கட்சி முக்கியஸ்தர்களால் திறக்கப்பட்டு, நடத்தப்படுகிறது. இதனைக் கண்டு கொதித்த அரசு அலுவலர்கள் தங்கள் அஸோஸியேஷன் மூலம் வீட்டு வசதி வாரியத் தலைவர், தமிழக முதல்வர், தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், சென்னை நகரக் காவல்துறை ஆணையாளர் ஆகியோருக்குத் தந்தி கொடுத்தும் புகார்கள் அனுப்பியும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அனைத்து ஊழியர்களும் முதல்வரிடம் நேரில் மகஜர் சமர்ப்பிப்பது, அந்த வழியாக கோட்டைக்குச் செல்லும் முதல்வரே நேரில் மேற்படி சாராயக் கடையைப் பார்வையிட்டு நீதி வழங்கக் கோருவது என்று முடிவெடுத்துத் தீவிரமாகச் செயல்படுகிறார்கள்.

—தகவல்: ச. கமலதியாகராஜன்.


மிகப் புதியதான காஸ்கட்
ரிலீஸ் ஸிஸ்டம்
மெஜஸ்டிக்
இந்தியாவின் 100% பாதுகாப்பான பிரஷர் குக்கரை உருவாக்குகிறது
உங்கள் நேரம், பணம், எரிபொருள் மூன்றும் தொடர்ந்து மிச்சப்படுகின்றன.
உணவின் மணமும், ருசியும் மாறுமலும் வைட்டமின்கள் சக்தி குறையாமலும் பாதுகாக்கப்படுகிறது.
3 லிட்டர் முதல் 12.5 லிட்டர் வரை உள்ள மெஜெஸ்டிக் குக்கர்களும், அவை சம்பந்தப்பட்ட இதர பாத்திரங்களும் அலுமினியம் மற்றும் எவர் சில்வரில் கிடைக்கின்றன.
MAJESTIC
PRESSURE COOKER
G.R. System
எங்கள் மற்றைய பிரபலமான
விசில் செய்யும் சமையலறைத் துணைகள்.
IS 1660
ISI
13300
ரைஸ் குக்கர், மில்க் பாய்லர் இட்லி குக்கர் பிரஷர் பான்
DISTRIBUTORS FOR TAMILNADU
Naik BROTHERS
56, Purushwalkam High Road, 1st floor, MADRAS - 7 Phone: 662965 661034



“இளைய தலைமுறை தயாராகிக் கொண்டுதான் வருகிறது”

—என்கிறார், இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டியின் ‘சங்கீத கலா சிகாமணி’ விருதுபெறும் பி. ராஜம் அய்யர்:

சென்ற மாதம் ஒரு வெள்ளிக்கிழமை, மாலை. மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதர் தினம். சென்னை சபா ஒன்று, கச்சேரிக்கு ஏற்பாடு செய்தது. பாடகர், பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன் வந்து அருமையாகக் கச்சேரி செய்தார். அத்தனையும் தீட்சிதர் கிருதிகள் — அவருக்கு அஞ்சலி செலுத்துகிற மாதிரி.

கச்சேரி முடிந்ததும், சபா காரியதரிசி சன்மான உறையை வித்துவான்களிடம் கொடுத்தார். பாடகர் மட்டும் அதை வாங்கிக் கொள்ளாமல் பணிவுடன் மறுத்து விட்டார். ‘‘தீட்சிதர் கிருதிகளை இன்றைக்கு ஆத்மார்த்தமாகப் பாட நீங்கள் வாய்ப்புக் கொடுத்ததையே பெரிய சன்மானமாகக் கருதுகிறேன். நீங்கள் தவறாக நினைக்காமல், இதைத் திருப்பி எடுத்துக் கொள்ள வேண்டும்!’’ என்றார் அந்தப் பாடகர்.

இப்படியும் ஒருவர் இன்று கூட இருக்க முடியுமா என்றால்,

அவர்தான் —

வித்துவான் பி. ராஜம் அய்யர்!

சக மாணவர் மதுரை மணி:

அரியக்குடியின் சிடர் என்ற பெருமை ராஜம் அய்யருக்கு உண்டு. ஆனாலும், தீட்சிதரின் கீர்த்தனைகளை, சங்கீத கலாநிதி ஜஸ்டிஸ் டி. எல். வெங்கட்ராமய்யரிடம் சிரத்தையாகப் பயின்றவர் என்ற சிறப்பும் இவருக்கு உண்டு.

''டி. கே. பட்டம்மாள், டி. கே. ஜெயராமன் போலவே, மதுரை மணி அய்யரும் எங்களுடன் தீட்சிதர் கிருதிகளைப் பாடம் பண்ணியிருக்கிறார். கச்சேரிகளில் மதுரை மணி அவர்கள் தீட்சிதர் கிருதிகளைப் பாடாமல் இருக்கவே மாட்டார். தமது சகோதரியின் குழந்தைக்கு, தீட்சிதர் பாடிய தெய்வமான கமலாம்பாளின் பெயரை வைத்தார் மதுரைமணி.

கார் வர வேண்டாம்!

பிரபல புள்ளிகள் சிலர், பி. ராஜம் அய்யரின் சிஷ்யைகள்:

வைஜயந்திமாலா

ஜெயலலிதா,

சிவசங்கரி.

''சிவசங்கரி எப்படிப் பாடுவார்?''

''நல்ல ஞானம் உண்டு. குரல் நன்றாக இருக்கும்!'' என்று தம் சிஷ்யைக்குச் சின்ன சர்ட்டிபிகேட் கொடுத்தார்.

''ஜெயலலிதா?''

''ஆரம்பத்தில் ஆர்வம் இருந்தது. அப்புறம் போய்விட்டது. என்னை அழைத்துப் போக வந்த காரும் திருப்பி அனுப்பப்பட்டுப் போய் விட்டது. இதை நான் குற்றமாகச் சொல்லவில்லை. அவர் ஆர்வம் திசைதிரும்பி விட்டதைத்தான் குறிப்பிடுகிறேன்.''

இன்னொரு இசையரசியின் பெயரையும் குறிப்பிட்டார் ராஜம் அய்யர்:

அவர் — என். ஸி. வசந்தகோகிலம்.

ஒரு கச்சேரியில் வசந்தகோகிலம், பைரவி ராக நவாவர்ண கிருதியைப் பாடிக் கேட்டு விட்டு டி. எல். வெங்கட்ராமய்யர், ''ரொம்ப நன்றாகச் சொல்லிக் கொடுத்திருக்கிறீர்கள்!'' என்று பாடியவரை விட சொல்லிக் கொடுத்தவருக்கு முக்கியத்துவம் தந்து பாராட்டினாராம்.

கடுந்தவம்

காரைக்குடிக்கு அருகேயுள்ள ஒரு கிராமத்தில் பிறந்த ராஜம் அய்யருக்கு முதல் குரு, குன்னக்குடி கணபதி அய்யர். ''பிறகுதான் 1937 முதல் 67 வரை சுமார் முப்பது ஆண்டுகள் அரியக்குடியின் கீழ் பயிலவும், அவருடன் பழகவும், கச்சேரிகளில் அவருடன் பாடவும் செய்தேன். இந்தக் கச்சேரிகள் கடுந்தவம் மாதிரி. இசையை உணர்ந்து, கூட்டத்தைக் கணித்துப் பாடுவது ஒரு தனிக் கலை.''

ஓயாத உழைப்பு:

இசைக்கல்லூரிப்பேராசிரியராகஇருந்ததனால், இசையை முறைப்படி சொல்லிக் கொடுப்பதில் மட்டுமே வல்லவர் என்று நினைக்க வேண்டாம். சுப்பராம தீட்சிதரின் 'சம்பிரதாய ப்ரதர்சினி' நூலைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்திருக்கிறார்.

பல பரிசுகள், ஷீல்டுகள், பட்டங்கள் (லேட்டஸ்ட்: பம்பாய் சுர் சிங்கார் சம்சதின் 'சுவர விலாஸ்') இவரை அடைந்திருந்தாலும், இந்திய அரசின் கல்வி கலாசாரத் துறையின், மிகச் சிறந்த பாடகர் என்ற 'சீனியர் ஃபெலோஷிப்' கிடைத்ததுதான் தனிப் பெருமை. ''ராகங்களைப் பற்றி விரிவாக எழுதி, அதன் லட்சியமான கீர்த்தனைகளை நொட்டேஷன்களுடன் எழுதித் தயாரித்து வருகிறேன். 150 ராகங்களில், 50 முடிந்து விட்டது. இதை என்னுடைய முக்கியமான பணியாக நினைக்கிறேன்!''

உழைப்பு வீண் போகாது

''என்னைப் பொறுத்தவரை, கச்சேரிகளில் என் குருவைப் பின்பற்றி அவர் பாணியிலேயே பாடி வருகிறேன். நடுவில் நேரம் வீணாக்காமல் அவர் தொடர்ந்து பாடுவார். அப்படியேதான் நானும் செய்கிறேன்.''

இவருடைய வெளிநாட்டுச் சீடர்களில் முக்கியமானவர் அமெரிக்கா ஆம்ஹெர்ஸ்ட் கல்லூரியைச் சேர்ந்த டேவிட் ரெக். பிரிட்டிஷ்காரரான பீட்டர் சைல்ட். ஜப்பானியப் பெண் அகிகோ நிஷுஒசி.

''யாருக்கெல்லாம் உழைப்பு இருக்கிறதோ, அவர்கள் நிச்சயம் முன்னுக்கு வருவார்கள். இளைய தலைமுறை தயாராகிக் கொண்டுதான் வருகிறது. மரபில் எங்களுக்கு இருந்த நம்பிக்கை, இளைய தலைமுறைக்கும் இருந்தால், வருங்கால இசையுலகம் பற்றிக்கவலைப்படவேண்டாம்!'' என்கிறார் ராஜம் அய்யர்.

பேட்டி: சாருகேசி.

"எல்லோரும் பாட வேண்டும்!"

—என்கிறார், மியூசிக் அகாடமியின் 'சங்கீத கலாநிதி' விருது பெறும் இசை மேதை டாக்டர் எஸ். ராமநாதன்:

''மதுரை சத்குரு சங்கீத வித்யாலயா இசைக் கல்லூரியின் முதல்வராக இருந்த போது, விக்டோரியா என்ற பெண் அங்கே சங்கீதம் பயின்று வந்தாள். அவளுக்கு இசை கற்பித்த ஆசிரியர், 'என்ன பாட்டுப் பாடுகிறாய் நீ? உனக்கு இந்த ஜென்மத்தில் பாட்டு வராது!' என்று கோபமாகச் சொல்லிவிட்டார். விக்டோரியாவின் அப்பா போலீஸ்காரர். என்னை வந்து பார்த்தார்.

''ஐயா, எங்களுக்கு அடுத்த ஜென்மாவில் நம்பிக்கை கிடையாது. நாங்கள் என்ன பண்ணுவது?' என்று ஒரு கேள்வி கேட்டார்.



''நான் அவளுடைய ஆசிரியரைக் கூப்பிட்டு, 'விக்டோரியாவுக்குப் பாட்டு வருகிற மாதிரி சொல்லிக் கொடுக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. அதற்குத்தான் உங்களை நியமித்திருக்கிறது!' என்று அறிவுரை கூறி அனுப்பினேன்'' — என்று பழைய நிகழ்ச்சி ஒன்றை நினைவு கூர்ந்தார், 'சங்கீத கலாநிதி' டாக்டர் எஸ். ராமநாதன்.

''மேற்கேஎல்லாம் இசையுணர்வு இல்லாத குழந்தைகளே கிடையாது என்கிறார்கள். 'உனக்கு எங்கேடா வரப் போகிறது!' என்று ஒதுக்கி விடுதல் சரியாகாது'' என்கிறார் டாக்டர் ராமநாதன்.

தென் ஆற்காடு மாவட்டம் வளவனூரைச் சேர்ந்தவர் டாக்டர் ராமநாதன்.

''திருக்கோவிலூரிலும், பிறகு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பயின்று, பிறகு திருக்கோவிலூரிலேயே ஆசிரியராக இருந்தேன். ஆரம்பத்தில், திருக்கோயிலூர் ராமுடு பாகவதர், மணலூர்பேட்டை சுப்பிரமணிய தீட்சிதர் இவர்களிடம்தான் இசை பயின்றேன். பிறகு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பொன்னையா பிள்ளை, சபேசய்யர், டைகர் வரதாசாரியார், மதுரை சுப்பிரமணிய ஐயர், சாத்தூர் கிருஷ்ணய்யங்கார், வாலாடி கிருஷ்ணய்யர் இவர்களிடம் நிறையப் பாடம் பண்ணினேன். தேவக்கோட்டை நாராயண அய்யங்காரிடம் வீணை கற்றுக் கொண்டேன். புதுக்கோட்டையில் என் வாழ்க்கையைத் துவங்கினேன். அங்கேதான் காரைக்குடி சாம்பசிவ அய்யரைக் கேட்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

''1945 ல் சென்னைக்கு வந்தேன். 'வீணை ராமன்' என்றுதான் எனக்கு அப்போது பெயர். அதிகமாய் வீணை வாசிக்கத்தான் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன்.''

சிலப்பதிகாரத்திலுள்ள இசை பற்றி ஆராய்ச்சி செய்து புத்தகம் எழுதினார் 1956 ல். ''சங்கீத உலகம் என்னைக் கவனிக்கத் தொடங்கியதும் இதற்குப் பிறகுதான்!'' என்கிறார்.

சங்கீத நாடக சங்கத்தில் ''ரிசர்ச் ஆபீசர்'' பதவியில் நியமித்தார்கள். அப்போது இவர் போகாத ஊரில்லை. தேவார ஓதுவார்களைச் சந்தித்தார். காவடிச் சிந்து, தியாகராஜரின் உற்சவ சம்பிரதாயம், பிரகலாத பக்த விஜயம், பஜனை சம்பிரதாயம் இவற்றைத் தொகுத்தார். 1962 ல், அரசு இசைக்கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

''64, 65 ல் விஸிடிங் புரொபசராக, வெஸ்லியன், இல்லினாய், கோல்கேட், வாஷிங்டன் ஆகிய பல்கலைக்கழகங்களில் பணியாற்றினேன். வெஸ்லியனில் ராபர்ட் ப்ரௌன்; கோல்கேட்டில் வில்லியம் ஸ்கெல்டன்; இல்லினாயில் ப்ரூனோ ரெட்டில் — என் மாணவர்கள். இவர்கள் அங்கே இசைத்துறைத் தலைவர்கள். அவர்களுடன் இப்போதும் எனக்குத் தொடர்பு இருக்கிறது. இப்போது எல்லோரும் இங்கே வந்திருக்கிறார்கள்...

பழைய தமிழ்ப்பண்கள் பற்றி வெஸ்லியனில் ஓர் உரை நிகழ்த்தினார் டாக்டர் ராமநாதன். இதையே தீஸிஸ் ஆகக் கொடுக்கச் சொன்னாராம் ஜான் பார்லோ. குறிப்பாக, 'சிலப்பதிகாரத்தில் இசை' என்ற பணிக்குத்தான் வெஸ்லியன் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டரேட் அளித்தது.

இந்தியாவிலுள்ள பல பல்கலைக்கழகங்களின் ''போர்ட் அஃப் ஸ்டடீஸ்'' உறுப்பினர். (லிஸ்ட் வெகு நீளம்!) கேரள பல்கலைக்கழக நுண்கலைப் பகுதியின் டீன்; தமிழிசைச் சங்கத்தின் கௌரவ முதல்வர்; மத்திய சங்கீத நாடக அகாடமி கவுன்சில் மெம்பர்... ''இன்னும்?'' ''வானொலியிலும் சில காலம் வேலை பார்த்திருக்கிறேன்!''

பாரதியாருடைய பாடல்கள் பலவற்றை, அவர் போட்ட ஒரிஜினல் ட்யூன்படியே தொகுத்து, அரசாங்க ஆவணத்துக்குக் கொடுத்திருக்கிறார். அது ஸ்வர மெட்டுகளுடன் புத்தகமாக வெளிவர இருக்கிறது. 'தியாகராஜருடன் ஒருநாள்' என்ற நிகழ்ச்சியை, தெலுங்கிலும் ஆங்கிலத்திலும் இதுவரை அறுபது முறை நிகழ்த்தியிருக்கிறார். வால்மீகி, கம்பன், அருணாசலக்கவி, தியாகராஜர் ஆகியோரது பாடல்களிலிருந்து 'சங்கீத ராமாயணம்' உபந்நியாசமாகச் செய்து வருகிறார்.....

வேலைக்குப் போகிறவர்கள், வீட்டிலேயே இருக்கும் பெண்மணிகள், வங்கிகளில் பணி செய்கிறவர், புதிதாகச் சங்கீதம் பயில விரும்புபவர் — என்று அவரவர் ஓய்வு நேரத்துக்குத் தகுந்த மாதிரி காலை, மாலை, சனி, ஞாயிறு என்று பலவித வகுப்புகள் நடத்துகிறார் டாக்டர் ராமநாதன். இந்த வகுப்புகளின் சுவாரஸ்யத்தில் கவரப்பட்டு மாணவர்கள் மட்டுமின்றிப் பார்வையாளர்களும் வந்து அமர்கிறார்கள்!

ஒரு டிரேட் மார்க் போல இவருடைய வெள்ளைத்தாடி முகம் பிரசித்தமானது. ''அமெரிக்காவில் இருந்த போது இரண்டு வேளையும் எலக்ட்ரிக் ஷேவரில் வரட் வரட்டென்று முகச் சவரம் செய்ய நேர்ந்த போது, ஒருநாள் அது வேண்டாம் என்று தீர்மானம் செய்தேன். அங்கே எல்லா மாணவர்களுமே தாடி வைத்துக் கொண்டிருந்தார்கள்! பெர்னாட் ஷா எழுதியிருக்கிறார் — 'சரியான வயதில் மீசை தாடி முளைக்காவிட்டால், முளைக்கவில்லையே என்ற கவலையாய் இருக்கிறது. முளைத்து விட்டாலோ என்ன கஷ்டம்டா இது என்று தோன்றுகிறது!' ''

''உங்களுடைய இசை வாழ்க்கையில் எந்தத் தருணத்தை உங்களுக்கு மிகுந்த மனமகிழ்ச்சி தந்ததாகக் கருதுகிறீர்கள்?''

''என்னுடைய ஆசிரியர்கள் பாடுவதைக் கேட்டபொழுது. ஒரு விஜயதசமி அன்று, என் குரு பொன்னையா பிள்ளை அவர்கள், சஹானா ராகத்தில், 'பண்ணேன் உனக்கான பூஜை' பாடலைப் பாடிக் கொண்டிருந்த போது, மெய்சிலிர்த்துப் போய்க் கேட்டேன். அதேபோல் சபேசய்யர் பாடிய சாவேரி. டைகர் பாடிய தன்யாசி, சங்கராபரணம், யதுகுல காம்போதி... இவற்றைக் கேட்ட தருணங்கள், வாழ்க்கையில் மறக்க முடியாதவை.

'சாஸ்திரீய சங்கீத ஆர்வத்தை மக்களிடம் பெருக்குவது எப்படி?

''சராசரி ஜனங்களுக்கு இசை சம்பந்தமாக ஏதேனும் சொல்லுங்களேன்? அதிலிருக்கிற விஷயத்தைத் தெரிந்து கொண்டால் அப்புறம் முழுதுமாக ரசிப்பார்கள் இல்லையா?' என்று கேட்டார்கள், சாந்தி அமைதி நிலையத்தினர். அதற்காக மாதம் ஒருமுறை 'இசை மஞ்சரி' என்ற கூட்டம் நடத்துகிறேன். உரையாடுவது போலப் பேசுகிறேன். இதைக் கேட்க வரும் அவர்களைப் பாடும்படியாகவும் பண்ண - வேண்டும். எல்லோராலும் பாட முடியும். மேடை ஏறித்தான் பாட வேண்டும் என்பதில்லை. பாடும் போது கவலைகள் பறக்கின்றன. மனம் இலேசாகிறது. மன அமைதி உடல் ஆரோக்கியத்துக்கும் உதவுகிறது.''

டாக்டர் ராமநாதன் சொல்லாமல் விட்டுவிட்ட இன்னொரு விஷயம்: மற்ற வித்துவான்கள் செய்யும் கச்சேரிகளுக்கு எல்லாம் தவறாமல் வந்து, அவர்களது இசையை ரசித்துக். கேட்கிறார். இவருடைய வயது, சீதோஷ்ண நிலை எதுவும் இதற்குக் குறுக்கே நிற்பது கிடையாது.

டாக்டர் ராமநாதனைப்- பார்த்ததுமே, (தாடியைத் தவிர) பளிச்சென்று வெளிப்படையாகத் தெரிபவை?

சுறுசுறுப்பு.

எளிமை.

பேட்டி: எஸ். விசுவநாதன்.

"நாட்டிய ஆசிரியருக்கு சங்கீதப் பிரக்ஞை அதிகம் வேண்டும்!"

—என்கிறார், தமிழிசைச் சங்கத்தின் 'இசைப் பேரறிஞர்' விருது பெறும் கே. பி. கிட்டப்பா பிள்ளை:



தஞ்சாவூரில், மேல வீதியில், 'பொன்னையா இல்ல'த்தில் வசிக்கிறார், நாட்டியக் கலை ஆசிரியர் கே. பி. கிட்டப்பா பிள்ளை, புகழ் பெற்ற 'தஞ்சை நால்'வரில், இவர் ஏழாவது தலைமுறையைச் சேர்ந்தவர். வீணை வித்துவான் கே. பி. சிவானந்தம் இவரது சகோதரர். தமிழிசைச் சங்கத்திலேயே சில வருடங்கள் பணியாற்றியவர் கே. பி. கிட்டப்பா பிள்ளை.

தஞ்சாவூரில் மட்டுமல்லாமல், பெங்களூரில் பசவங்குடியிலும், சென்னையிலும் கூட இவர் நாட்டிய வகுப்புகள் நடத்துகிறார்...

கிட்டப்பா பிள்ளை அவர்களுடன் நடந்த உரையாடலின் ஒரு பகுதி:

1. தஞ்சாவூரிலிருந்து உங்களிடம் யாரும் கற்றுக் கொள்ளுகிறார்களோ?

ஊஹூம். வெளியூரிலிருந்து தஞ்சைக்கு வந்து கற்றுக் கொள்ளுபவர்கள், வெளி நாட்டு மாணவிகள் என்றுதான் இருக்கிறார்கள். தஞ்சையிலிருந்து யாரும் கிடையாது.

2. நடனம் சொல்லித் தரும் ஆசிரியருக்கு, நடனம் ஆடவும் தெரிந்திருக்க வேண்டுமா?

கட்டாயம். என்ன செய்யணும் என்று அப்போதுதான் வெளிப்படுத்த முடியும். இதைவிட சங்கீத ஞானம் அவசியம் இருக்க வேண்டும். அப்படி இல்லாதவர் ஆசிரியராக இருக்கத் தகுதி இல்லை. கீதம், நிருத்யம், வாத்யம் மூன்றும் தெரிந்தவர்தான் முழுக் கலைஞர். நாட்டிய ஆசிரியருக்கு, நாட்டியத்தை விடச் சங்கீதப் பிரக்ஞை அதிகமாக இருக்க வேண்டும்.

3. சுமார் 20 — 25 வருடங்களுக்கு முன் நடன ஆசிரியர்கள் பயிற்சி அளித்த முறைக்கும், இப்போது நீங்கள் உட்பட பலர் அளித்து வரும் பயிற்சி முறைக்கும் என்ன வித்தியாசம்?

அன்றைக்கு எப்படிப் பயிற்சி கொடுத்தார்களோ, அந்தப் பாணியிலேயேதான் இன்றும் சொல்லிக் கொடுத்து வருகிறோம். எங்கள் குடும்பத்து முன்னோர்களைவிட, இப்போது அதிகமான கற்பனைகளுடன், லயத்தில் எத்தனை வித்தியாசம் (பல வழிகள்) உண்டோ அத்தனையும் செய்யும்படியாக நாங்கள் பயிற்சி அளித்து வருகிறோம்.

4. இப்போது பல மாணவிகள், பல பாணிகளில் நாட்டியம் பயிலுகிறார்கள். இதில் ஒன்று உயர்ந்தது, மற்றொன்று தாழ்ந்தது என்று வேறு சொல்லிக் கொள்கிறார்கள். சாதாரண ரசிகர்களுக்கு என்னவோ அப்படியொன்றும் இவற்றில் பெரிய வித்தியாசம் தெரிவதில்லை. இதில் உண்மையிலேயே எது உயர்ந்த பாணி அல்லது சுத்தமான பாணி?

'பாணி' என்பதை, பழக்கப்படாத சாதாரண ரசிகர்கள் புரிந்து கொள்ள முடியாது தான். கால்களால் அடவு, கைகளால் முத்திரை, முகத்தால் பாவம் என்று எல்லா ஆசிரியர்களும் ஒரே மாதிரிதான் சொல்லிக் கொடுக்கிறார்கள். நாட்டியம் எப்படி இருக்க வேணும்; எப்படி இருந்தால் அது நாட்டியம் என்பது, அந்தப் பரம்பரையில் வருகிறவர்களுக்குத்தான் தெரியும். அவர்கள் கண்ணுக்குத்தான் புலப்படும். மாணவியைப் பொறுத்தவரை, அனுபவம் வரவரத்தான் அது புலனாகும். முறையாக நடனம் ஆடும் எந்த மாணவியும் கொஞ்ச நாளில் அதைப் புரிந்து கொள்ளுவார். நடனத்தில் உள்ள 'கோர்வை'களைக் கொடுக்கிறோம். வழிமுறைகளைச் சொல்லித் தருகிறோம். தஞ்சாவூர் பாணி, பந்தநல்லூர் பாணி, கந்தப்பா பிள்ளை பாணி, பாலா பாணி என்று பாணிகள் பிரபலமாகி இருப்பதும், இவர்களுக்கு ஒரு மரியாதை இருப்பதும் இந்த ஒழுங்கு முறை காரணமாகத்தான்.

காலப்பிரமாணம் வேகவேகமாக ஓடஓட, அபிநயம், லயம், அங்கசுத்தம் எல்லாம் கூடவே ஓடிப் போயிடும்!



பம்பாயில் புதிய இசைக் கருவி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் 'மியூசிகல் டோர்பெல்' என்பது. இது ஆட்டோமேடிக் இசைக் கருவி. இதனை வீடுகளில் பொருத்திக் கொண்டால் தேவையான போது இனிமையான இசையைக் கேட்கலாம். இதற்கு 'கேசட்' போன்றவை தேவையில்லை. இதன் மீது படும் காற்றே விதவிதமான இசையை வெளிப்படுத்துகின்றது. இதன் விலை 135 ரூபாய் மட்டுமே!

— தகவல்: மேஜர்தாசன்.

---

5. ஆறேழு வருடங்கள் நடனம் கற்றுக் கொள்ளும் மாணவிகள், பிறகு தனியே அபிநயத்துக்கு மட்டும் வேறொருவரிடம் பயிற்சி பெறும் வழக்கம் சென்னையில் இப்போது வந்திருக்கிறது. இதை நீங்கள் வரவேற்கிறீர்களா?

இதற்கு, நடன ஆசிரியர் முழுமையாகச் சொல்லிக் கொடுக்கிறாரோ என்ற கேள்வி தான், பதிலாக எழும். சரியான நடன ஆசிரியராக இருக்கிற பட்சத்தில், வேறு ஒருவரிடம் போக வேண்டிய அவசியம் ஏன் எழுகிறது? அபிநயம் நடனத்தோடு சேர்த்தி இல்லையா என்ன?

6. ஒரு நடன ஆசிரியரிடம் கற்றுக் கொண்ட மாணவி, அவரை விட்டு விட்டு வேறொரு ஆசிரியரிடம் பயில வரும்போது, ஆரம்பத்திலிருந்து மறுபடி பயிற்சி ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது என்கிறார். எல்லா நடன ஆசிரி

யர்களும் ஏன் ஒரே மாதிரி பயிற்சி முறை வைத்துக் கொள்ளக் கூடாது?

அவரவர்களுக்கு முறை வேறுபட்டுப் போய்விடுவதால் பல சந்தர்ப்பங்களில் ஆரம்பத்திலிருந்து தொடங்குவது அவசிய மாகத்தான் இருக்கும். எல்லோரும் ஒரே மாதிரி பயிற்சி முறை வைத்துக் கொண்டால் எல்லாம் ஒரே பாணியாகிவிடும்! எனவே குருவைத் தேர்ந்தெடுக்கு முன் ரசனையோடு நன்கு கவனித்து 'நமக்கு இதுதான் வேணும்' என்று தீர்மானித்துப் பிறகு கடைசி வரை அதிலேயே நிற்பதுதான் நல்லது. கலையைக் கற்றுத் தருவது என்பது கணக்குப் பாடம் போதிப்பது போன்றல்ல. இதிலே மனோதர்மம், கற்பனை எல்லாம் இருக்கிறது அல்லவா?

குரு கிட்டப்பா பிள்ளை அவர்களிடம் நாட்டியம் கற்றுக் கொள்ள அமெரிக்க மாணவிகள் அதிகம் வருகிறார்கள். "வருடத்தில் மூன்று மாதம் நான்கு மாதம் படு சீரியஸாய்க் கற்றுக் கொண்டு, பிறகு தமது நாட்டுக்குப் போய், பணம் சேர்த்துக் கொண்டு மறுபடி வருவார்கள். அவர்களுடைய ஆர்வம் கொஞ்ச நஞ்சமல்ல."

வெளிநாடுகள் பலவற்றுக்கும், தமது சிஷ்யைகள் ஹேமமாலினி, மேனகா டக்கர், கே. ஜெயலட்சுமி இவர்களுடன் போயிருந்தாலும், கிட்டப்பா பிள்ளைக்கு அவையொன்றும் அத்தனை பெரிய விஷயங்களாய்த் தோன்றவில்லை. நயாகரா நீர்வீழ்ச்சியைப் பார்த்தது மட்டும் குறிப்பாக நினைவில் இருக்கிறது.

பேட்டியின் போது —

பிரபல நடன விமர்சகர் களில் கோத்தாரி சொல்லி, அஞ்சனா பானர்ஜி என்ற பெண்மணி கல்கத்தாவிலிருந்து வந்திருந்தார், -கணவருடன். எதற்கு? அவரிடம் நடனம் பயில! "ஏற்கெனவே ஆரம்பப் பயிற்சியை முடித்திருக்கிறேன் கல்கத்தாவில். பரதநாட்டியத்தின் மீது எனக்கு அபாரப் பற்று. குரு கிட்டப்பா பிள்ளை அவர்களிடம் பயிலுவது பெரிய பாக்கியமென்று 'கருதி வந்திருக்கிறேன்!" என்றார், அஞ்சனா.

பேட்டி: **சித்தார்த்.**

மேலட்டையில் எஸ். ராமநாதன் இசை வகுப்பு நடத்துகிறார். தவிர, இவ்வாண்டு விருது பெறும் கலைஞர்களான ராஜம் அய்யர், எஸ். ராமநாதன், கிட்டப்பா பிள்ளை ஆகியோரையும் காணலாம்.

வண்ணப்படங்கள்: **யோகா**



எத்தனை நாளாச்சு ஒய்.ஜி.மகேந்திரனைப் பார்த்து!

பளபளவென்று அலங்காரக் கோட்டும், உள்ளே நூறு பொத்தல் விழுந்த பனியனுமாய் ஏழைப் பாடகர்கள் இரண்டு பேர். கொழு கொழுவென்ற சுதிர் ஒருத்தர். ஒய். ஜி. எம். அடுத்தவர். வாய்ப் பந்தல் போட்டு வெகு கௌரவமாய் வெளியே காட்டிக்கொள்வதாலேயே வரிசையாய்ப் பிரச்னைகளில் மாட்டிக் கொள்கிறார் மனிதர்.

சுதிருக்கும், ரசிகை வனிதாஸ்ரீக்கும் ஒரு இது. காதலன் பொய் சொன்னான், உண்மையில் பஞ்சப்பாட்டுக்காரன் என்று தெரிந்ததும், ஊடல் வேறு. ஊடல் காட்சிக்குப் போகுமுன் இரண்டு டூயட்டும் உண்டு.

மகாராஜா பரம்பரையில் வந்த வி.கே.ஆர். தன் மகளை ராஜ பரம்பரையிலேயே சம்பந்தம் செய்ய நினைத்துச் சில வைரங்களுக்கு ஏற்பாடு செய்ய, அந்த வைரங்களைக் கடத்த வில்லன் கோஷ்டி முடிவு செய்ய, படம் சீரியஸாய்ப் போயிருந்தால் கஷ்டமாயிருந்திருக்கும். ஆனால் டைரக்டர் ஜெயசந்தர் சாமர்த்தியமாய் நகைச்சுவை லைனுக்கு நகர்ந்து விடுகிறார்.

ஒல்லி ஒல்லியாய் கோட் சூட் போட்டுக் கொண்டு—என்னய்யா வில்லன்கள்! போணியாகாத ஸேல்ஸ் ரெப்ரஸண்டேடிவ்கள் மாதிரி!

வீட்டு வாடகை கொடுக்காமல் டபாய்க்க ஒய். ஜி. எம்மும், குண்டு கல்யாணமும் அடிக்கும் கூத்து கலகல.

பாடல்கள் இனிமை. இசை லட்சுமி நாராயணன்.

க்ளைமாக்ஸ் காட்சி:

வைரங்கள் இருப்பதாய் நினைத்துக் கொண்டு நகைப் பெட்டியுடன் வில்லன் ஓட, அவனை இரண்டு பேர் துரத்த, எதற்காக ஓடுகிறார்கள், எங்கே ஓடுகிறார்கள் என்று தெரியாமலேயே கொஞ்சம் கொஞ்சமாய்க் கூட்டம் சேர்ந்து எல்லோரும் பின்னோடு ஓட.... சாவு ஊர்வலமும் ஒன்று குறுக்கிட....

அதிர அதிரச் சிரிக்க முடிகிறது.

—ஜெயமன்மதன்.

சரணாகதி அடைந்தது போல, எட்டு மாகாண நிர்வாகங்களையும் பிரிட்டிஷாரிடமே ஒப்படைத்துவிட்டது பெரும் தவறு என்று சிலர் வாதித்தனர். பிரிட்டிஷ் அரசுக்கும், பிற்காலத்தில் சுதந்திர இந்தியாவுக்கும் தன் நிர்வாகத் திறமையாலும் சட்டங்களை வரையும் ஆற்றலாலும் உதவிய வி.பி. மேனன் ஐ. ஸி. எஸ்., ''காங்கிரஸ் மந்திரிசபைகளின் ராஜினாமா, பிரிட்டிஷாரிடையே ஹிந்துக்கள் தாம் தங்களது ஜன்ம சத்ருக்கள் என்ற எண்ணத்தை உண்டாக்கியது'' என்று எழுதியுள்ளார். அவர் அபிப்பிராயப்படி முஸ்லிம்கள் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, யுத்தத்துக்கு ஆதரவு தந்து, பிரிட்டிஷாருக்குத் தாங்கள் அத்தியந்த நண்பர்கள் என்ற எண்ணத்தை உண்டாக்கிவிட்டனர். காங்கிரஸ் பின்வாங்கியதால் லீகின் கை ஓங்கியது என்பதில் சந்தேகமேயில்லை. மேனனின் அபிப்பிராயப்படி இந்தச் சம்பவமே பின்னால் பாகிஸ்தான் பிரிவினைக்குப் பாதை அமைத்துத் தந்தது.

நிபந்தனையற்ற ஒத்துழைப்புத் தரவேண்டும் என்ற எண்ணம் ஸி. ஆருக்கே இருந்ததென்பதை முன்னம் பார்த்தோம். ஆயினும் காங்கிரஸ் ஒரு முடிவெடுத்த பிறகு அந்த முடிவை நியாயப்படுத்தவே தமது வாதத் திறனை முழுமையாகப் பயன்படுத்தினார் ஸி. ஆர். ராஜினாமா செய்த ஸி. ஆரின் சட்டசபைப் பேச்சு இதற்குச் சான்றாக உள்ளது. அதில் சில பகுதிகள்:

''பிரிட்டிஷ் மக்கள் ஜனநாயக முறையில் தங்களை ஆண்டு கொள்கிறவர்கள். ஆனால் அவர்கள் ராஜ்யத்தை விஸ்தரித்துக் கொண்டே போகிற ஏகாதிபத்திய மனப்பான்மை கொண்டவர்கள். தங்களைப் பிறர் ஆள்வதை அவர்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் இந்தியாவை மட்டும் அவர்களது அயல் விவகார மந்திரியே ஆள வேண்டுமாம்! ஒரு தனி மனிதன் இந்தியாவை ஆள வேண்டுமாம்!

''லாங்கலி'' நமது நியாய உணர்வைத் தட்டி எழுப்புகிறார். ரொம்ப சரி. அவர் 'இந்த யுத்தம் நல்ல யுத்தம் — மகாத்மாஜியே சொன்னாரே!' என்கிறார். நாமும் ஒப்புக் கொள்கிறோம். யுத்தத்தைப் பொறுத்தமட்டில் பிரிட்டிஷார் பக்கம் நியாயம் இருக்கிறது. ஆனால் இன்னும் ஓர் அடி எடுத்து வைக்க வேண்டுமே. நாம் யுத்தத்தில் சேர வேண்டுமே...! ஐரோப்பிய நேச நாடுகளைக் கேட்கிறேன் — அமெரிக்கா அவர்களை ஆதரிக்கிறது. ஆனால் யுத்தத்தில் சேர்ந்துள்ளதா? இல்லையே! அவர்களும் உயர்ந்த மனிதர்கள் தாம். அடிமைகளின் விடுதலைக்காக உள்நாட்டுப் போருக்கேதுணிந்தவர்கள்... கடமை உணர்வு மிக்கவர்கள் — ஆனால் அவர்கள் இந்தத் தர்ம யுத்தத்தில் சேர்ந்தார்களா...? நாம் அவர்களைப் போலன்றி யுத்தத்தில் பங்கேற்கத் தயாராகவே இருக்கிறோம் — ஆனால் ஒரு தாம்புக் கயிற்றின் நுனியில் இறுகக் கட்டுண்டிருக்கும் நிலையில் நாம் எப்படி யுத்தம்புரிய முடியும்? சுதந்திர மனிதர்களாகத்தான் சேர முடியும்!

''இங்கிலாந்து தனது யுத்த அறிக்கையில் 'உலகம் சுதந்திரமாக இருக்க வேண்டும்' என்கிறது. 'இதுவரை நாம் சுதந்திரத்தின் மீது நடந்த தாக்குதல்களைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டோம். இனியும் தாங்க முடியாது என்ற கட்டத்தில் யுத்தத்தில் இறங்குகிறோம்' என்று கூறுகிறது. ஜெர்மனியை பிரிட்டன் தாக்கக் காரணம், இங்கிலாந்து மீதோ, ஃப்ரான்ஸ் மீதோ, ஜெர்மனி படையெடுத்தது என்பதற்காக அல்ல; சுதந்திரத்தை ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றவே யுத்தத்தில் இறங்குகின்றனர் என்பதை அவர்



ஹிட்லர் போட்ட முட்டுக்கட்டை



வி. பி. மேனன்.

கள் அறிக்கை தெளிவாக்குகிறது. நாம் கேட்கிறோம், 'இந்தச் சுதந்திரம் ஐரோப்பியர்களுக்கு மட்டுமா? ஐரோப்பாவைச் சேர்ந்தசிறுநாடுகளுக்கும் அவற்றின் குறைந்த அளவினதான மக்கள் தொகைக்கும் மட்டுமா? அல்லது இந்தப் பரந்த தேசத்தின் பழைமையான மக்களுக்கும் அந்தச் சுதந்திரம் உண்டா? ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்தியாவில் வாழ்ந்து பிரிட்டிஷாரிடம் தோழமை பாராட்டிவரும் இந்திய மக்களுக்கு அந்த சுதந்திரம் கிடையாதா?''

முத்தையா செட்டியார் இதனை, ''சக்தி மிக்க, தங்கு தடையின்றிப் பெருகிய சொற்பொழிவு'' என்று வர்ணித்தார். பன்னீர்ச் செல்வம் தாம் கேட்ட பேச்சுக்களிலேயே அதி அற்புதமானது இதுதான் என்றார். பிரதம மந்திரி சட்டசபையில் ஆற்றிய உரைகளிலேயே மிகச் சிறந்ததாக இதைக் கருதினார் கிருஷ்ணமாச்சாரி.

அக்டோபர் 30ம் தேதி ஸி. ஆர். ராஜிநாமா செய்தார். அமைச்சரவையின் ராஜிநாமாவைச் சமர்ப்பித்த முதல் மாகாணப் பிரதம மந்திரி அவர்தான். செக்ஷன் 93 அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. எர்ஸ்கைன் ஆலோசகர்களின் துணையுடன் ஆட்சியை மேற்கொண்டார்.

ராஜிநாமாவைச் சரியான, அவசியமான செயலாக ஸி. ஆர். கருதிய போதிலும் அவ்வாறு அவரைச் செய்யத் தூண்டிய சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவருக்கு எரிச்சலூட்டின. ஹிட்லர் அவர் தொடங்கியிருந்த நன் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டாரென்றால் பிரிட்டிஷ் அரசின் முரட்டுப் பிடிவாதம் அந்த முட்டுக்கட்டையை அகற்றவே வழியில்லாமல் செய்துவிட்டது. டே நினைவு கூர்ந்தார்:

''மந்திரிசபை ராஜிநாமா செய்த அன்று அவரைச் சந்தித்துப் பெட்டிச் சாவிகளை வாங்கிக்கொள்ளச் சென்றேன். அவர் அறையில் மந்திரிகள் பலரும் குழுமி இருந்தனர். பக்கத்து அறைக்கு என்னை அழைத்துச் சென்று, நான் இளநிலை அதிகாரி என்பதால் என்னிடம் மனம்விட்டுப் பேசலாம் என்று சொன்னவர், இந்தியாவைப் பொறுத்தமட்டில் பிரிட்டிஷ் அரசு கடைப்பிடிக்கும் கொள்கைகளைச் சரமாரியாகத் தாக்கத் தொடங்கினார். அவர் ரொம்பக் கோபமாக இருந்தார் என்பதும் அளப்பரிய ஏமாற்றம் அடைந்திருந்தார் என்பதும் தெளிவாகத் தெரிந்தது. மலைபோல் குவிந்திருந்த வேலைகளைத் தாம் செய்வதற்குத் தயாராக இருந்த போதிலும் அதைச் செய்ய விடாமல் இசைவிப்பட்டிருந்ததால் அவர் ஆத்திரம் அடைந்திருந்தார். யுத்தம் அவரை விரக்தி அடையச் செய்திருந்தது. அது சற்றும் சம்பந்தமில்லாத ஒரு குறுக்கீடாக அவருக்குத் தோன்றியிருக்க வேண்டும். இவை ஒருபுறமிருந்தாலும், ஓர் அதிகாரி என்ற முறையில் நான் செய்து வந்த காரியங்களுக்காக, அளித்த ஒத்துழைப்புக்காக எனக்கு மிக நேர்த்தியான முறையில் நன்றி கூறினார்.''

டேயிடம் மனம் திறந்து பேசியது ஸி. ஆருக்கு நன்மையே செய்திருக்க வேண்டும். வெளியேறும் மந்திரிகள் ஸி. ஆருடனும் கவர்னருடனும் புகைப்படம் எடுத்துக் கொள்ள அணிவகுத்த போது ஓய்வுபெறும் பிரதம மந்திரி எர்ஸ்கைனிடம் சொன்னார்: ''இதை விடப் பெரிய பூசலும் இருக்க முடியாது. இதைவிட உயர்ந்த நட்பும் இருக்க முடியாது!'' ஹிந்து நாளிதழின் நிருபர் ஒருவர் ராஜாஜி தமது ஓட்டுனர், எழுத்தர் மற்றும் கடைநிலை ஊழியர்கள் சிலருக்குச் சான்றிதழ்கள் எழுதித் தருவதைக் கண்டார். கோப்புகளும் தபால் பெட்டிகளும் ஒப்படைக்கப்பட்டு விடவே அவரது மேஜை சுத்தமாகத் துடைக்கப்பட்டுப் பளிச்சென்று விளங்கியதைப் பார்த்தார்.

(தொடரும்)

தமிழாக்கம்: சீதா ரவி

நான்கு மடங்குக் கூட்டம்



ஒரு சமயம் ஒரு நிருபர், அறிஞர் சர்ச்சிலிடம், ''நீங்கள் எங்கு பேசினாலும் ஏகப்பட்ட கூட்டம் வருகிறதே! மக்கள் உங்களிடத்திலே எத்தனை அன்பும் அபிமானமும் வைத்திருக்கிறார்கள், பார்த்தீர்களா?'' என்று சொன்னார். அதற்கு சர்ச்சில், ''என்னைத் தூக்கில் போடுவதாக அறிவிப்பை வெளியிடுங்கள். இதைப் போல் நான்கு மடங்கு கூட்டம் வரும்'' என்றார்.

— லட்சுமி சிவம்.

இப்படியும் ஓர் இந்தித் திணிப்பா?

அண்மையில் தொழிற்கல்வி படித்த என்னுடைய நண்பர்கள் மத்திய அரசுக்குச் சொந்தமான 'மாருதி' கார் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு இண்டர்வியூவுக்காக (நேரடித் தேர்வு + செய்முறைத் தேர்வு) டெல்லி சென்று இருந்தார்கள். அதில் முதல் கேள்வியாக "உங்களுக்கு இந்தி எழுதப் படிக்கத் தெரியுமா?" என்று கேட்டிருக்கிறார்கள். "தெரியாது!" என்று சொல்லவே, "அப்படியானால் உங்களுக்கு இங்கு வேலை இல்லை!" என்று சொல்லித் திருப்பி அனுப்பி விட்டார்கள். இண்டர்வியூ கார்டில் அதுபற்றிய எவ்விதத் தகவலும் இல்லை. தொழிற்கல்விக்கு மொழி தேவையில்லை, ப்ளூ பிரிண்ட் பார்த்து வேலை செய்தால் போதும்; தேர்வில் வெற்றிபெற்றால் போக்குவரத்துச் செலவுகளைக் கொடுப்பதாக மட்டும்தான் எழுதப்பட்டிருந்தது. தேர்வில் வெற்றி பெற்றிடுவோம் என்ற நம்பிக்கையோடு சென்ற என் நண்பர்களுக்கு ரூ: 600 தண்டச் செலவானதுதான் மிச்சம். 'இந்தி படிக்கத் தெரிந்திருந்தால்தான் உங்களுக்கு வேலை உண்டு' என்று மத்திய அரசு இந்தியைத் திணிக்க விரும்புகிறதா? 'தமிழ்நாட்டு மக்கள் இந்தி படிக்கவில்லையெனில் இந்தியாவில் எதிர்காலமே இல்லை என்று சொல்லுகிறதா? புரியவில்லை.

— ஏ. ஜி. அசோக்ராஜா, சென்னை—4.

எங்களூர்ப் பெருமை!

பஸ்ஸுக்குள் ஒருவர்: சார், நான் வெளியூர்க்காரன், பஸ் மல்லசமுத்திரம் வந்தவுடன் கொஞ்சம் சொல்லுங்கள்.

பஸ்ஸுக்குள் மற்றவர்: நீங்கள் இதை யாரிடமும் கேட்க வேண்டியதில்லை சார். உங்கள் மூக்கைத் துளைப்பதுபோல் ஒரு துர்நாற்றம் வரும். அதில் நீங்கள் சிறிது மயக்கமுறுவீர்கள். பிறகு கண்விழித்துப் பார்த்தால் பஸ் நிற்கும். உடனே இறங்கி விடுங்கள்; அதுவே மல்லசமுத்திரம்!

மேற்கண்ட ஜோக் எங்கள் ஊர்ப் பாதைகளின் தனிச் சிறப்பை எடுத்துக் காட்டும். (வழி வையப்பமலை) பல பகுதிகளிலிருந்து வரும் 'கூவம்' நதிகள் இங்கு ஒன்றாகக் கலக்கின்றன. இதன் நன்மை என்னவென்றால் (தீமை எனச் சொன்னால் எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து போர்டார் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்!) இப்பாதையின் அருகாமையில் குடியிருப்பவர்கள், கண்டிப்பாகச் சொர்க்கம் செல்வார்கள் (நரகத்தை இங்கேயே அனுபவித்து விடுகிறார்கள்!). வெளியூரிலிருந்து வருபவர்களின் மனத்தில் மல்லசமுத்திரம் நீங்காப் புகழை நிறுத்துகிறது. இப்படிப்பட்ட எங்கள் ஊரின் பெருமையை அனைவரும் அறிவீர்களாக!

— ஆர். மணிவண்ணன், மல்லசமுத்திரம்.

ஏன் இந்த ஓர வஞ்சனை?

தமிழகத்தில் மட்டுமே இந்த ஓரவஞ்சனை. எல்லாக் கட்சி சார்பிலும் உள்ளவர்களிடத்திலிருந்து வாங்கும் நூலகவரி வசூல் தொகையிலிருந்து, நூலகங்களுக்குச் சஞ்சிகைகள், தினசரிகள் வாங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. ஆளும் கட்சிச் சார்புடைய நாலாந்தரமான இதழ்கள் கூட நூலகங்களுக்கு வாங்கப்படுகின்றன. நடுநிலையான எந்த அரசியல் சார்புமற்ற இதழ்கள் ('கல்கி' கூட பெருநகர நூலகங்களில் மட்டுமே வாங்கப்படுகிறது.) அறவே வாங்கப்படாத அவல நிலையை எண்ணி ஒவ்வொரு தமிழனும் வெட்கப்பட வேண்டும். ஆட்சி ஒரு கட்சியின் சார்புடையதாக இருக்கலாம். அதற்கு வரி செலுத்துபவர்கள் எல்லாத் தரப்பினருமே என்பது ஆளுபவர்களுக்கு அடிக்கடி மறந்து விடுகிறது. ஞாபகப்படுத்தினாலாவது தெரிந்து கொள்வார்களா? பார்ப்போம்.

— து. ரவி, திருப்புத்தூர் (ப.மு.).

வருத்தத்தால் வந்த புகார்!

கடந்த 24.11.85 கல்கி இதழில் 'வாசகர் குமுறல்' பகுதியில் 'நாகரிகமற்ற நடத்துனர்' என்ற தலைப்பிட்டு என்னைப் பற்றிச் சில தவறான தகவல்கள் பெயரில்லாமல் பிரசுரம் ஆகியுள்ளன. 18.10.85 அன்று நான் பணியில் இருந்தேன். அவ்வாசகர் குறிப்பிட்டுள்ளபடி எவ்விதச் சம்பவமும் நடக்கவில்லை.

கணவன் — மனைவி இருவரையும் ஒரே இருக்கையில் அமர வைக்கவில்லை என்ற வருத்தத்தில் அவ்வாறு வேண்டுமென்றே பொய்ப்புகார் கூறியிருக்கிறார், அந்த வாசகர்.

— வி. அப்புசாமி (கண்டக்டர்), சேலம்—7.

வாசகர் குமுறல்



* செ. அன்பு மதியழகன், கொப்பம்பட்டி.

? பாக்யராஜ் போன்றவர்களின் சந்தேகங்களைத் தீர்க்க, கேள்வி கேட்பவர்களின் முழு விலாசத்தையும் வெளியிட்டால் என்ன?

! சம்பந்தப்பட்ட வாசகர்கள், சம்பந்தப்பட்டவர்களிடம் உதை வாங்க உங்கள் யோசனையை விடவும் சிறந்த யோசனை இருக்க முடியாது. அவசியம்தானா?

* சீனு சங்கர், திருப்புன்கூர்.

? கட்சிப் பாகுபாடின்றி எல்லோருக்கும் சாராய லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் வி. வி. சாமிநாதன் கூறியுள்ளாரே?

! குடிப்பதற்கான லைசென்ஸ்களாக இருக்கும்! விற்பதற்கான லைசென்ஸ்களை அப்படிக் கொடுக்க கட்சிக்காரர்களும் சரி, ஆட்சியில் உள்ளவர்களும் சரி; ஏமாந்த சோணகிரிகள் அல்ல! கட்சி பேசாத இடத்தில் காசு பேசும்.

* ஹெச். கே. நாசர், தோப்புத்துறை.

? அண்மையில் உங்கள் மனத்தை உலுக்கிய நிகழ்ச்சி என்ன?

! செய்யாறு இடைத் தேர்தலின் போது வோட்டுச் சேகரிக்கச் சென்ற அமைச்சர் சௌந்தரராஜனை, வரதன் என்ற தி. மு. க. அனுதாபி எதிர்த்துக் கேள்வி கேட்டதாக

ஏனுங்க, நம் தமிழ் நாடு எங்கே போகிறது?

* செல்வ பாரதி, ஈரோடு—1.*

? தலைவனுக்காகத் தொண்டன் தீக்குளித்தால் அஞ்சலிப்பு. வேலை கிடைக்காமல் விரக்தியால் தீக்குளிக்க முயன்றால் கைது! ஏனுங்க! நம்ம தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறதா?

! சத்தியமா இல்லீங்க!

* குமரி ஜெய், சென்னை—5.

? ஒவ்வொரு துறையினரும் தமிழக அரசுக்குப் பிரச்னையாக இருக்கிறார்களே?

! இன்றைய தமிழக அரசுதான் ஒவ்வொரு துறையினருக்கும் பிரச்னையாக இருக்கிறது என்றும் கருதலாமே!

வும், இதனால் கோபமடைந்து அமைச்சரும் பட்டுக்கோட்டைத் தொகுதி எம். எல். ஏ. பி. என். ராமச்சந்திரனும் அவரைத் தாக்கியதாகவும் அதனால் வரதன் காயமுற்று சிகிச்சை பெற வேண்டியிருந்ததாகவும் முதல் நாள் புகைப்படத்துடன் ஒரு பத்திரிகைச் செய்தி. வரதன் அமைச்சரைக் குடிபோதையில் தடி கொண்டு தாக்க முயன்றதாகவும் அதனால் அவர் மீது கொலை செய்ய முயன்றதாக வழக்குப் பதிவாகியிருப்பதாகவும், அடுத்த நாள் வேறொரு பத்திரிகைச் செய்தி.

உண்மை என்ன என்பது அக்கூட்டத்துக்கு வந்திருந்த செய்யாறு தொகுதி மக்களின் மன சாட்சிக்கு நன்கு தெரியும் என்றாலும் பத்திரிகைச் செய்திகளை மட்டுமே படிக்கும் நமக்கு முதலில் வந்த செய்தியைத் தான் நம்பத் தோன்றுகிறது. அவ்வாறெனில் அமைச்சர்களை எதிர்த்துக் கேள்வி கேட்கும் துணிவுள்ள ஒரு பிரஜைக்கு எப்படிப்பட்ட வரவேற்பு! ஆடித்தான் போய்விட்டேன்!

* செல்லூரர் கணேசன், காரைக்கால்.

? 'தைரியம் இருந்தால் வேலையை ராஜினாமா செய்துவிட்டு வந்து ஆசிரியர்கள் போராட்டம் நடத்தட்டும்' என்று ஆசிரியர்கள் போராட்டத்தின்போது நிதியமைச்சர் நெடுஞ்செழியன் பேசினாரே?

! தைரியம் இருந்திருந்தால் நெடுஞ்செழியனும் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு இதுபோல் வார்த்தை ஜாலம் செய்திருக்கலாமே!

* எஸ். ஆர். லதா, அய்யம்பேட்டை.

? 'முந்நூறுக்கும் மேற்பட்ட கிளர்ச்சிகளைச் சந்தித்த ஆட்சி இது' என்று ஓர் அமைச்சர் கூறுரைத்திருக்கிறாரே... இது பெருமைப்படக் கூடிய விஷயமா என்ன?

! இப்படியே போனால்... நாளை, திறக்கப்பட்ட சாராயக் கடைகளின் எண்ணிக்கை கூட சாதனைப் பட்டியலில் சேர்ந்துவிடும்!

* மணிகண்ணன், ஈரோடு—1.

? பாலசந்தரின் சின்ன வீடு, பாரதி ராஜாவின் சின்னவீடு, பாக்யராஜின் சின்னவீடு... இந்த மூன்றிலும் எந்தச் சின்ன வீடு அழகாலும் நடிப்பாலும் தங்களைக் கவர்ந்தது?

! அழகில் இரண்டாவது. நடிப்பில் முதலாவது!

* என். செந்தில்குமார், மயிலாடுதுறை.

? 'ஒரு தங்க மீனுக்கான தூண்டிலில், தவளை பிடித்துக் கொண்டிருக்கிறோம்' என்று சினிமாவைப் பற்றி வைரமுத்து கூறியிருக்கிறாரே?

! அருமையான சுயவிமர்சனம்!

* பூங்குழலி, கெங்கவல்லி.

? ராஜாஜியின் பெயர் சூட்ட ஏற்ற மாவட்டம் சேலமா, தர்மபுரியா?

! காந்திஜி, ராஜாஜி, காமராஜர் போன்றவர்களின் உயிர் மூச்சாக விளங்கிய மது விலக்குக் கொள்கையைக் காற்றில் பறக்க விட்டுவிட்ட பிறகு, ராஜாஜியின் அறிவுரைகளையெல்லாம் புறக்கணிக்கிற ஒரு ஆட்சி ஒரு மாவட்டத்துக்கு அவர் பெயரைச் சூட்ட அருகதையற்றதாகிறது.

* டி. தாழை பிரபு, குடியாத்தம்.

? பட்டணத்துக் காதலுக்கும், பட்டிக் காட்டுக் காதலுக்கும் என்ன வித்தியாசம்?

! பட்டிக்காட்டில் காதலிக்க 'தில்' வேண்டும்; ரிஸ்க் ஜாஸ்தி!

* தேவி தெய்வநாயகம், கல்லிடைக்குறிச்சி.

? தனக்குத் திருமணம் ஆகாவிட்டாலும் கூட தன்னைத் திருமதி என்றே அடைமொழியிட்டு அழைக்க வேண்டும் என்று ஆந்திர கவர்னர் குமுத்பென் ஜோஷி கூறியுள்ளாரே, இது சரியா?

! திருமணமானவராக இருந்தாலும் சரி, ஆகாதவராக இருந்தாலும் சரி, ஆண்கள் மிஸ்டர் அல்லது திரு என்று பொதுப்படையாகத்தானே அழைக்கப்படுகிறார்கள்! ஆக பெண்களில் மட்டும் திருமணம் ஆனவர், ஆகாதவர் என்ற பாகுபாடு எதற்கு என்று சில முற்போக்குப் பெண்கள் கருதுகிறார்கள். குமுத் பென்ஜோஷி எந்தக் காரணத்துக்காக சொன்னாரோ, என்னவோ, அவர் உணர்வுகளை மதிப்போமே.

* ஆங்கரை ஆனந் , ஆங்கரை.

? வரதட்சணைக் கொடுமைக்காகச் சில இடங்களில் பிறந்த பெண் குழந்தைகளைப் பெற்றோர்களே கொலை செய்து வரும் கொடுமையைப் படித்தீர்களா? படிக்கும்போது உம் மனநிலை எப்படி இருந்தது?

! மனம் ரணப்பட்டுப் போனது. பெண் குழந்தைகளுக்குச் சிறிதும் பாதுகாப்பில்லாத—எதிர்கால உத்தரவாதமில்லாத இந்தச் சமூக அமைப்பின் கயமைத்தனத்தை அடித்து நொறுக்கிவிட்டு, ஒரு புதிய அமைப்பை நிர்மாணம் செய்யாத வரையில் இதுபோன்ற கொடுமைகளுக்கெல்லாம் விமோசனமே இல்லை.

* ரூ. 10 பரிசு பெறுபவர்:

செல்வபாரதி,
17, மாதவ கிருஷ்ண வீதி,
ஈரோடு—638 001.

பரதமாடும் பாதிரியார்

ராமனையும் கிருஷ்ணனையும், சீதையையும் ராதையையுமே பரத நாட்டிய நிகழ்ச்சிகளில் பார்த்துப் பழகிவிட்ட கண்களுக்கு, கலா க்ஷேத்திரா குழுவினர் வழங்கிய புத்த அவதார நாட்டிய நாடகமும் நடராஜ், சகுந்தலா குழுவினர் அரங்கேற்றிய கிறிஸ்துவ சன்மார்க்கக் கதைகளும் வித்தியாசமாகத் தோன்றின. இப்போதோ, கத்தோலிக்க கிறிஸ்துவ மதகுரு ஃபாதர் பர்போஸா மேடையில் பரத நாட்டிய உடையும் நகைகளும் அணிந்து முகத்தில் அரிதாரத்துடன் நாட்டியம் செய்கிறார்; அபிநயிக்கிறார்; அடவுகளையும் தீர்மானங்களையும் அளவோடு தருகிறார்.

இந்து மதத்துக்கே உரிய கலை எப்படி ஒரு கிறிஸ்தவப் பாதிரியைக் கவர்ந்தது? பழங் கதையைப் பார்ப்போம்.

கால் நூற்றாண்டுக்கு முன்பு... உடுப்பி அருகே ஒரு கிராமத்தில் ஒரு சிறுவன் யக்ஷகானத்தை ரஸிக்கிறான்; அதன் தாளத்திற்கு ஏற்ப அவன் கால்கள் அசைகின்றன.

சிறுவன் வாலிபனாகிறான். கிறிஸ்துவ மத போதகர் பள்ளிக்குச் சென்று பாதிரி பிரான்ஸிஸ் பர்போஸா ஆகிறான்.

ஆனாலும் நாட்டிய ஆசை விடவில்லை. ஃபாதர் பர்போஸா குரு மத்யாஸ்தாவிடம் ஆரம்பப் பாடம் பெறுகிறார். 1979ல் பரோடா சர்வ கலாசாலையில் நாட்டிய சாஸ்திர எம். ஏ. பட்டம் பெறுகிறார். அங்கு பேராசிரியர் சந்திரசேகரர் அளித்த அளவற்ற உற்சாகத்தையும் உதவியையும் இப்போதும் பெருமையுடன் குறிப்பிடுகிறார்.

ஃபாதர் பர்போஸாவுக்குத் தாய் மொழி கொங்கணி. கன்னடம், தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகியவையும் தெரியும். தமிழில் சாகித்யம் இயற்றும் அளவுக்குப் பாண்டித்தியம் உண்டு. சிலப்பதிகாரத்தில் ஆடற்கலை பற்றி ஆய்வு புரிந்து வருகிறார்.

"இந்துசமய அடிப்படையதான பரதக்கலை கிறிஸ்துவ சப்ஜக்டிற்கு எப்படி ஒத்து வருகிறது?"

"பரதநாட்டியம் ஓர் ஆலயக் கலை. பக்தியைப் பரப்பும் சாதனம். ஏசுவின் பெருமை கூற அந்த 'மீடியத்தை'ப் பயன்படுத்துகிறேன்."

"இந்த யோசனை எப்படித் தோன்றியது?"

"கிறிஸ்துவ ஆகமத்தில் நாட்டியம் பற்றி பன்னிரண்டு இடங்களில் கூறப்படுகிறது. மேலே நாட்டுச் சங்கீதமும், கருவிகளும், ஏசுவைத் தோத்திரம் செய்யப் பயன்பட்டன. ஆனால் இந்திய மண்ணிற்கு ஏற்ற கருவி தேவை என்று எனக்குத் தோன்றியது. அழகிய நுண்கலையான பரதநாட்டியத்தைத் தேர்ந்தெடுத்தேன். அதனைக் கருவியாகக் கொண்டு கர்த்தரின் கருணைப் பிரபாவத்தை ஜனங்களுக்கு எளிதாகத் தெரிவிக்க முடிகிறது!"

"சிருங்காரம் மிகுந்த கலையை ஒரு பாதிரி கையாளுவது சரியா?"

"பரதநாட்டியத்தில், சிருங்காரமும் பக்தியின் பால்பட்டதுதானே! ஒரு வழிபாட்டு முறைதானே! அதனால்தான் நான் ஏசுவின் பெருமையைக் கூற பரதத்தைத் தேர்ந்தெடுத்தேன்."

"சம்பிரதாயமான முத்திரைகள் இதற்குப் பயன்படாது அல்லவா? எப்படிச் சமாளித்தீர்கள்?"

"நன்கு ஆராய்ச்சி புரிந்து புதிய ஹஸ்தங்கள் கண்டுபிடித்தேன். உதாரணமாக சர்ச், அன்னை மேரி, சிலுவை, ஏசு... இப்பணியில் டாக்டர் சந்திரசேகர் எனக்குப் பேருதவி புரிந்துள்ளார்."

"கிறிஸ்துவ சர்ச் மேலிடம் உங்களை ஆதரிக்கிறதா?"

"ஆரம்பத்தில் எதிர்ப்பு இருந்தது. இந்த மீடியத்தை நான் பயன்படுத்தியதால் ஆசாரமான கிறிஸ்துவ குருமார் சங்கம் கோபப்பட்டது. இப்போது அது குறைந்து இந்தப் பிரசார சாதனத்தை அவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். நாட்டியம் பக்திக் கலை என்பதை உணரத் தொடங்கி விட்டார்கள்."

டாக்டர் பட்டத்திற்காக, கிறிஸ்துவ மதமும், இந்திய நாட்டியமும் (குறிப்பாகத் தென்னகம்) என்பது பற்றி ஆய்வு புரிந்து வரும் ஃபாதர் பர்போஸா "கண்ணதாசனின் ஏசு பாடல்கள் மிகச் சிறந்த பொக்கிஷம்" என்கிறார்.

– சுபஸ்ரீ.





"இருந்தால் சந்தோஷம் இறந்தால் ரொம்ப சந்தோஷம்!"



அமரர் கல்கி அவர்கள் "கர்நாடகம்" என்ற புனைபெயரில் ஆனந்த விகடனில் எழுதிய விமர்சனக் கட்டுரைகளிலிருந்து சில பகுதிகள்...

ஐம்பதாண்டுகளாகி விட்டன எனினும் இன்றைக்கும் அந்த நகைச்சுவை புதுமையாகத்தான் இருக்கிறது!

கதர் சாரீரம்

செம்மங்குடியின் சாரீரம் 'கதர் சாரீரம்' தான். கதர் வெளித் தோற்றத்துக்குக் கரடு முரடாய்க் காண்கிறது. ஆனால் அணிந்து கொண்டாலோ மிருதுவாயிருக்கிறது. மேலும் பழகப் பழக அதனுடைய மிருதுத் தன்மை அதிகமாகிறது. இதுபோலத்தான் செம்மங்குடியின் சாரீரமும். முதல் எடுப்பில் ஏதோ கரகரத்த சாரீரம் மாதிரி தோன்றுகிறது. ஆனால் ரஸிகர்கள் அந்தக் கரகரப்புக்குள் ஓர் இனிமையைக் காண்கிறார்கள். மேலே பாடப்பாட, கரகரப்பு அடியோடு மறைந்து இனிமைதான் மேலோங்கி நிற்கிறது.

வாசிக்காமலிருந்த ஜோர்!

இந்த இடத்தில் மிருதங்கம் வேணுநாயக்கரைப் பற்றியும் ஒரு கெத்து — இல்லை ஒரு சாப்புக் கொடுக்கலாம். இந்த நாயக்கரின் மீது எனக்கு வெகுநாளாக நிகா உண்டு. இப்போதுதான் பேர்வழி அகப்பட்டுக் கொண்டார். அன்று அவர் மிருதங்கம் வாசித்தது மிகவும் ஜோராயிருந்தது. ஆனால் சில இடங்களில் வாசிக்காமலிருந்தது அதைவிட ஜோராயிருந்தது. முக்கியமாக 'என்று தணியும்' என்னும் பாட்டின்போது வேணுநாயக்கருடைய விரல்கள் மிருதங்கத்தைச் சுகமாகத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் 'மிருதங்கக்காரர்களுக்குள்ளே இவர் ஒரு ரஸிகர்' என்று தீர்மானித்தேன்...

தமிழிசைக்கு ஒரு வக்கீல்...

முசிறி சுப்பிரமணிய அய்யரின் 'நகுமோமு' கீர்த்தனத்தின் இனிமையை எல்லாருந்தான் அனுபவிக்கிறார்கள். ஆனாலும் அவர் "ககன" என்று தொடங்கும்போது நம்மை அப்படியே ஆகாயத்துக்குத் தூக்கிக் கொண்டு போகிறாரே, அதை 'ககனம்' என்றால், 'ஆகாயம்' என்று அர்த்தம் தெரிந்தவர்கள் அனுபவிப்பது போல் மற்றவர்கள் அனுபவிக்க முடியுமா?

நமது சங்கீதத்தில் உள்ள இந்தக் குறை எப்போது நீங்குகிறதோ, அப்போது அந்த வித்தையின் செல்வாக்கு பன்மடங்கு அதிகமாகும்.

சினிமாவில் நாலாந்தர, ஐந்தாந்தர சங்கீதத்தைக் கேட்பதற்காக ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடுவதேன்? பிரசித்தி பெற்ற சங்கீத வித்வானின் கச்சேரிக்கும் கூடச் சாதாரணமாய் 200, 300 பேருக்கு மேல் ஏன் வருவதில்லை? ஏனென்றால் அங்கே ஜனங்களுக்குத் தெரிந்த தமிழில் பாடப்பெறுகின்றன. கச்சேரிகளில் அர்த்தமாகாத பாஷையில் பாடுகிறார்கள்.

செயிற்றிய விவகாரம்

சங்கீத மகாநாட்டின் அக்கிராசனர் வித்வான் கே. பொன்னையா பிள்ளை அவர்களின் பிரசங்கத்தைப் படிக்கக் கேட்கும் பாக்கியம் கிடைத்தது.

'......அக்காலத்தில் இசைநூல்கள் பல இருந்தனவென்றும், பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், முறுவல், ஜயந்தம், செயிற்றியம், குணநூல், இசை நுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, மதிவாணர் நாடகத் தமிழ்நூல் முதலியவைகள் இருந்து இறந்தனவென்றும்' ஸ்ரீமான் பிள்ளையவர்கள் தெரிவித்தபோது மிகவும் சந்தோஷமாயிருந்தது. இருந்ததற்காகச் சந்தோஷமா, இறந்ததற்காகச் சந்தோஷமா என்று தயவு செய்து கேட்டு விடாதீர்கள். அது விஷயத்தில் எனக்கே சந்தேகமாயிருக்கிறது. ஒரு விதத்தில் இறந்து போனதே நல்லதுதான். ஏனெனில் சங்கீதக் கலை வளர்ச்சிக்கு அவ்வளவு நூல்களும் அவ்வளவு முட்டுக் கட்டைகளாக அமைதல் கூடுமல்லவா? சங்கீதத்தைப் பற்றி நம் போன்றவர்கள் சொன்னால் "நீர் செயிற்றியம் பார்த்ததுண்டா?" என்று பண்டிதர்கள் வாயை அடக்கிவிடுவார்களே!

தொகுப்பு: **யெஸ்பால்.**


Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani   Editor: K. Rajendran


BRIEFS
new YOU PANTIES
VESTS
CASUALS
KIDSWEAR
உடலோடு இணைந்து உள்ளம் கவர்ந்து
எழில் நிறைந்து... ஈடிணையற்றது...
டான்டெக்ஸ்®
TTK தயாரிப்பு

REGISTERED No. M 4292
Registered as a Newspaper in Srilanka

மங்கையின் எழிலின் நிறைவிற்கு
மணங்கவரும் பட்டுக்கு இணையுண்டோ!



மங்கையின் மனதிற்கு மகிழ்ச்சியூட்டுவதில் பட்டுப் புடவைகளுக்கு ஈடேதுமில்லை. லக்ஷ்மி சில்க் ஹவுஸிற்கு விஜயம் செய்தாலன்றி உங்கள் பட்டுப் புடவைகளின் தேர்வு நிறைவு பெறுவதில்லை. வாருங்கள், 30,000க்கும் மேலான அரிய படைப்புகளிலிருந்து தேர்ந்தெடுங்கள்.

Market Movers/615/85

லக்ஷ்மி சில்க் ஹவுஸ்
மாடியில்
பனகல் பார்க் எதிரில்,
தி. நகர், சென்னை 600 017.
உரிமையாளர்: லக்ஷ்மி சில்க் ஹவுஸ்
(சென்னை) & கோ.